உ

சிவமயம்.

ஐந்தாவது

# அத்வைத தூஷணபரிகாரம்.

# V

# ADVAITA DUSHNA PARIHARAM.

இஃது

"ஓர் இந்து"

என்பவரால் எழுதப்பட்டு,

சென்னை :

மதராசு ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1894

இதன்விலை அணா 8.

உ

சிவமயம்.

# அத்வைத தூஷண பரிகாரம்.

திருநெல்வேலிஜில்லா தூத்துக்குடியில் "சைவப்பிரகாசசமாஜ"த்தார், "மாயாவாதி மதக்குழப்பம்" என நான்குபக்கங்கொண்ட ஓர் சிறுபத்திரம் விஜய௵ ஆனி௴ 30உ பிரசுரித் திருக்கின்றார்கள். அதின்கீழ் ம-ள-ள-ஸ்ரீ சோமசுந்தரநாயகர் அதை எழுதியதாய் எழுதப்பட்டிருந்தது. அதிற்பேசிய விஷயம் அத்துவித மததூஷணையைத் தவிரப் பிறிதொன்றுமில்லை. அது கற்றவரும் மற்றவரும் பரிகசிக்கத் தக்க தொன்றாயினும் வேதமுதலியவற்றின் பொருள்களைத்தூஷித்து ஆக்ஷேபித்திருப்பதால் அதற்குச்சமாதானஞ் சொல்லவேண்டுவ தத்தியாவசியகமாயிற்று. சோ. நாயகர் அத்வைதமதத்தை மாயாவாதம் என்று சொல்லுகிறார். அது தவறென்பதற்கும், அத்வைதிகள் மாயாவாதிக ளல்லவென்பதற்கும், இவர் மதத்தினரோ மாயாவாதிகள் என்பதற்கும் வேண்டியமட்டும் நியாயமழைகளைச் சொரிந்து, நந்தன௵ புரட்டாசி௴ 22உ ப்ரம்மவித்தியாவில் முடிவாக எழுதியிருக்க, அதைப் பூர்வபக்ஷஞ்செய்து, மேல் தமது கட்சியைத் தாபித்துக் கொள்வதைவிட்டு, ஒரு நியாயமுமில்லாமல் மீண்டும் அத்வைதிகளை மாயாவாதிகள் என்று வரைவது பித்தர் செய்கையேயன்றி மற்றவர் செய்கையன்று. சோ. நாயகர் வெட்கத்துக்கஞ்சி அவ்வாறுசொல்லினும் ஷை சமாஜத்தாரும் அதற்கிணங்கியது சிலகாலமாய்ப்பத்திரிகையில் நடந்த வாதவிஷயத்தை அறியாமைபோலும்! அறிந்திருந்தால் இந்த வாதத்தில் தலைகொடுக்கமாட்டார்களென்றே நினைக்கின்றோம். இந்தச்சோ. நாயகர் எம்மிடத்தில் மாயாவாத விஷயமாகமாத்திரமன்று, இன்னும்பலவகையிலும் தோல்வியடைந்ததற்கும், இனியிவ்வாதத்திற்பிரவேசிப்பதில்லையென முடிவுரைகூறியெழுதியதற்கும்பத்திரிகைகள் சான்றுசொல்லவும் அவைகளையெல்லாம் மறையவைத்து, தூத்துக்குடியிற்புகுந்து, ஷை சமாஜத்தாருக்குச் சிறுபத்திரமெழுதிக்கொடுத்து, அதிலும் தோல்விப்பத்திர மெழுதிக்கொடுத்து, அதிலும் நம்மாலும் பிறராலும் கண்டிக்கப்பட்ட விஷயங்களையே யெழுதிக்கொடுத்து, தாம் தோல்வித்தானத்தி னிற்பதோடு அச்சமாஜத்தாரையும் கூடத் துணையாகத் தோல்வித்தானத்திற் கிலக்காகவைத்தது படிற்றொழுக்கத்தவர் செய்கையாம்; மற்றையர் செய்கையன்றாம். ஷை சமாஜத்தார், தமது மத சித்தாந்தமாய் ஏதேனும் எழுதிக்கொண்டு போவதைவிட்டு, கலகஞ்செய்தலையே வடிவாகப்பெற்ற சோ. நாயக்கருடைய இணங்காப் புத்தியைக்கேட்டு, அத்துவிதிகளுடன் வலிய

வாதஞ்செய்வதற்காக எழுந்து, மெய்யாகவன்றிப் பொய்ப்பத்திர
மெழுதிவிடுவது சமாஜத்தார்க்கு நியாயமுமன்று; அழகுமன்று. சோ.
நாய்க்கருடன் நாம் நேரில் வாதப்போர்செய்ய அவரிடங்கொடுக்கின்
றனரில்லை. அவர் முதுகுகாட்டி யோடுகின்றார் ; ஒளிகின்றார்; முடி
வுளாகூறிப் பதுங்குகின்றார்; பதில் வந்தவற்றையெல்லாம் வாராமை
போல் காட்டி எழுதுகின்றார் ; அங்ஙனம் பேசுகின்றார் ; பிரசங்கிக்
கின்றார். எந்தெந்த ஆக்ஷேபங்கட்குச் சமாதானஞ் சொல்லுகின்
றோமோ, அந்தந்தச் சமாதானங்களைக் கவனிக்காமல் பின்னும் ஆ
க்ஷேபமாகவே யெழுதுகின்றார். இப்படிப்பட்ட குணம் சோ. நாய்
க்கரிடத்தில் நிறைந்திருப்பதால் அவரிடத்தில் எவ்வளவுபேசினாலும்
எவ்வளவு வெற்றிபெற்றாலும் பயனில்லாம லிருக்கின்றது. நாம்
றாறுவிஷயங்கட்கு மறுப்பெழுதிச் சமாதானஞ்சொன்னால் அவற்றி
லிரண்டொன்றைத் தப்பும் தவறுமாய்ச்சொல்லி விருதுபேசுகின்றார்;
எதிரிகளுடைய பூர்வபக்ஷத்தை அவர்களே கண்டிக்க, அப்பூர்வபக்ஷ
த்தை அவர்கள் சித்தாந்தமாய்ச் சொல்வதுபோல் அபிநயித்துக்
சொல்லி யிகழ்ந்து, அதனால் வெற்றிபெற்றதுபோல் காட்டி இறு
மாப்படைகின்றார். அவருடைய செய்கை அவ்வா றிருப்பதால்
அவரிடத்தில் வாதுபுரிய வெறுப்பாயிருக்கின்றது. இங்ஙனமாக, ஷை
சமாஜத்தார் மலையிலக்குப்போல் வாய்த்தது நமக்கு மிகச்சந்தோஷம்.
இச்சமாஜத்தார் அவரைப்போலிருக்க முடியாது. சபையில் பலபே
ரிருப்பதால் ஒருவரில்லாவிட்டாலும் ஒருவர் பதில்சொல்லியே தீர
வேண்டுமென வர்திப்பர். ஆதலால் எப்படியும் இவ்விவாதம் நீண்டு
நடக்குமென்று நினைக்கின்றோம். ஷை சமாஜத்தார் சோம. நாய்க்க
ரைப்போல் ஆங்கொன்று ஈங்கொன்று ஆபாசமாய்ப் பேசிப் பயனில்
லா வெற்றி கூறமாட்டார்கள். நாம்பேசும் ஒவ்வொரு விஷயத்தையும்
வாதித்துப் பதில்கொடுப்பார்கள். இவ்வாதம் ஐந்துவருஷமாக நடந்
துவருகின்றதென்பதைச் சமாஜத்தார் அறிந்துகொள்ளக் கடவர்.
இவ்வாதத்தை ஷை சமாஜத்தார் இப்போது தலைமேல் தூக்கிவைத்
துக்கொண்டமையால் இனிக் கொஞ்சத்தில் இறக்கமுடியாது. பழை
ய வாதங்களையெல்லாம் தொடர்ந்தே இதற்குப் பதில்சொல்லக் கட
மைப் பட்டிருக்கின்றார்கள். சோம. நாய்க்கர் ஐந்துவருஷகாலமாய்
அத்துவிதிகளிடத்தில் தோல்வியடைந்து அவமானமாய் ஒளிந்திருக்
கின்றமையும், எதிர் வாதிகளுடன் நாணயமாயும் நாகரீகமாயும் மரி
யாதையாயும் பேசும் சுபாவமின்றி அவைகளுக்குப் மாறாகப்பேசி,
கிரிமினல் குற்றத்திற்குட்பட்டுப் போலீசில் வலிக்கப்பட்டு வேறு
தப்பவழியின்றிப் பின் அடிமைப்பத்திரம் எழுதிக்கொடுத்துப் பணத்
தண்டமு மிறுத்தமையும் ஷை சபையினர் உணர்ந்தார்களோ என்ன
மோ அறியோம்! எப்படியிருந்தாலும் அவரிடத்தில் சமாஜத்தார் மிகு
ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். சோமசுந்தர நாய்க்கருக்குப் போ
லீசு என்றால் முக்கனியும் பாலும் கற்கண்டும்போலத்தான். சபை

யார் போலீசு என்றால் பயப்படுவார்களென நினைக்கின்றோம். ஆதலால் ஒவ்வொரு விஷயத்திலும் கிரிமினல் சம்பந்தமாயாவது ஸிவில் சம்பந்தமாயாவது வழக்கு நேரிடாதபடி எழுதப் பார்த்துக்கொள்ள வேண்டியது. இதைக்குறித்து நாம் அடிக்கடி எழுதவேண்டுவதில்லை. நிற்க, வேதாந்த சித்தாந்த வாதத்தின் உண்மை வெளிப்படுங்காலம் நேர்ந்தமைபற்றியாவரும் சந்தோஷிப்பார்களென்பதிலையமின்றென்க.

நாம் "சங்கராசாரியாரது அவதாரமகிமை"யில் துரியசிவனிடத்திலிருந்து சிவனடியாருண்டாவதெங்ஙனமெனக் கேட்டு அதுவிஷயமாக நேரும் ஆக்ஷேபங்களைப் பலவுபமானங்களின் வாயிலாகக் காட்டிக் கண்டித் திருக்கின்றோமன்றோ? அதற்கிதுகாறும் விடையிறுக்க முடியாமல் சோ. நாய்க்கர் தலைமறைந் திருக்கின்றானன்றோ? அதுபற்றிப் பலர் " ஏனையா அவைகளுக்கு விடைபகராமலிருக்கின்றீர்? விடையுண்டா? இல்லையா? இல்லையானாற் சொல்லிவிடும், "சும்மா இருக்கிற தாரையை யூதிக்கெடுத்தான் ஆண்டி" என்பதுபோலக் கௌரவமாயிருக்கும் சித்தாந்தத்துவிதசைவத்தை நடுத்தெருவில்இழுத்துப்போட்டு அவமானத்துக்குள்ளாக்கினீரே" என்று கேட்டிருக்கக் கூடும். அதற்கிவர் இத்தனைநாளில் விடைதருகிறேனெனச் சொல்லியிருப்பார். அதன்பேரில் "குரங்கெறி விளாங்காய்" கதையையுன்னி, அத்துவிதிகளையே அம்மாதிரிக் கேள்விகளைத் திருப்பிக்கேட்டால் அவர்கள் உத்தரஞ் சொல்லிவிடுவார்கள், அதையே ஷை பலர்க்கும் சொல்லிவிடலாம்" எனக் கருதியிருப்பார். அப்படியே அத்வைதிகளைக் கேட்கவேண்டுமே; அதற்கு யாதுவழியென யோசித்து "நேரே பத்திரிகையிற் கேட்கிறதென்றால் முன் கேட்டகேள்விக்குச் சமாதானஞ்சொல்லாமல் கேட்கப்படாதே, மேலும் இதுவிஷயமாக இனிப் பேசுவதில்லையென யுறுதிமொழியும் பகர்ந்துவிட்டோமே" யெனநினைத்து முடிவில் தூத்துக்குடி சைவப்பிரகாச சமாஜத்தார் விரும்பினது போலவும் அவர்கள் நிமித்தம் எழுதிக்கொடுத்ததுபோலவும் மேலுக்குக்காட்டி, உள்ளுக்குள் தமதுகருத்தை நிறைவேற்றிக் கொண்டானென சொல்லவேண்டும். அங்ஙனமல்லாவிடில் "துவிதசைவம் சுத்த ஆக்ஷேபமாயிருக்கின்றதே, இதை யேன் கட்டிக்கொண் டவஸ்தைப்படவேண்டும், துவிதியாயிருப்பதனாலே யல்லவா பலபேர் ஆக்ஷேபஞ் செய்கின்றார்கள், இதைவிட்டுப் பழையபடியே அத்வைதத்திற் பிரவேசித்துவிட்டால் இந்தத் தொல்லையெல்லா மில்லாமற்போமே, அத்வைத மதத்திற் பிரவேசித்தாலும் இப்படிப்பட்ட கேள்விகளுக்கு உத்தரவு தெரிந்திராவிட்டால் அவமானமாயிருக்குமே, அத்வைதியாய்ப் பின் சுவடியேந்திப் படிப்பது அவமானமாயிற்றே, ஆதலால் துவைத மதத்திலிருந்தே "குரங்கெறிவிளாங்காய்" கதையாய் வேண்டிய கேள்விகளைக் கேட்போம், உத்தரவு வந்தால் அதைத் தெரிந்துகொண்டு பழையபடி அத்வைதியாய்ப் போய்விடுவோம்,

பின்னர்த் துவித சித்தாந்திகள் கேட்டால் அத்வைதமதத்தில் பல
ஆக்ஷேபங்க ளிருப்பதாலும் அதற்குச்சமாதானம் ஒருவருஞ் சொ
ல்லாமையாலும் சமாதான மில்லாமையாலும் சொல்லாதபக்ஷத்தில்
அத்வைதிகள் சிலுக்கவளிக்கிறபடியாலும் அந்த அவமானம் பொறு
க்கமுடியாததா யிருப்பதாலும் துவிதமதத்தைவிட்டு அத்வைத மத
த்திற் பிரவேசித்தோம் எனச் சொல்லிவிடுவோம், அத்வைதிகள் சங்
கேதங்கேட்டாலுஞ் சொல்லிவிடுவோம்" என யோசித்தே யிப்படிப்
பட்ட ஷை கேள்விகள் கேட்டிருக்கவேண்டும்; இவ்விதமான வஞ்ச
கத்தை வைத்துக்கொண்டே ஷை பத்திரத்தை ஷை சமாஜத்தார்க்கு
எழுதிக்கொடுத்திருக்கவேண்டும். சமாஜத்தார் ஆழமாய் விசாரித்திரு
க்கும்பக்ஷத்திலும் முன்பின் சங்கதிகளை த்நியோசித்துத் தெளிந்திரு
க்கும் பக்ஷத்திலும் "சணப்பன்வீட்டுக்கோழி தானே விலங்கில் மா
ட்டிக்கொண்டது"போல் இவ்வீணவம்பில் அகப்பட்டுக்கொண்டிருக்
கமாட்டார்கள். சும்மா வழியேபோகிற சனியனைவிலைகொடுத்து வாங்
கவுமாட்டார்கள். வாங்கியாய்விட்டது. இனிச்செய்வதென்னே? இனிச்
சோம. நாய்க்கர் இவ்வாதம் முடிகிறவரையில் "துவித சித்தாந்தியாக
வேயிருக்கவேண்டும், அத்வைதியாகமாறிவிடப்படா"தெனச்சமாஜத்
தார் அவரிடத்திற் பத்திரமெழுதி வாங்கவேண்டும்; அன்றி அவரை
நோக்கி: "இப்படிப்பட்ட கேள்விகள் பலவற்றை "ஓர் இந்து" என்
பவர் உம்மைக் கேட்டிருக்கிறாரோ, அவைகளுக்கெல்லாம் பதில்கூறி
னீரா? கூறிவிட்டபிறகன்றோ அத்வைதிகளை இன்னோரன்ன வினாக்களை
வினவல் வேண்டும்? நீர் அவமானப்படுவது போதாமல் எங்களையும்
அவ்மானத்துக்குள்ளாக்கி நடுத்தெருவில் இழுத்துவிட்டீரோ, இது
நியாயமா?" என்றுங்கேட்கவேண்டும். சமாஜத்தாரே! இனிச் சோ.
நாய்க்கர் நழுவினாலும் நீங்கள் நழுவமுடியாது. சோம. நழுவுவது
அவர்க்குச் சுபாவம்; அவ்வாறு நீங்கள் நழுவுவீர்களென்று நாம்
நினைக்கவில்லை. "வழிவந்தகப்பட்டானைத் தொழுவத்தில் மாட்டிவி
ட்டு வாய்க்காலுக்குப்போய்வருகிறேனென்று போய்விடுவது" போல
வுங்களை மாட்டிவிட்டு அவர் போனாரேயென வருந்துகின்றோம். இத
னுண்மை போகப்போக உங்களுக்குத் தெரியும்.

நிற்க, ஆரம்பத்திலேயே இச்சமாஜத்தார் சுருதி ஸ்மிருதி புரா
ணேதிகாசங்கட்கும் அவற்றினுக்கு மாறில்லாமல் ஞானவான்களா
லியற்றப்பட்ட நூற்பிரமாணங்கட்கும் விரோதிகளெனவும் அவை
திக சித்தாந்திகளெனவும் ஷை வேதாதிகளை அப்பிரமாணமாகக்
கொள்ளும் புறமதஸ்தர்க ளெனவும் காட்டிக்கொள்ளும்படி "மாயா
வாதி (அத்வைதி) மதத்தில் பிரமம் ஒன்றேயென்றும், ஜகஜீவபரங்
கள் மித்தையென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது" என்று கூறினார்
கள். இது மிகவிந்தை! இவ்வாறு சொல்பவர்கள் ஆத்துவிதிகளே
யாம். அவர்கள் தாங்களாகச்சொல்லவில்லை. வேத சாஸ்திரங்கள்
சொல்வதாலும் அவைகளுக்குக் கட்டுப்பட்டிருப்பதாலும் அவர்கள்

வைதிக சித்தாந்திகளானதாலும் யுக்தி அனுபவங்கட் கொத்துப் பேசுபவர்களானதாலும் ஆரியர்களானதாலும் வேதசாஸ்திரங்களை அவமதிக்கும் புறமதஸ்தரல்லாததாலும் இவைபோல் இன்னும் நியாயமான பல காரணங்களினாலும் சொல்லுகின்றார்கள். இதைப்பற்றி ப்ரம்மவித்தியா பல பத்திரிகைகளில் வேண்டியமட்டும் சமாதானஞ் சொல்லியிருக்கின்றோம் ; அவ்வாறு சொல்லாவிடில் வரும் பெரும் அனர்த்தங்களையுங் காட்டி யிருக்கின்றோம். அங்ஙனமாக, அதைப் பூர்வபக்ஷஞ்செய்து மேல் ஆசங்கை செய்யாமல் ஒன்றும் அறியார் போல மறைந்து பின்னும் அவ்வாறே பேசுவது படிற்றொழுக்கத் தவர்க்கே தகுதியாம். பிரமம் ஒன்றே சத்தியமென்பதற்கும் மற்றப்பொருள்கள் அதாவது ஜகஜீவபரங்கள் மித்தையென்பதற்கும் வேண்டிய வேதமுதலிய பிரமாணங்கள் பல இப்பிரமவித்தையில் எம்மாலும் பிறராலும் காட்டப்பட் டிருக்கின்றனவாயினும் இப்போதும் சில பிரமாணங்களைக் காட்டுகின்றோம்.

### ருக்வேதத்தில் ஆத்மபோதோபநிஷத்.

பழுதையில் பாம்புமுதலியனபோல் (பழுதையில் பாம்பு என்கிற பிரமைக்குக்காரணம் பழுதைபோல்) பிரபஞ்சத்திற் காதாரரூபமாய்ப் பிர்ம்ம சத்து மாத்திரமே சூழ்ந்துகொண்டிருக்கிறது ; ஆகையால் ஜகத்தில்லை.

### இலிங்கபுராணம்

*தியானவிதியுரைத்த அத்தியாயம்.*

விரிந்தபூதங்களினோடு விளம்பிந்தியங்கள் தத்துவங்கள்
திருந்தா அகங்காரத்தினொடு செறிமுக்குணங்கள் மாத்திரைகள்
பொருந்துமாயை சீவனிவை பொய்யாம் யாமே பொய்யின்றி
யிருந்தெவ்விடத்து நிலைபெறுவோ மதனால்தானுவென இசைப்பார். (கூக)

### கூர்மபுராணம் சாங்கியயோகமுரைத்த அத்தியாயம்.

ஆதலால் பிரமமொன்றே நித்தியம் அலகைத்தேரிற்
பேதுறத்தோன்றுநீரிற் பிரபஞ்ச மருண்டுதோன்றும். (உ௫)

### மகாஇதிகாசமாகிய சிவரகசியத்தின் ஆறாவது அம்சத்திலுள்ள ரிபுகீதை

*முப்பத்தோராவது அறுபத்துநான்கு திருட்டாந்தத்தோடு அத்துவித வுண்மை யுரைக்கும் அத்தியாயம்.*

மலடிமகன் வசனத்தா லியார்க்கும்பீதி
மன்னிடுமேன் மாயைமுதற் சகத்துஞ்சத்தாஞ்
சலனமிகும் பரியின்கோ டுண்மையாகிச்
சமர்தருமேற் சராசரமாஞ் சகத்துஞ்சத்தா
மலைமனுடன் கோடதுவா மம்புகொண்டிங்
காரேனு மழிவுற்றாற் சகத்துஞ்சத்தாங்
கலனமற விசாரிக்கிற் சகத்தேயில்லை
களங்கமிலாப் பரப்பிரம மொன்றேயுண்மை. (௪)

கானலின் நீருங் கடதாந் திருத்தியாக்குங்
　　கலந்திடுமேற் கனமுதற் சகத்தின் சத்தாம்
வானிலுறுங் கந்தருவ நகரமுண்மை
　　வடிவாமேல் வசனிக்குஞ் சகத்தின் சத்தாம்
மீனமுறுக் ககனத்தி னீலம்
　　பிறவாமேல் பிறந்திடுமேற் சகத்தின் சத்தாம்
ஞானமறை விசாரிக்கிற் சகத்தின் மெய்யில்லை
　　யுணர்வுருவாம் பரப்பிரம மொன்றேயுண்மை. (௬)

உலகு அசத்தென்பதற்கு இங்ஙனமிரி அநுபத்துநான்கு திருட்டாந்தங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

இனி யுக்தி அநுபவங்களைப்பற்றியும் வரைவாம். பிரமம் ஒன்
றே சத்தியம், மற்றவை அதாவது ஜகஜீவபரங்கள் மித்தை அதாவது
அநிர்வசனீய மென்று சொல்லாவிடினும், அவைகள் சத்தியமெனச்
சொல்லிடினும் பிரமம் கண்டிதமாய்ப்போம். கண்டிதமாய்ப் போனு
லும் போகட்டும், சொல்வமேயென்னின் வேதசாஸ்திர விருத்தமு
மாம். வேதசாஸ்திர விருத்தசமயிகளும் கடவுள் பரிபூரணரெனச்
சொல்ல, அவர்களுக்கும் விரோதமாகக் கடவுள் அபரிபூரணரென்
றால் வேதப் புறப்புறச்சமயியாய்ப் போகவேண்டிவரும். பிரமத்துக்
கும் பரிபூரணஞ் சொல்வோம், அதிற் சகஜீவபரங்களும் இருக்கின்
றனவாய்ச் சொல்வோமேயென்னின் இது நாற்கோணத்தில் முக்கோ
ணமிருக்குமென்று சொல்வதுபோலிருக்கின்றதன்றி, பதார்த்த விஞ்
ஞான சாஸ்திர மறியாத குற்றமுமாம். பிரமம் பரிபூரணமென்பது
இருபகுதியாரும் ஒப்புக்கொண்டவிஷயம். அப்படிப்பட்ட பரிபூர
ணப்பொருளில் ஜகஜீவபரங்க ளிருக்கு மென்கை பொருந்தவேமாட்
டாது. ஒரு இரும்புக்குண்டில் மற்றொரு இரும்புக்குண்டு இருக்கு
மென்று கூறுவது கூடாது. இது அநுபவ விரோதம். பிரமத்தில்
ஜகஜீவபரங்கள் இருக்குமென்றால் அது வரையில் பிரமம் இல்லாமற்
போம். இல்லாமற்போனாலும் போகட்டுமே யென்னின் அப்போது
அங்கிருந்த பிரமம் எங்குபோயிற்று ? அது போகிறதற்கு ஒரு இடம்
வேண்டுமே. பிரமம் நீக்கமின்றி யெங்கும நிறைந்திருப்பதாலும் அது
இல்லாவிட மின்மையாலும் அது போகவுமாட்டாது ; போக விடமு
மில்லை. பெட்டிக்குள் பலசாமான்க ளிருப்பதுபோலப் பிரமத்தினுள்
ஜகஜீவபரங்கள் இருக்கின்றன வென்றாலோ இதுவும் பொருந்தாது.
பெட்டி பூரணப்பொருளன்று; அது ஓரத்தின் மாத்திரந்தான் பொ
ருள்; இடையில் பொருளில்லை; புரையே. அந்தப்புரையில்தான் பலசா
மான்கள் இருக்கின்றன. அங்ஙனமே பிரமமும் ஓரத்தில் பொருளு
ள்ளதாயும் இடையில் புரையுள்ளதாயு மிருத்தல் வேண்டும். அந்தப்
புரையில்தான் ஜகஜீவபரங்களிருக்கின்றனவாய்ச் சொல்ல வேண்டும.
அவ்வாறு பகருங்கால் பிரமமுள்ள விடத்தில் ஜகஜீவபரங்களும், ஜக
ஜீவபரங்களுள்ளவிடத்தில் பிரமமும் இல்லையென்று கூறுதற்கிடனும்.

பெட்டியான பொருளுள்ளவிடத்தில் சாமான்களும், சாமான்களுள்ள விடத்தில் பெட்டியு மில்லாதிருப்பது காட்சிப்பிரமாணம். இதனால் ஒருபொரு ளுள்ளவிடத்தில் மற்றொருபொரு ளிராதென ஏற்படுகின்றது. கடனீரில் உப்பு அடங்கியிருப்பதுபோல் பிரமத்தில் ஜக ஜீவபரங்கள் அடங்கியிருக்கின்றன வென்னின் இப்படிச்சொல்பவரும் பதார்த்தசோதனை செய்தறியாதவரேயாம். ஏனெனின் உப்புநீரில் நூற்றுக்கு இருபத்தேழுபங்கு உப்பும், எழுபத்துமூன்றுபங்கு நல்ல நீரும் இருக்கின்றன. அவைகள் ஒன்றிருந்தவிடத்தில் மற்றொன்றில்லை. ஆதலால் அவை பின்னப்பொருள்களேயாம். சூரியனது உஷ்ணகாலத்தில் கடலின்கணுள்ள நல்லநீர் ஆவிரூபமாய் மேலேபோகப் போக வுப்பு என்னும் பொருள் கீழேதங்கிவிடுகின்றது. ஒன்றுமேலே போக வொன்று கீழேதங்கிவிடுகின்றமையின் இரண்டும் பின்னப்பொருள்களாம். அவை அபின்னம்போற் காணப்படினும் நுட்பமாய் ஆராய்ந்துழி, ஒன்றிருந்த விடத்தில் மற்றொன்றில்லையென்று கூறுதற்கிடனாகி, பின்னப்பொருள்களாகவே யிருக்கின்றன. இன்னும் 'சங்கராசாரியார் அவதாரமகிமை'யில் எள்ளிலெண்ணெய் முதலிய பல திருட்டாந்தங்கள் கூறி, அவற்றிலுள்ள ஆசங்கைகளை யெல்லாம் விளக்கிக் காட்டியிருக்கின்றோமாகலின் அவற்றினை ஆங்குக் கண்டுதெளிக.

ஒரு பலம் நீரில் ஒருபலம் உப்பைப்போட்டால் இரண்டு பலம் எடையிருக்கும். எடையிரட்டிப்பாயினும் பருமனில் இரட்டிப்பாகாது. அப்படியே நீரும் சர்க்கரையுமாம். இதற்குக்காரணங் கூறுகின்றோம். எப்படிப்பட்ட கடினமான பொருளென்றாலும் அதனது அணுக்கள் ஒன்றோடொன்று இடையில்லாமற் சரியாய்ச் சேர்ந்திருக்கமாட்டாது. பொருள்களுடைய அணுக்களுக்குத் தக்கதாகவும் அணுக்களுக்கு ஊடே ஊடேயிருக்கிற துவாரங்களுடைய திரட்சிக்குத் தக்கதாகவும் தெத்துகளுக்கு ஊடேயிருக்கிற அணுக்கள் ஒன்றுக்கொன்று சமீபித்திருக்கிறதற்குத் தக்கதாகவும் அது அடர்த்தியான பொருளென்று சொல்லத்தகும். ஆதலால் அந்தந்தப்பொருள்களினுடைய அணுக்கள் ஒரே யளவாய் நெருங்கி யிருக்கமாட்டா. ஓர் சதுர அங்குல ஈயம் நாற்பது சதுர அங்குல சீமைக்கிடைச்சிக்குச் சமான பாரமுள்ளது. ஒரு சதுர அங்குல ரசம் பதினாலு சதுர அங்குல தண்ணீருக்குச் சமானமான பாரமுள்ளது. இதனாலெந்தப் பொருள்களிலும் அணுக்களொன்றோடொன்று இடையில்லாமல் சரியாய்ச்சேர்ந்திருக்கமாட்டாதென ஏற்படுகின்றது. அதுபற்றியே தண்ணீரில் உப்பும் சர்க்கரையும் பருமனில் குறைந்துபோகின்றன. தண்ணீரில் ஒரு அணுவுக்கும் மற்றொரு அணுவுக்கும் இடையில் சந்திருப்பதால் அந்தச் சந்தில் உப்பேனும் சர்க்கரையேனும் போய் அடைகின்றது. அவை வேறு வேறாயிருக்கின்றமையின் பின்னம் பின்னமேயாம். இந்த நுட்பம் அறியாதார் ஒரு அளவுநீரில் அந்த அளவு

உப்பு அடங்குமெனச்சொல்லி, இவ்வாறு பிரமத்தில் ஜகஜீவபரங்கள் அடங்குமெனக் கூறுவார்கள். அப்படியும் ஒரு அளவு நீருக்கு அவ்வளவு அளவு உப்பு அல்லது சர்க்கரை அடங்காது; கிஞ்சித்துத்தான் அடங்கும்.

கண்ணொளி சூரியனொளி திருட்டாந்தங்கூறி, எம்மாலும் பிறராலும் சோ. நாயகர் வாய்ப்பூட்டப்பட்டாரென்னும் சங்கதி எவருந்தெரிந்த விஷயந்தான். பூட்டப்பட்டவாய் பூட்டினபடியேதானிருக்கின்றது. இது காறும் திறக்கப்படவில்லை. சூரியனுக்கொளியிருப்பது உண்மைதான். அவ்வாறு கண்ணுக்குஞ் சொல்வதுதான் பிசகு. கண்ணுக்கு ஒளியில்லையென நியாயத்தால் நாமும் பிறரும் கிளிப்பிள்ளைக்குச் சொல்வது போல் பல பத்திரிகைகளிலும் பல மாசங்களாகஎழுதிவர, மீண்டும் வெட்கமின்றி "அரக்கோணவாசி"எனப்பெயர்பூண்டு கண்ணுக்கொளியுண்டென நாகைநீலலோசனி விஜயஹூ ஆடிமீ ௧௦வ பத்திரிகையில் இவரதபேத தோழர் வரைந்து, நம்மால்மறுபடியும் கண்டிக்கப்பட்டாரென்ற சங்கதி இதற்கு முன் எழுதிய "மாயாவாத சைவசண்டமாருதம்" என்னும் விஷயத்தா லினிது விளங்கும். சூரியனுக்கொளியிருப்பதுபோலக் கண்ணுக்கும்ஒளியிருந்தால் தானென்ன? இதனால் பரிபூரணஞ் சித்தித்துவிடுமோ? ஆகாயத்திற் பறக்கும் அணுக்கள் ஒன்றுக்குள் ஒன்றடங்காதும், ஒன்றிருந்த விடத்திலொன்றிராதும் வேறுவேறாய் எப்படியிருக்கின்றனவோ அப்படியே சூரியனொளியும் கண்ணொளியும் பேதமாகவே யிருக்கும். ஒரு காற்றோடு மற்றொரு காற்றுப்படும்போது ஒன்றிலொன்றடங்காது வேறுவேறாய் எப்படிப்பேதப்பட்டிருக்கின்றனவோ, அப்படியே பலவொளிகளும்ஒன்றுக்கொன்று வேற்றுமைப் பட்டேயிருக்கும் என்றறிக.

ஜகஜீவபரங்கள் மித்தையென்கின்றனரெனச் சொல்லி, மேல் "பொய்யாகிய இம்மூன்றனுள்" எனக் கூறியதால் அத்துவிதிகள் ஜகஜீவபரங்களை மலடிமகனைப்போலப் பொய்யென்று சொல்வதுபோலாகின்றது. இது விஷயமாக இச்சோ. நாய்க்கருக்குக் கூறிய சற்புத்தி அத்துணை இத்துணையன்றே; எத்தனைமுறையோ கூறினோமே. அவைகளுக்கெல்லாம் பதில் கூறாது பின்னும் நம்மால் கண்டிக்கப்பட்டதையே கூறுவது ஆண்மையன்றே. ப்ரம்மவித்தியா ௬-வது புத்தகம் ௧௧-வது ௧௪-வது பத்திரிகைகளிலும் அதேபுத்தகம் ௨௦-வது முதல் ௨௪-வது பத்திரிகைகளிலும் அவை சத்துமல்ல, அசத்துமல்ல, சதசத்துமல்ல, சதசத்விலக்ஷண அநிர்வசனீயமென இவருக்கிடித்திடித்துக் கூறியிருக்கின்றோமே. அதுமாத்திரமா? நந்தனஹூ ஆடிமீ ௰வ ப்ரம்மவித்யாவில் "சுதேசி" யென்பவர் ஆஸ்திகநாஸ்திகவிஷயமாயெழுதி யிவர்மதத்தை நாஸ்திகமாக்கிப் பேசியபோதும் அவ்வாறு பேசியிருக்கிறாரோ; அது மாத்திரமா? 1888ஹூ செப்டம்பர்மீ 30வ ப்ரமவித்யாவிலும் இவருக்கு இவ்வாறே "ஓர்நண்பர்" என்பவர் கூறி

யிருக்கின்றாரே; அதுமாத்திரமா? ம-ா-ா-ஸ்ரீ சபாபதி நாவலரவர்களைமறுத்து "வேதாந்தசங்கை நிவாரணம்" என்னும் விஷயம் எழுதியபோதும் இதேமாதிரி சொல்லப்பட்டிருக்கின்றதே. இவர் படிற்றொழுக்கமுள்ளவராகலின் அதை யறியார்போல் எழுதினாலும் ஷை சமாஜத்தார் இவ்விஷயங்களை யெல்லாம் அறியாது ஏமாந்து போனதும், சோ. நாயகர் இப்படிச் செய்வதிற் பழைய ஆசாமியென்றும் வந்த விடையை மறைத்து வாராததுபோல் எழுதும் இயற்கைக்குணத்தவரென்றும் உணராது மயங்கி அவரைநம்பி அவரெழுதிக்கொடுத்த விஷயத்தை வாங்கி அச்சிட்டதும் மிக விசனிக்கத்தக்கதாம்!

இவரையும் சபாபதி நாவலரையும் பிறரையும் மறுத்து ஐந்துவருஷகாலமாக உலகு சத்துமல்ல, அசத்து மல்ல, சதசத்துமல்ல, அநிர்வசனீயமென்று காட்டி யெழுதியவற்றுள் சிலவருமாறு:—

ப்ரம்மவித்யா 1888௵ செப்டம்பர்௴ 30௳ "ஓர் நண்பர்" இவர்க்குக் கூறியது:—

"இரஜ்ஜு (கயிறு) வின்கண் தோன்றும் சர்ப்பம் சத்தா? அசத்தா? சதசத்தா? இவ்வினாவுக்குச் சத்தெனின் இரஜ்ஜு (கயிறு) என்றறிந்தபோது சர்ப்பம் தோன்றவேண்டும்; தோன்றாமையின் சத்தெனல் அமையாது. அசத்தென்பாமெனின் மலடி மைந்தன் போன்று தோன்றாமல் இருக்கவேண்டும்; தோன்றுதலின் அசத்தென்று முனைத்தல்கூடாது. சதசத்தென்றுரைக்கப்படுமாலோவெனின் மறுதலைப்பட்ட இரண்டுதருமம் ஒன்றின்கணிரா. ஆகலின் சர்ப்பமானது சதசத்விலக்ஷணமென்க. அன்றி இன்ன தன்மைத்தென்று கணிக்கப்படாதெனப் பொருள்கொள்ளும் அநிர்வசனீயமுமாம். இவ்வாறே யுலகமும் சதசத்விலக்ஷண அநிர்வசனீயமென்க. முன்பு உலகை அசத்தென்றுரைத்தது யாதுக்கெனின் உலகம் சத்தென்பாரை மறுத்தற்கென்க. உலகம் அசத்தென்பது பூர்வபட்சமேயன்றிச் சித்தாந்தமன்று."

ப்ரம்மவித்யா ௩-வது புத்தகம் ௧௧-வது பத்திரிகையில் இவர்க்கு நாம் கூறியது:—

"இவர் மதத்தில் எல்லாம் மிச்சையென்று கூறும் வழக்குண்மையா லிவரை மிச்சாவாதியென்று கூறுதலுமாம். மிச்சையென்பது பொய்யென்று பொருள்படும்." எனச் சோம. நாய்க்கர் நாகைநீலலோசனியில் எழுதியதற்கு நாம் கூறிய பதிலாவது:

"இவர் சொல்வதுபோல வேதாந்திகள் மாயையைப்பொய்யென்றுசொல்லுகிறார்களோவென்னில் அவ்வாறு சொல்வது கிடையாது. அவர்கள் மாயையை மெய்க்கும் பொய்க்கும் விலட்சணமென்றும், அதோடு இன்னதன்மைத்தென வுரைக்கப்படாதென்று பொருள்

கொள்ளும் அநிர்வசனீயமென்றுஞ் சொல்லுகிறார்கள். இவர் "எல்ல
செட்டிலக்க ஏகலக்க" என்கிறபடி யெல்லாவற்றையுஞ் சேர்த்துப்
'பொய்யென்கிறார்கள்' என்கிறார். வேதாந்திகள் அவ்வாறு சொல்வ
தில்லை. பொய் நான்குவகைப்படும். வந்தியா புத்திரனும் பொய்
தான்; ரச்சு சர்ப்பமும் பொய்தான். கானற்சலமும் பொய்தான்;
கனவுலகமும் பொய்தான். இவ்வாறு பொய்யில் பலவித பேதங்களி
ருக்கின்றன. ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொன் றுபயோகமாகும்.
உலகம் பொய்யென்பது வரையில் வந்தியாபுத்திரன் திருட்டாந்தம்;
பொய்யானால்தோன்றாமலிருக்கவேண்டுமே என்னும்போது ரச்சு சர்
ப்பதிருட்டாந்தம்; சர்ப்பம பொய்யென்றறிந்தால் தோற்றுகின்றதில்
லையே யென்றும் உலகம் காரியகாரணமுதலிய விசாரணையில் பொய்
யென்றறிந்தாலும் தோற்றுகின்றதே யென்றும் வினா நிகழும்போது
கானற்சல திருட்டாந்தம்; கானற்சலம் பொய்யென் றறிந்த பின்ன
ரும் தோற்றிக்கொண்டிருந்தாலும் நீர் அருந்துகிறதற் குதவவில்லையே
யென்னும் கேள்வி யுண்டாம்போது கனவுலக திருட்டாந்தமாம். கன
வுலகம் பொய்யென்று ஒருவிதத்தில் பூர்வபக்ஷமாய்ச்சொல்லப்படுகி
றதே யன்றிச் சித்தாந்த மல்ல. பொய்யானால் வந்தியாபுத்திரன்போ
ல் தோன்றாமலிருக்கவேண்டும்; மெய்யானால் முக்காலத்து மிருக்க
வேண்டும். பொய்மெய்யென்னலாமெனில் எதிர்மறையான இருஇல
க்கணமுள்ள பொருள் இராது. ஆதலால் கனவுலகம் பொய்க்கும்
மெய்க்கும் வேறான அநிர்வசனீயமென்றே சொல்லத்தகும். இந்த
இலக்கணத்தையே மாயைக்குச் சொல்லுகின்றார்கள் வேதாந்திகள்."

... ... ... ... ... ...

"இனி அசத்து இப்படிப்பட்டதென ஆராயின் அது வந்தியாபுத்
திரனும் அசத்து; ரச்சு சர்ப்பமும் அசத்து; கானற்சலமும் அசத்து;
சொப்பனவுலகமும் அசத்து. யாவும் அசத்தாயினும் மாயை சொப்
பன வுலகம்போன்றஅசத்தாம். மற்ற வுவமான மெல்லாம் பூர்வப
க்ஷம். மாயை முற்றுமில்லையென் றுரைத்தல் கூடாது; இருப்பதாய்க்
காணப்பட்டு விவகாரத்துக்கும் அனுபவத்துக்கும் இயைந்திருப்பதா
கிப் பொய்யாய்ப் போதலால். அதுபற்றியேசொப்பனவுலக திருட்டா
ந்தஞ் சொல்லப்படுகின்றது. சொப்பனவுலகம் முற்றும் மெய்யென்
றுரைக்கப்படாமையாலும் முற்றும் பொய்யென்று முரைக்கப்படா
மையாலும் மெய் பொய்யென்று சேர்த்துச்சொல்லலாமெனில் நேர்
விரோதமான இரண்டு தருமம் ஒரு பொருளினிடத்திராமையாலும்
மாயை யென்பது மெய் பொய் இரண்டுக்கும் வேறானதென்றும் இன்
னதன்மைத்தென்று கணிக்கப்படாதென்று பொருள்கொள்ளும் அநிர்
வசனீயமென்றும் சொல்லப்படுகின்றது. இவ்வாறு மாயைக்கு இலக்
கணம் சதசத்விலக்ஷணம் என்றும் அநிர்வசனீயமென்றும் வேதாந்த
நூல்கள் கோஷித்தும் பிரசங்கித்தும் அனேக பத்திரிகைகளிலெழு

தியும் இந்தச்சோமசுந்தரநாயகரென்பார் அவைகளையெல்லாங் கவனியாமல் "தான் பிடித்தமுயலுக்கு மூன்றேகால்" என்பதற்கிணமாய்த் தாம் பிடித்த முரட்டுப்பிடியைவிடாமல் வேதாந்திகள் மாயையைப் பொய்யென்கிறார்களென்றும் உலகைப் பொய்யென்கிறார்களென்றும் எல்லாம் பொய்யென்கிறார்களென்றும் சொல்வதுடன் வாயில் வந்தபடி திட்டியும் அவ்வாறு எழுதியும் வருகின்றார்."

ப்ரம்மவித்யா ௩-வது புத்தகம் ௧௧-வது பத்திரிகையில் பொதுவாய்ச் "சுதேசி" எழுதியதில் இதுவிஷயமாகக் கூறியது:—

"கயிற்றின்கண் அரவு சத்தா? அசத்தா? சதசத்தா? இக்கேள்விக்குச் சத்தெனின் சத்தென்பதற்குப் பொருள் உள்ளதாதலால் கயிறென்றறிந்தபின்னரு முளதாதல் வேண்டும்; அங்ஙன மிராமையின் சத்தென்றுரைத்தல் கூடாது. அசத்தெனின் அசத்தென்பதன் பொருள் இலதாமாதலால் மலடிமைந்தன் தோன்றாதிருத்தல்போல் அரவு தோன்றாமலே யிருத்தல்வேண்டும். தோன்றுதலால் அசத்தென்றுஞ் சொல்லுதல் கூடாது. சதசத்தென்று சொல்லலாமென்னில் சதசத்து என்பதன் பொருள் உளது இலது ஆதலாலும் ஒன்றுக்கொன்று நேர்விரோதமான இலக்கண மமையப்பெற்ற பொருள் இராதாதலாலும் சதசத்தென்றுங் கூறுத லமையாது. அன்றி எது சதசத்தோ அது உண்மையில் அசத்தேயாம். கயிற்றரவு முன்பு சத்து; சோதனையில் அசத்து. அது உண்மையில் அசத்தேயாம். பின்னைப் போம் வழி யாதெனின் இன்னதன்மைத்தெனச் சொல்லுதற்கமையாத சதசத்விலக்ஷண அநிர்வசனீயமென்று கூறுதலே அமைவுடைத்து. இந்த இலக்ஷணத்தையே சொப்பன வுலகத்திற்கும் சொப்பன வுலகத்தை யுவமானமாகக்கொண்ட சாக்கிரவுலகத்திற்கும் சொல்லத் தகுதியாம். இவ்வாறு கூறுவதனால் கடவுளுக்கும் பரிபூரணஞ் சித்திக்கின்றது; உயிர் உலகங்களுக்கும் இருப்பு ஏற்படுகின்றது."

ப்ரம்மவித்யா ௩-வது புத்தகம் ௨௰-வது முதல் ௨௪-வது பத்திரிகை வரையில் இவரை நாம்யறுததுச் 'சங்கராசாரியார் அவதாரமகிமை' யெழுதியதில் இதுவிஷயமாகக் கூறியது:—

"இனி இவ்வித ஆக்ஷேபங்கள் அணுத்துணையுமில்லா அத்வைத சித்தாந்தத்தை அநுசரித்து அவராக்ஷேபத்துக்குச் சமாதானங் கூறுவாம். பிரமத்தின்கண் சீவ வுலகங்க ளிருக்கவும் வேண்டும்; பிரமத்துக்குப் பரிபூரணதோஷமும் வரப்படாது; சீவவுலகங்களினது நயநஷ்டமும் பிரமத்தைச் சாராமலும்இருக்கவேண்டும். எப்படிச்சொன்னால் சாராமலிருக்கும்? எப்படிச் சொன்னால் தோஷம வராது? தோற்றமாய்ச் சொல்லிவிட்டால் தோஷம்வராது. அஃது யாங்ஙன மெனின் கயிற்றிற்கண் அரவுபோல் என்பதாம். "கயிறு உண்மை, அரவு பொய்யென் றறிந்தவுடனே அரவு தோற்றுவதில்

லை; உலகம் அவ்வாறன்று; ப்ரம்மத்தைத்தவிர வுலகமின்றென வுண ரினும் பின்னும் தோற்றுகின்றதே'' என்னின் அஃது உண்மை தான். உலகு பொய்யென்பதுவரையில் கயிற்றரவு திருட்டாந்தம்; காரியம் பொய்யென்றறிந்தும் பின்னும் தோற்றுதற்குத் திருட்டா ந்தம் கானல் நீராம். ''இதிலும் சங்கையுள்ளது; அது நீர் அருந் துதற் குதவுவ தின்று; உலகு அநுபவத்திற்கு வருகின்றது'' என் னின், காரியம் பொய்யென்றுணர்ந்த பின்னரும் தோற்றுகின்றது என்பது வரையில் கானனீர் திருட்டாந்தம். இனி யனுபவத்திற்கு வருகிறது என்பதற்குத் திருட்டாந்தம் சொப்பனவுலகாம். சொப் பனவுலகு பொய்யாயிருந்தும தோற்றுதலும் பொருளாயிருத்தலும் அநுபவித்தலுமாகிப் பொய்யென்று சொல்லற்கிடனுகின்றது. சொ ப்னவுலகு பொய்யாயினும் முற்றும் பொய்யன்று. பொய்யென் பதே திண்ணமெனின் மலடிமைந்தன், ஆகாசதாமரைகளைப்போல இல்லாம லிருக்கவேண்டும். மெய்யென்பதே திண்ண மென்னின் சிவத்தைப்போல முக்காலத்தும் இருக்கவேண்டும். சொப்பன வுலகு மலடிமைந்தனைப்போல இல்லாமற் போதலுமன்று; சிவத் தைப்போல முக்காலத்து முள்ளதாயிருப்பது மன்று. உள்ளது (சத் து)ம், இல்லது (அசத்து) மாகச் சொல்லலாமென்னின் ஒன்றுக்கு ஒன்று நேர்மாறுன இரு இலக்கணமுள்ள பொருள் இராது. மேலும் எது உள்ளது (சத்து)ம், இல்லது (அசத்து)மோ, அது உண்மை யில் இல்ல (அசத்து) தேயாம். கானனீர் முன்பு உள்ளது; தேர்ச் சியில் இல்லது. அதை இல்லதென்றே சொல்லவேண்டும். ஆத லால் சொப்பனவுலகு சத்சத்விலட்சணமென்றே சொல்லவேண்டி யது. அப்படியே அதுபோன்ற இவ்வுலகையும் சதசத் விலக்ஷண மென்றே சொல்லவேண்டியது. இது பற்றியே சூதசங்கிதை வே தார்த்தமுரைத்த அத்தியாயம் ஆறுவது பாட்டில் மாயையைச் ''சத சத்திற்குப்பின்ன'' மென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனர்த் தத்தை யுணரார் '' அத்துவிதிகள் உலகைப் பொய்யென்கிறுர்கள்'' என்று சொல்லுகின்றனர். பொய்யென்பதில் இவ்வளவு வித்தியாச மிருக்கின்றது. சொப்பனவுலகு ஒருகாலத்தில் தோற்றி யொருகா லத்தி லில்லாமற்போகிறது. அப்படியே சாக்கிரவுலகும் ஒருகாலத் திற் ரேற்றி ஒரு காலத்திலில்லாமற் போகின்றது.''

... ... ... ... ... ...

''சிவன், அல்லது ஆன்மா, அல்லது பிரமமான பொருள் ஒன் றே முக்காலத்துமுள்ள பரிபூரணசத்துப்பொருள்; மற்றப்படி ஜக ஜீவபரங் [பிரம விஷ்ணு உருத்திரர்] கள் சிருட்டிகாலத்தில் தோன் றிச் சங்காரகாலத்தில் இலயமாகின்ற வோர் காலப்பொருள்கள். பிரமத்தைநோக்க அவைசத்துப்போலிக் கற்பிதப்பொருள்கள்தான். ''இவைகளையுஞ் சத்தாகச்சொன்னுலென்னையெனின் பிரமத்தைக் கண்டப்பொருளாகச் சொல்லி, அவைகளுக்கு உற்பத்திஸ்தானம்

பிரமமல்லாத வேறுபொருளைச் சொன்னால் சொல்லலாம். இப்படிச் சொல்லாவிடில் நாம் சொன்னபடி தான் சொல்லவேண்டும்."

... ... ... ... ... ...

"இனிச்சாக்கிரத்தில் மலடிமகனும் ஆகாயதாமரையும் சுத்த பொய்; கயிற்றின்கண் அரவோ மருண்டபோது பொய்; கயிறும் அதைக்கண்ட சாத்தனும் மெய்யாகின்றார்கள். இப்படியே கயிறு ஸ்தானத்தில் உலகும் சாத்தன் ஸ்தானத்தில் ஜீவனுமாம். சொப்பனவஸ்தையில் கயிறும் சாத்தனும் உண்மையானாலும் சாக்கிராவஸ்தையை நோக்க எப்படிப் பொய்யாமோ, அப்படியே சாக்கிராவஸ்தையில் சாக்கிரவுலகும் ஜீவனு முண்மையானாலும் துரியசிவாவஸ்தையில் பொய்யாம். துரியசிவனை நோக்காவிடத்து ஜகஜீவபரங்களான முப்பொருள்களு மூன்மைதான். ஷடி முப்பொருள்களும் சிருஷ்டிகாலத்தில் துரியசிவனிடத்திலிருந்து தோன்றி, லயகாலம்வரையி லிருந்து லயகாலத்தில் தோன்றியமுறையே லயமாகின்றன. இம்மூன்றுங் காரியப் பொருள்கள். துரியசிவன் காரணப்பொருள். காரணப்பொருள் முக்காலத்துமுள்ள பொருளாகலின் சத்தே; காரியப்பொருள் ஓர்காலப் பொருளாகலின் சத்துப்போலியாம். காரியப்பொருள் முற்றும் சத்துமன்று, முற்றும் அசத்துமன்று. சத்தானால் துரியசிவனைப்போல் முக்காலத்து மிருத்தல் வேண்டும்; அசத்தானால் வான்மலர் வந்தியா புத்திரனைப்போலில்லா திருத்தல்வேண்டும். சதசத்தெனின் ஒன்றுக்கொன்று எதிரான இலக்கணமுள்ள பொரு ளிருத்தல் அரிது. அதுபற்றி ஜகஜீவபரங்களைச் சதசத்விலக்ஷண அநிர்வசனீயமென்று சொல்வது சுருதியாம். இந்த ஜகஜீவபரங்களை வான்மலர் வந்தியாபுத்திரனைப் போல் சொல்வது குற்றமாதலால் அசத்தென்று சொல்லப்படாது. ஆனதுபற்றியே வியாவகாரிகசத்தென்று கூறப்படுகின்றது."

சபாபதிநாவலரை மறுத்து "அத்வைதசித்தாந்தி" எழுதியதில் இது விஷயமாகக் கூறியது:—

... ... ... ... ... ...

"வேதாந்திகள், சத்தியமென்பாரை மறுக்க அசத்தியமென்று சொல்லிடினும் உண்மையில் அவர்கள் அசத்தியமென்று சொல்லுகின்றன ரில்லை; சதசத்விலக்ஷண அநிர்வசனீயமென்றே சித்தாந்தப்படுத்தி யிருக்கின்றனர். இங்ஙனமாக, அவர் அசத்தியமென்று கூறுவதாய் வைத்து, அவரை மறுக்கப் புகுவது, கயிற்றைப் பாம்பாகவெண்ணி, அப்பாம்பைத் தடிகொண்டடிக்கின்றமைக் கொப்பாம்."

... ... ... ... ... ...

"சூனியமென்பது இன்மையையே வடிவமாகப்பெற்றது. அதற்குவமானம் வான்மலர், மலடிமகனும். அநிருவசனீயமென்பது சத்து

மல்லாமல் அசத்துமல்லாமல் சதசத்துமல்லாமல் இன்னதன்மைத்
தெனக் கணிக்கப்படாத இலக்கணத்தைப் பெற்றது. அது ஒரு சத்
துப் பொருளிடத்து உண்மைபோல் மற்றொரு பொருள் காணப்படு
வது. அதற்குவமானம் கயிற்றரவு, கானனீர், [illegible] முதலன
வாம். இந்தப் பேதந்தெரியாது "எல்லசெட்டிலக்க லக்க" என்ப
தாய்க் குழப்பிவிடுவது தகுதியன்று."

... ... ... ... ... ...

"வேதாந்திகள் உயிரான ஜீவனை ஒரு அவசரத்தில் சத்தாகவும்,
ஒரு அவசரத்தில் சதசத்தாகவும், ஒரு அவசரத்தில் அசத்தாகவுஞ்
சொல்லி, இவைகளை யெல்லாம் பூர்வபக்ஷப்படுத்தி, முடிவில் சதசத்
விலக்ஷணமான அநிருவசனீய மென்று சொல்லுகின்றார்கள். சத்து
என்று சொன்னால் சத்தானசிவம் நீக்கமின்றிப் பூரணமாய் நிறைந்தி
ருப்பதால் ஜீவனிருக்க விடமில்லாமற்போம்; அசத்தென்று சொல்
லின் மலடிமகனைப்போல் முற்றுமில்லாமற்போகவேண்டும். ஜீவனிரு
ந்து சுகதுக்கங்களை அநுபவித்துப் பிறந்திறக்கக் காணகின்றோம். ஆ
தலால் அசத்தென்றுஞ் சொல்லப்படாது. சதசத்தென்னின் ஷை
இருவித குற்றங்களும் வந்து பொருந்தும். சத்து, அசத்து, சதசத்தா
கிய மூன்றுக்கும் குற்றம் நேர்கின்றமையால் சதசத் விலக்ஷணமெ
னச் சொல்லப்படுகின்றது. இதற்கே ஓர் பரியாய நாமமாக அநிர்வச
னம் எனச் சொல்லுகின்றார்கள். இந்தச் சூட்சுமத்தை யறியாமல்
வேதாந்திகள் உயிரையசத்தென்றுரைப்பதாய்க் கூறுவது வேதாந்த
வாசனை யில்லாமையைத் தெரிவிக்கிறது. வேதாந்திகள் பூர்வபக்ஷ
மாய்ச் சொல்லித்தள்ளுவதைச் சித்தாந்தமாய் வைத்துக்கொண்ட
தோடு தமது குற்றத்தைச் சொல்லாமல் மறைத்து, வேதாந்திகளு
டைய சித்தாந்த மல்லாததைச் சித்தாந்தமாய்ச் சொல்லி அதை மா
த்திரங் குற்றங்கூறிப்பேசுதல் கோளரிக்கழகாமா?"

இவைகளினாலே யெல்லாம் ஜகஜீவபரங்கள் சத்து, அசத்து,
சதசத்து அன்று, சதசத்விலக்ஷண அநிர்வசனீயமெனச் சித்தாந்த
மாகின்றது. இங்ஙனமாக அசத்தென்று பொருள்கொள்ளுமாறு பொய்
யெனக்கூறுவதாய் எழுதுவது நியாயமா? இது ஒருமுறை, இருமுறை,
ஒருவருஷம், இருவருஷமன்றே; பலமுறை பலவருஷங்களாக வரைந்
தும் குருட்டுவேஷம் செவிட்டுவேஷம் போட்டுக்கொண்டு, இவைக
ளைப்பாராததுபோலவும் கேளாததுபோலவும் எழுதினதையே யெழு
துவது பேடித்தன்மையேயன்றி ஆண்டன்மையாமா? "வீரனென
விருதுகட்டி வேட்டையாடப்போய், வேட்டையாட வகையறியாது
வீட்டில்வந்து புகுந்து வேட்டையாடி. விருதுபெற்றேனெனப் பெண்
பிள்ளைகள்மெச்ச விளம்புவா"னைப்போல இவர் நம்மிடத்திற் றோல்வி
யடைந்து ஓடித் தூத்துக்குடியிற் புகுந்து வீரம்பேசிச் சிறுபத்திர
மெழுதிக்கொடுத்தாரோ. இவரது வீரமே வீரம்!

ப்ரம்மம் அல்லது ப்ரம்மத்தின் பரியாயநாமமான சிவனிடத்தினின்றும் தோன்றி அதிலேவிளங்கிஅதிலேயேயொடுங்கும்ஜகஜீவபரங்களான பாச பசு பதிகளை மெய்யென்று சொல்பவரை யெப்படிக் கண்டிக்கிறார்களோ, அப்படியே பொய்யென்பவர்களையும் பலவருஷங்களாகப் பலமுறையும் கண்டித் திருக்கின்றமையால் இப்படிப்பட்ட அத்வைதிகளைப் பொய்யெனக் கூறுகின்றார்களென்று அசத்தியம்பேசி உயிர்தரித்து வாழ்வது இவர்க்குப் பெரும் புகழேபோலும்! இப்படிப் பட்டவர்க்கு "மயிர்நீப்பின் வாழாக் கவரிமாவன்னார் உயிர்நீப்பர் மானம் வரின்" என்னுங் குறளை எத்தனைமுறை புகன்றாலும் பயனென்னை? இவர்க்கு உரோஷமுண்டாகும்படி (சொன்னதையே சொல்லுங் குற்றத்தை யெடுத்து) எத்தனைமுறை குத்திக்குத்திச் சொல்லினும் உறைக்கவில்லையே! யாதுசெய்வம்!

நாம் ஷை சமாஜத்தாருக்கு இதுவிஷயமாகச் சொல்வதாவது: உலகிற்கு மாயையை முதற்காரணமென்று சொல்பவரே மாயாவாதிகளென்றும், இந்தச் சோ. நாய்க்கரும் அந்த மாயாவாதிகளி லொருவரேயென்றும், பிரமத்தை முதற்காரணமென்று சொல்லும் அத்வைதிகள் பிரமவாதிகளென்றும், அத்வைதிகள் பிரமத்தை நாலுகாலங்களிலுமுள்ள சத்துப் பொருளெனச் சொல்லுகிறார்களென்றும், ஜகஜீவபரங்களை அநிர்வசனீயமென்று சொல்லுகின்றார்களே யன்றி மலடிமகனைப்போலப் பொய்யென்று சொல்லுகின்றார்க ளில்லையென்றும், அநிர்வசனீயமென்பதை விட்டுப் பொய்யென்று சொல்லுகிறார்களென்று சோ. நாய்க்கர் சொல்லுவது வெறும் பொய்யென்றும், அத்வைதிகள் வேதாகம சாஸ்திரங்கட்குக் கட்டுப்பட்டுப் பேசுகின்றார்களென்றும், சோம. நாய்க்கர் அவைகளுக்குக் கட்டுப்படாமல் மீறிப் பேசுகின்றாரென்றும் இவைபோல் பிறவுமாம் என்பது.

இனிமேலே அவர் சொல்வதைக் கவனிப்பாம். அத்துவிதிகள் ஜீவனைப் பிரதிபிம்ப சந்திரனாகச் சொல்லுகிறார்களென்றும் பிரதிபிம்பம் சத்தியமல்லவென்றும் கடநீரிற் பிரதிபிம்பித்த பிரதிபிம்ப சந்திரன் கடமுடைந்தால் அத்துடனே போய்விடுவதுபோல ஜீவன்போய் விடுமென்றும் அதனால் மறுபிறப்பை யொப்புதற்கிடமில்லையென்றும் அதனால் சொர்க்கமடைவது கூடாதென்றும் சந்திரன் கண்டமுள்ளவனாகலின் கடநீரிற் பிரதிபிம்பித்தல் கூடுமென்றும் பிரமம் அகண்டமாகலின் அதற்கு வேறாய் ஒருபொருளில் பிரதிபிம்பித்தல் கூடாதென்றும் சந்திரன் ரூபியானதால் பிரதிபிம்பித்தல் கூடுமென்றும் பிரமம் அரூபியானதால் பிரதிபிம்பித்தல் கூடாதென்றும் இவ்வாறு சில கூறி,அத்துவித சித்தாந்தத்தை மறுத்ததுபோல மகிழ்ந்தார். இவரது வாதம் வேதமுதலிய நூல்பற்றுக்கோடாக நிகழும் வாதமன்று; இவரது வாய்ப்பற்றுக்கோடாக நிகழும் வாதமாம். என்னை? இவர் வேதப் பிரமாணத்தை அங்கீகரியாத கிறிஸ்தவர்முதலிய வேதபாஹ்யமதஸ்

தனைப்போல் ஆசங்கைசெய்வதாலும் பிம்பப்பிரதிபிம்பவாதம் சுருதி
சம்மதமாதலாலுமெனக.

இப்படிப்பட்ட கேள்விகேட்க இவர்க்குக் கற்பித்தவர்யார்? ஏமன்ரே? இவர் துரிய சிவன் சிவனடியாராய் வந்தார், அல்லது வரு
வாரென்று சொன்னமைக்கு அங்ஙனம் வருவது தாயின்கணிருந்து
பிள்ளைவருவதுபோலா? பாலினின்றும் தயிர் வருவதுபோலா? விதை
யினின்றும் விருக்ஷம் வருவதுபோலா? நீரினின்றும் அலைவருவது
போலா? பிம்பத்தினின்றும் பிரதிபிம்பம் தோன்றுவதுபோலா? மண்
ணினின்றும் கடமுண்டாவதுபோலா? கயிற்றினின்றும் அரவுண்டா
தல்போலா? என இன்னோரன்ன பலகேள்விகள்கேட்டு அத்துடனே
அகண்டகண்டவாதம், அரூபரூபவாதம், ஞானஞ்ஞானவாதமுதலிய
பல வாதங்களெழுதி, 'சங்கராசாரியார் அவதாரமகிமை' என்னும்
விஷயத்தில் இவருடைய தப்புக்கொள்கைகளெல்லாவற்றையும் கண்
டித்திருக்கின்றோம். அவைகளுக்கெல்லாம் பதில்போகாது மறைந்
தொழுகி, அந்தக்கேள்விகளில் சிலவற்றைத் திருப்பி அத்வைதிகளைக்
கேட்கின்றார். இவர் ஆசங்கிக்கும் ஆசங்கை அவர்களால் சொல்லத்
தகாததன்று; அன்றி அது ஆசங்கையுமன்று. அவர்களே ஆசங்கை
செய்து மறுக்கப்பட்டவிஷயமாம். அத்துவிதிகள் பூர்வபக்ஷமாய்க்கூறி
ப்பின்னர்த் தாங்களே கண்டிக்கும்விஷயத்தை இவர் ஆசங்கை செய்
வாராஞலஇவர் அவர்கள்கண்ணுக்குச் சிறுதுரும்பாகவேனுங் கோற்று
வாரா? நாமும் பிறரும் ஆசங்கித்துப் பூர்வபக்ஷம்பண்ணின விஷயத்
துக்குச் சமாதானஞ் சொல்லாமல் ஒளிந்து மறைந்தொழுகிய சங்
கதி, பத்திரிகைகளில் பறையடிக்க, அந்த அவமானமிறையுமின்றி,
தமதுண்மைப்பெயரோடு மறுபடியும் வெளிப்பட்டு ஆக்ஷேபிக்கவரு
வது அம்மம்ம மிகுசால்புடைத்து! இந்துவாகிய எம்மை நோக்கிக்
கேட்டால் படிற்றொழுக்கம் வெளிப்படுமென்று பயந்து பொதுவாய்
ஆசங்கிக்கின்றார். இவர் ஆசங்கிக்கும் பிரதிபிம்பதிருட்டாந்தம் சித்
தாந்தமல்லவென்றும் பூர்வபக்ஷமாய்க் கண்டிக்கப்படுகின்றதென்றும்
1888ஆம் செப்டம்பர்மீ 30உ ப்ரம்மவித்யாவில் "ஓர் நண்பர்"
என்பவர் சொல்லியிருக்கிறார். சொல்லியிருப்பது சோம. நாய்க்கருக்
குத் தெரியாது எனச் சொல்லப்படாது. "ஓர் நண்பர்" பின்னையெவ
ருக்கும் சொல்லவில்லை, நேரில்இவருக்கேசொல்லியிருக்கிறார். அன்று
மறைந்தவர் அதுவிஷயமாக இதுகாறும் தலைநீட்டினாரில்லை. அது
ஒருவருக்கும் தெரியாதென இப்போது வெளிப்பட்டார்போலும்.
மறுபடியும் அங்ஙனமே மறைந்தொழுகும்படி ஷை "ஓர்நண்பர்" என்
பவர் இவர்க்கு வரைந்ததை இதனடியில் அப்படியே காண்பிக்கின்
றோம்.

'ஓர் நண்பர்' இவர்க்குக் கூறியது:—

"ஆங்காங்கு வேறுவேறு உவமானங்களுரைப்பது ஒன்றுக்
கொன்று விரோதமாயிருக்கின்றதெனப் பிரதிவாதியார் குற்றங்கூறு

கின்றார். அது அவரவர் பக்குவாபக்குவங்களை யநுசரித்து அவசர பேதமா யுரைக்கப்படுகின்றமையால் யாதுங் குற்றமின்றெனக. அதன் விவரத்தை ஆசிரியர் மாணாக்கர் இவ்விருவர் சமபாஷணையாகவைத் துச் சமாதானஞ் சொல்வாம்.

உலகமொன்றேயுளது, அது அழிவதில்லையென்னும் மாணாக்கனை நோக்கி, உலகம் காரியமேயன்றிக் காரணமல்லவென்றும், காரணமாவது எங்கும் பரிபூரணமான பரவஸ்துவேயென்றும் தாயினிடத்துப் பிள்ளை எப்படிப்பிறந்ததோ, அப்படியே பரவஸ்துவின்கண் உலகு உதித்தது என்றும் ஆசிரியர்கூற, மேலே மாணாக்கனுக்கும் ஆசிரியர்க்கும் நடக்கும் சம்பாஷணையாவது:—

மாணாக்கன்:—தாயினிடத்துப் பிள்ளை பிறந்ததுபோல் பரவஸ்துவின்கண் உலகுதிக்குமாயின் தாய்வேறு பொருள், பிள்ளைவேறு பொருள்; அன்றி இரண்டும் கண்டப்பொருள்கள். இவ்வுவமானப் பிரகாரம் உவமேயத்தைப்பார்ப்போமானால் பரவஸ்துவும் கண்டப்பொருள், உலகமுங் கண்டப்பொருளாகின்றது. இது பரவஸ்து பரிபூரணமென் றுரைத்ததற்கு விரோதமாகின்றதே.

ஆசிரியர்:—உலகமே பொருளென்றும், அதற்குக் காரணம் பிறிதொரு பொருளில்லையென்றும் கூறும் சித்தாந்தத்தை மறுக்கவேண்டி இதற்குமேல் பொருளொன்றுண்டெனத் தாய் பிள்ளையுவமானங் கூறினதேயன்றி, அதுவே சித்தாந்தமன்று. பின்னை, அது பால் தயிராவதுபோல் பரிணாமவாதமாம். தாயும் பிள்ளையும் வேறானமையினால் உண்டாகும் பரிபூரணதோஷம் பாலே தயிராவதான பரிணாமவாதத்தில் இல்லை. இவ்வுவமானத்திற்கு உவமேயாம் பரவஸ்துவே உலகம்.

மா: ஆசிரியரே! நீருரைத்த தோஷமில்லாவிடினும் வேறு பெருந்தோஷ முண்டாகின்றது. அஃதியாதெனின் பாலே தயிராவதில் பால் கெட்டுத் தயிராகின்றதென்பதாம். இவ்வுவமானப்படி பரம் கெட்டு உலகாகின்றது. அதனோ டொழியவில்லை. பால்கெட்டுத் தயிரானால் தயிர் தயிராகவே யிராது; அதுவுங்கெட்டு வேறும், அதுவுங்கெட்டுப் பிறிதொன்றுமாகி, முடிவில் இன்னதிலைமைத் தென்றுரைக்க இயலாமற்போம். அங்ஙனமே பரங்கெட்டு உலகாகி, அதுவுங்கெட்டு வேறாகி, அதுவுங்கெட்டு மற்றொன்றாகி ஈற்றில் இன்னதிலைமைத்தென்று கூற முடியாமற்போம்.

ஆ: அஃதுண்மைதான். நாம் பரிபூரணதோஷம் வாராமற்பொருட்டும், இரண்டுபொருள்க ளல்லவென்பதற்கும் பால் தயிரொன்னும் உவமானங் கூறினதேயன்றி அதுவே ஸித்தாந்தமன்று. பின்னை மண்கடம்போல் காரணகாரியமாம். மண்கெடாமல் கடமாவதுபோல் பரவஸ்துகெடாமல் உலகாகின்றது.

மா: இதிலும் தோஷமில்லாது போகவில்லை. ... விகாரப்பட்
டன்றோ கடமாகின்றது? அங்ஙனமே பரம் விகாரப்பட்டன்றோ உல
காகவேண்டும்? நிர்விகாரமான பரத்துக்கு விகாரத்துவங் கற்பிப்பது
நியாயமன்றே.

ஆ: உண்மைதான். பால்கெட்டுத் தயிராவதுபோல் மண்கெட்
டுக் கடமாவதில்லை யென்பதற்கும், தயிர் மீண்டும் பாலாகாமற்போவ
துபோலன்றிக் கடம்மீண்டும் மண்ணாகுமென்பதற்கும் இவ்வுவமான
மேயன்றி மற்றப்படி யன்று. இனி விகாரப்படாதவுவமான முரைக்
கின்றோம். அஃதாவது சூரியனும் பிரதிபிம்ப சூரியனும்போலாம். சூரி
யன் விகாரப்படாமல் எப்படிப் பிரதிபிம்பிக்கின்றானோ, அப்படியே
பரமும் விகாரப்படாமல் பிரதிபிம்பிக்கின்றது.

மா: இதிலும் சங்கையில்லாமற் போகவில்லை. பிம்பப்பொருள்
பிரதி பிம்பிக்கிறதற்கு ஆதாரமொன்று வேண்டும். சூரியன் பிரதிபிம்
பிப்பதற்கு ஜலம் எப்படி ஆதாரமோ, அப்படியே பரம்பொருள் பிர
திபிம்பிப்பதற்கு ஆதாரமொன்றுவேண்டும். எது மற்றொரு ஆதாரத்
தில் பிரதிபிம்பிக்கின்றதோ, அது அபரிபூரணப்பொருளா யிருக்கவே
ண்டுமேயன்றி, ஓர்போதும் பரிபூரணப்பொரு ளாகாது. ஜலத்தில்
பிரதிபிம்பிக்கும் சூரியனும், கண்ணாடியிற் பிரதிபிம்பிக்கும் நமதுமுக
மும் பரிபூரணப் பொருளாமா? சூரியனும் நமதுமுகமும் ஒரு இடத்தி
லும், ஜலமும் கண்ணாடியும் பிறிதொரு இடத்திலும் இருக்கின்றமை
யால் பிம்பப்பிரதி பிம்பவுவமானம் அபரிபூரணப்பொருளுக்கே பொ
ருந்துமென்ற வாறாயிற்று. இவ்வுவமானப் பிரகாரம் பரம் அபரிபூர
ணப் பொருளாகின்றது.

ஆ: பிம்பப்பிரதிபிம்ப திருஷ்டாந்தம் பரவஸ்து விகாரபடுவதில்
லையென்பதற்கு மாத்திரமே. இனிப் பரிபூரண தோஷமில்லாமைக்கு
வேறு திருட்டாந்த முரைக்கின்றோம்: அஃது கயிற்றிற் பாம்பும், கிளி
ஞ்சலில் வெள்ளியும் எப்படித் தோற்றமோ, அப்படியே பரத்தினிடத்
துச் சிற்சடமான வுலகு தோற்றுகின்றது.

மா: இதிலும் வினா நிகழ்கின்றது. கயிற்றைத் தவிரப் பாம்பு இல்
லையெனத் தெளியின் பின்னர்ப் பாம்புதோற்றுவதில்லை. உலகு கார
ணத்தையன்றி யில்லை என்றுணரினும் மீண்டும் தோற்றுகின்றது.
மண்ணையன்றிக் கடமென்னும் பொருளின்றென ஆய்ந்தறியினும் பெ
யர்த்தும் தோற்றுவதைப் பார்க்கின்றோமன்றோ?

ஆ: உலகம் பொருளல்ல வென்பதற்குமாத்திரம் கயிற்றிற் பாம்
பும் கிளிஞ்சலின்கண் வெள்ளியும் திருஷ்டாந்தமேயன்றி முற்றுமன்று.
இனி அத்தோஷமும் வாராமற் பரிகரிக்கின்றோம். அஃதியாதெனின்
கானனீராம். கானலையன்றி நீர் முக்காலத்து மின்றெனத் துணியினும்
மீண்டும் தோற்றிக்கொண்டேதா னிருக்கின்றது. அதுபோல் உலகம்
அசத்தெனத் துணியினும் தோற்றிக்கொண்டேதா னிருக்கும்.

மா: கானலினிடத்து நீரில்லையென்று தெளிந்தபின்னர்த் தோற்றினும் அது அநுபவத்திற்கு வருவதில்லை. அஃதாவது நீரை அருந்தவுசவுவதில்லை. உலகோ அவ்வாறன்று; சத்த ஸ்பரிச ரூப ரச கந்தங்கள் அநுபவிக்கப்படுகின்றன. ஆகலின் இத்திருஷ்டாந்தம் பொருந்தமுறாது.

ஆ: உலகு அசத்தென்றுணரினும் பெயர்த்தும் தோற்றும் என்பது வரையிலுமாத்திரம் கானனீர் திருஷ்டாந்தமாம். மற்றப்படி அநுபவமாகின்றதைப்பற்றி வேறு திருஷ்டாந்தம் கூறுவோம். அஃதாவது சந்நிபாததோஷத்திற் காணும் உலகும், சொப்பனவுலகும், பிறவும் போலுமாம். சந்நிபாததோஷ முதலியவற்றாற் காணும் உலகு, தோற்றமேனும் அநுபவத்தோடுங்கூடிய தோற்றமாம்.

இதனால் வேறு வேறு உவமானங்களுரைத்ததற்குச் சமாதானம் விளங்கியது."

இதுமாத்திரமா? ப்ரம்மவித்யா பத்திராதிபரும் "ஞானாமிர்த கடிதமறுப்பு" எனப் பெயரளித்து நந்தன ௵ வைகாசி ௴ ககூஉ ப்ரம்மவித்தியா அநுபந்தத்தில் கஉகூ வது பக்கத்தில் எழுதியபோது "அத்வைதிகளில் பிம்பப்பிரதிபிம்ப பாவம் ஏகதேசதிருட்டாந்தமாக, "அதைச் சித்தாந்தமாக்கி அதன்மேற் குற்றங்கூறியதையும் அத்வைத "சித்தாந்தம் அறியாதார் கூற்றெனவிட்டொழித்தோம்" என்று கூறியிருக்கின்றார்.

"சங்கராசாரியாரது அவதாரமகிமை" என்னும் விஷயம் எழுதி, இவரைப் பலவாறு நாம் மறுத்தபோதும் "மேலும் பிரதிபலித்தலென் "பது அத்துவிதிகளுடைய சித்தாந்தமன்று; பூர்வபக்ஷமாய்ச் சொல் "லப்படுகின்றது. அத்துவிதிகள் பிரதிபிம்ப திருட்டாந்தஞ் சொல் "வது பிம்பத்தைப்போல் பிரதிபிம்பம் சத்தல்லவென்பது வரையில் "மாத்திரமேயாம்; முற்றுமன்று." எனச் சமாதானமளித்திருக்கின்றாரும். இப்படிக்கெல்லாமிருக்கப் பின்னும் அதை ஆக்ஷேபமாக வைத்துக்கேட்டது சமாஜத்தாரையும் மற்ற ஏழைமதிகளையும் வஞ்சிக்கவேயாம். இவர் எல்லோரும் தூங்குகின்றார்களென நினைத்தனரோ! யாவருடைய கண்களிலும் மிளகாயத்தூளைப் போட்டுவிடலாமென்று எண்ணினாரோ! இன்னும் யாதுகருதி இப்படிப்பட்ட பித்தலாட்டஞ் செய்கின்றாரோ அறிந்திலேம்! அத்துவிதிகளே பிம்பப்பிரதிபிம்பவாதத்தைப் பூர்வபக்ஷம்பண்ணிக் கண்டித்திருக்க, இவருங் கண்டிக்கப் புறப்படுவது வெற்றெனத் தொடுத்தலாம்; அன்றிச் செத்தபாம்பைப் பெருந்தடிகொண்டடிப்பதற்குச் சமானமுமாம். இவ்வளவு நியாயம் பேசவந்த இவருடைய சித்தாந்தத்தைச் சற்று ஊன்றிப்பார்ப்போம். இவர் பிரமாணமாகக்கொண்ட சிவஞானபோதம் எட்டாஞ்சூத்திரம் இரண்டாமதிகரணஞ் ஐந்தாவது வெண்பாவில் "நீர் நிழல்போல்

இல்லா அருவாகி நின்றனை" என்பதில் நீர் ஸ்தானத்தில் ஜீவனையும் நிழல் ஸ்தானத்தில் சிவனையும் கூறி யிருப்பதோடு, சிவஞான சித்தியார் ஆறாஞ்சூத்திரம் ௯வது செய்யுள் சிவஞான சுவாமிகள் உரையில் "அவ்வளவே கூறுவாரை நோக்கி அவ்வழிவினுள்ளாக நீர் நிழல்போல் ஒற்றித்து நிற்றல்பற்றி உயிரே சிவமெனும்படி யொன்றாதல் பெறும்" என்றுங் கூறியிருக்கின்றது. இதில் சிவனை நிழலாகச் சொல்லியிருப்பதால் சிவன் பொய்யாய்ப் போகின்றார். அத்வைதிகள் ஜீவனைப் பிரதிபிம்பமாகச் சொல்லுகின்றார்களென்றும் அப்படிச்சொல்வதுகூடாதென்றும் கூறுமிவர்மதத்தில் சிவனையே பொய்யான நிழல்போல் சொல்லியிருக்கின்றதே. இதற்கு யாது விடைபகர்வார்? அத்வைதிகள் ஜீவனைப் பொய்யென்று சொல்லுகின்றார்களென்றே வைத்துக்கொள்வோம். இவர் சிவனையே பொய்யென்று சொல்லுகின்றவராகின்றாரே. அத்வைதிகள் சிவனைப் பிம்பஸ்தானத்திலும் ஜீவனை நிழல் ஸ்தானத்திலும் வைக்கின்றமையால் ஜீவனுக்கு நாசம்வந்தாலும் சிவனுக்கு நாசமில்லை; இவர் மதத்தில் ஜீவஸ்தானத்தில் நீரையும் சிவஸ்தானத்தில் நிழலையும் வைக்கின்றமையால் ஜீவனுக்கு நாசமில்லாமையும் சிவனுக்கு நாசமுடைமையுமாம்.

கடமுடைந்தால் பிரதிபிம்பம் இல்லாமற் போய்விடுதல்போலச் சரீரம்போனால் ஜீவனில்லாமற்போமென்கின்றாரே. அங்ஙனமாயின் கடமுடைந்தால் நீரும்போய் நீரினதுநிழலும்போதல்போலச் சரீரம்போனால் ஜீவனும் சிவனும் இல்லாமற் போய்விடுவார்களே. இந்தப் பரிதாபத்திற்கு யாதுசெய்வது!

அத்வைதமதத்தில் சிவனைப் பிம்பஸ்தானத்தில் வைக்கின்றமையின் சிவன் யதார்த்தம்; ஜீவனை நிழல் ஸ்தானத்தில் வைக்கின்றமையால் ஜீவன்பொய். இவரது மாயாவாத துவித சைவசித்தாந்த மதத்தில் ஜீவனை நீர்ஸ்தானத்தில் வைக்கின்றமையால் ஜீவன் யதார்த்தம்; சிவனை நிழல் ஸ்தானத்தில் வைக்கின்றமையால் சிவன் பொய். அத்வைதிகள் சிவனை யதார்த்தமென்று சொல்லுகின்றமையால் ஆஸ்திகரும், இவரும் இவர் மதக்கொள்கையை மெய்யென நம்புபவரும் சிவனைப் பொய்யென்று சொல்லுகின்றமையால் நாஸ்திகருமாகின்றார்கள். அத்வைதிகள் பிம்பப்பிரதிபிம்ப வாதத்தைப் பூர்வபக்ஷமாய்ச் சொல்லியிருக்க, அதைச் சித்தாந்தமாக்கித் துன்மார்க்கதனமாய்த் தூஷிக்கப்போய்த் தமதுமதத்தை நாஸ்திகமதமாக்கிக்கொண்டு தாமும் நாஸ்திகமதக்குழியில் விழுந்திடர்ப்பட்டார். பிறர்க்கு வெட்டினகுழி தமக்கே லபித்ததுபோலும்! தாம் நாஸ்திகராய்ப்போனாலும் போகின்றோம், பிறர்மதத்தில் ஜீவனைப் பொய்யென்றுசொல்லி ஸ்தாபித்தால் போதுமென்கின்றாரோ! அங்ஙனமாயின் தனது மூக்குப்போனாலும் போகட்டும்; பிறர்க்கு அபசகுனம்வந்தாற் போதுமென்று தனது மூக்கையறுத்துக்கொண்டு உதிரப் பிரவாகத்தோடு அண்டை

வீட்டுக்காரனுக்குஎதிரேசெல்லும் பொறுமைப் புத்தியுடையவனுக்கு இவர் சிறிதுந் தோல்வி யடைந்தவ ரல்லர். இப்படிப்பட்ட நாஸ்திகர், ஆஸ்திகமதவேடம்பூண்டு ஆஸ்திகர்போல் பேசுவது என்னபயனைக்கருதியோ! யதார்த்தத்தில் நாஸ்திகரும் அயதார்த்தத்தில் ஆஸ்திகருமான விந்தச் சோமசுந்தர நாய்க்கரை யதார்த்த ஆஸ்திகரென மருண்டு அவரைக்கொண்டு பொய்ப் பத்திரமெழுதி வெளிப்படுத்தியது அவமானமாமென்க. வேதாந்திகள் பிரம ஸ்தானத்தில் சூரியனையும் நீர் ஸ்தானத்தில் அவித்தையையும் பிரதிபிம்ப ஸ்தானத்தில் ஜீவனையும்வைக்கின்றமையால் பொருந்திப்போம். அவ்வாறு சித்தாந்திகளுக்குச் சொல்ல விடமில்லையே. சித்தாந்திகள் நீர் ஸ்தானத்தில் ஜீவனையும் நிழல் ஸ்தானத்தில் சிவனையும் சொல்லுகின்றார்கள். சூரியன் ஸ்தானத்தில் எந்தப்பொருளை வைக்கின்றார்கள்? அதற்கு ஒன்றையுங் காணோமே. சூரியனில்லாமல் நீரின்கணிழலுண்டாமா? இந்த ஆக்ஷேபத்திற்கு யாது சமாதானந் தேடினார்? பிறர்மதத்தைப் பரிசீலனை செய்யும்போது இவர்க்குப் பல நேத்திரங்களிருக்கின்றன போலும்! தம்மதத்தைப் பரிசீலனை புரியும்போது உள்ள கண்களும் குருடாய்ப் போகின்றனபோலும்! உபமான மேகதேசமாகவின் அது கொண்டு சிவனைப் பொய்யென்று சொல்லப்படாது; சிவன் மறைந்திருக்கின்றான் என்பதுவரையில் திருட்டாந்தமென்னின் அவ்வாறே சிவனைப்போல ஜீவன் முக்காலசத்துப்பொருளல்ல, சத்துப் போலிப் பொருள் என்பதுவரையில் திருட்டாந்தம் என்று ஏன் கொள்ளப்படாது?

இவர் உருவமற்ற பிரமம் பிரதிபலிப்பது கூடாதென்கிறாரே. இப்படிச் சங்கைபண்ணு மிவர், அரூபமான சிவன், ரூபியான சிவனடியாராய் வந்தார் அல்லது வருவார் என்கிறாரே. இதுமாத்திரம் பொருத்தமாயிருக்கின்றதா? இதைப்பற்றிச் 'சங்கராசாரியாரது அவதாரமகிமை' யில் ஆக்ஷேபித் திருக்கின்றோமே. அதற்கேதேனும் வாயைத்திறந்தாரா? இவரதுமாணக்கர் ம-ா-ா-ஸ்ரீ நல். சுப்பிரமணிய முதலியாரா லியற்றப்பட்டு இவரால் பிரசங்கிக்கப்பட்டு வெளியான பிரஹ்மதரிசினியென்னு மோர் சிறு சஞ்சிகையில் "பரமாத்மா ரூபம் "அரூபம் ரூபாரூபம் என்னும் மூன்றுவடிவங்களையு முடையதாக "வின், அதனை ஸங்கர்ப்பத்துக்கேற்றபடி வேதம் படிக்கின்றது....... "........ அது உருவமாயிருந்தாலும், அருவமாயிருந்தாலும் அத "ற்கு ஏற்றத் தாழ்வு கிடையாது. பிறருக்கு உபகரித்தலால் அவர "வர்போன்றும், அவையவைபோன்றும் அந்தப் பரமாத்துமா வர்த் "திக்கும். அப்படி வர்த்திக்குங்கால் உருவம், அருவம், உருவருவம் "என்னும் மூன்றுவடிவங்களையும் கொள்ளும். இம்மூன்றுவடிவங்க "ளும் பிரமமேயாகையால், இவைகளில் ஒன்றைப் பிரமமெனவும், "மற்றவைகளைப் பிரம மல்லவெனவும் யாம் வாதிக்கமாட்டோம்......

"பரமாத்மா ரூபம் அரூபம் ரூபாரூபம் என்னுங் கோலங்களையுடை
"யதாகப் பிரகாசித்தலே வேதமுடிவாயிற்று" என்று கூறியிருக்கின்
றதே. இன்னும் திருவிளையாடற் புராணத்தில் பன்றிக்குட்டிகட்காக,
உருவமற்றசிவன், பன்றிஉருவெடுத்துப் பால்கொடுத்ததாகச் சொல்
லப்பட்டிருக்கின்றதென்பதை யறியாதார் யார்? இவைகளுக்கெல்
லாம் என்ன சமாதானம் தேடினர்? உருவமற்ற சிவன் இவர்க்கு மா
த்திரம் உருவமாவதென்பதும் பிறர்க்குமாத்திரம் ஆகாதென்பதும்
என்ன நியாயம்? உருவமற்ற பிரமம் பிரதிபலிக்காதென்னின் உருவ
மற்ற பிரமம் பலவுருவுகளாவதும் அதிலும் பன்றியுரு வெடுப்பதும்
கூடுமா? இதைச்சுட்டிச் 'சங்கராசாரியார் அவதாரமகிமை'யில் பல
வகையாக விவரை மறுத்திருக்கின்றோம். ஆண்டுக் கண்டு தெளிக.
இதுநிற்க,

ஞானவடிவானசிவன் அஞ்ஞானவடிவான தேகேந்திரியாதிக
ளோடுங் கூடிச் சிவனடியாராய் வருவாரென்பதைப்பற்றிச் 'சங்கரா
சாரியர் அவதார மகிமை' யில் நாம ஆக்ஷேபித்த ஆக்ஷேபத்துக்குப்
பதில் பேச நாவின்றிப் படிற்றொழுங்கம் பூண்டது எவருமறிந்ததன்
றோ? ஆதலால் அதுபற்றி இங்குப் பேசாதுவிட்டோம். இதுவும்நிற்க,
அரூபமான மாயையினின்றும் ரூபமான வுலகுண்டாவது மாத்திரம்
இவர்க்கு எப்படி நியாயமாகத் தோற்றுகின்றதோ? இவர்க்குமாத்
திரம் அநியாயம் நியாயமும், பிறர்க்குமாத்திரம் நியாயம் அநியாயமு
மா? "மாமியார்உடைத்தால் மண்கலம், மருமகளுடைத்தால் பொன்
கலமா?" உருவமற்ற பிரமம் பிரதிபலிப்பது கூடாதென்னு மிவர்
மதத்தில் உருவமற்ற ஜீவனது நிழலாய்ச் சிவனைச் சொல்வதுமாத்
திரங்கூடுமோ? நீர் உருவமாகலின் அதற்கு நிழலிருப்பது கூடும். ஜீவன்
உருவமற்றதாயிற்றே. அதற்குநிழலாகச் சிவனைச் சொல்வது எங்ஙன
னங் கூடும்? தமது மதத்தில் மாத்திரம் அருவப்பொருளான ஜீவனி
னின்றும் நிழலுண்டாகலாம்; அத்வைதமதத்தில் மாத்திரம் அருவ
ப்பொருளான பிரமம் பிரதிபிம்பிக்கக்கூடாதோ? கடம் நசித்தால்
பிரதிபிம்ப சந்திரன் அழிந்துபோவதுபோல ஜீவன் நசித்துப்போமென்
றும் பிறகு ஜநநமரண சொர்க்கமடைவது கூடாதென்றும் கூறியதும்
ஆபாசமாம். இவரதுமதத்தில் ஜீவாத்துமாக்கள் தனித்தனிப் பூர
ணம். இப்படிப்பட்ட ஜீவாத்துமாக்கள் இவர் மதப்படி நீக்கமின்றி
யெங்கும் பூரணர்களாகவிருப்பதால் போக்குவரத்துச் செய்ய முடி
யாது. முடியாதபோது நரகத்திற்குப் போவதெங்கே? சொர்க்கத்
திற்குச் செல்வதெங்கே? கைலாசத்திற்கு எழுந்தருளுவதெங்கே?
பின்னும் பூமியில் வருவதெங்கே? தீர்த்தயாத்திரை ஸ்தலயாத்திரை
செய்வதெங்கே? ஒவ்வொரு ஆத்துமாக்களும் அகண்டபூரணமாயிரு
க்கும்போது இவருடைய ஆத்துமாவும் அங்ஙனமே யிருக்குமன்றோ?
அங்ஙன மிருக்கும்போது இன்னொருஆத்துமா இருக்க இடம் எங்கு

ளது? மற்ற ஆத்துமாக்கள் இருக்க விடமில்லாதபோது அநேககோடி ஆத்மாக்கள் இருக்குமென்கை அவசித்தாந்தமாய்ப்போமன்றோ? அங்ஙனமாக மற்ற ஆன்மாக்களின்பொருட்டுப் பிரசங்கஞ் செய்வோமென்ப தெங்ஙனமாம்? இவரதாத்துமா பரிபூரணமாயிருக்கும்போது இவர் அயலூருக்கு ஏன் பிரசங்கஞ்செய்யப் போகவேண்டும்? இவரதான்மா பரிபூரணமாயிருக்கும்போது கயிலாயாதிபதவிகளை யடையச் சரியையாதிகளேன் செய்யவேண்டும்? இவரதான்மா கயிலாயாதிபதவிகளில் இல்லாமற்போனாலன்றோ அங்குப் போக முயலல்வேண்டும்? இவரதான்மா பூரணமாகிறபோது சரீராதிகளிருக்க விடமெங்கே? சரீராதிகளிருக்கு மிடம் வரையில் ஆன்மா விலகியிருக்குமோ? விலகியிருக்குமென்றால் விலகுவதற்கு இடம் வேண்டுமே. இடமிருந்தால் கண்டப்பொருளாய்ப் போவதன்றி, ஆன்மா வியாபகமென்னும் சித்தாந்தம் அவலசித்தாந்தமாய்ப்போமே. குடமழிந்தால் பிரதிபிம்ப சந்திரன் வேறு கடத்திற் புகாதவாறுபோல, சரீரமழிந்தால் ஜீவன் வேறுசரீரத்திற் புகான் என்று சொல்லி ஆசங்கிக்கும் இவர், இதைக்குறித்துத் தமது மதசித்தாந்தத்தை யேன் ஆராயவில்லை? பூரணஆன்மா, ஒருசரீரத்தைவிட்டால் மற்றொருசரீரம் புகுமா? ஆன்மா பரிபூரணமாகிறபோது ஒன்றைக் கொள்வதெங்கே? விடுவதெங்கே? இன்னொருசரீரத்திற் பிரவேசிப்பதெங்கே? எல்லாம் பொய்யாகும்போது மறுபிறப்பெங்கே? மோக்ஷநரகசொர்க்கமெங்கே? இப்படிப்பட்ட அபசித்தாந்தத்தை வைத்துக்கொண்டு பிறர் சித்தாந்தத்தில் தோஷங் கூறப்புகுவது அறியாமையன்றோ? திருட்டாந்தத்தில் சந்திரன் ஒருபொருள், சந்திரன் பிரதி பிம்பிப்பதற்கிடமான நீர் ஒருபொருள், ஆக விருபொருளும் சத்து. அத்வைதிகள்மதத்தில் பிரமம் ஒரேபொருள். அவித்தைபொருளல்ல; குணமாம். அதிலும் தோற்றல்மாத்திரமான அவாந்திர அநிர்வசனீயசக்தி. ஆதலால் தாட்டாந்தமானபிரமம் பிரதிபிம்பித்ததென்பது சித்தாந்தமன்று. பிம்பப்பிரதிபிம்பங்கட்கு இருபொருள் சத்தா யிருக்கவேண்டுவதின்றியமையாமை. அத்துவிதிகள் இரண்டுபொருள் சத்தாய் ஒப்புவதில்லை. ஒன்றே சத்தென்கிறார்கள். பிரமம் ஒன்றே சத்தியமென்று சொல்வதாய் இவரும் சைமாயாவாத பொய்ப்பத்திரத்திற் சொல்லியிருக்கின்றார். ஆதலால் அப்பிரமம் வேறொரு பொருளிற் பிரதிபலித்த தென்பது பூர்வபக்ஷமாம். ஜீவன் கற்பித மென்பதற்காகச் சொல்லப்பட்ட திருட்டாந்தங்கள் பலவற்றினுள்ளும் பிம்பப் பிரதிபிம்ப திருட்டாந்தமும் ஒன்றாம். பிம்பப்பிரதிபிம்ப திருட்டாந்தமே அத்வைதிகளுக் குடன்பாடானால் அதற்கு மாறாகக் கயிற்றரவு, கானனீர், இந்திரசாலம், சொப்பனவுலகு முதலிய திருட்டாந்தங்கள் கூறவேண்டுதென்ன? அவை ஒன்றுக்கொன்று விரோதமானவைக ளாயினவே. ஒன்றுக்கொன்று விரோதமர்ன பல திருட்டாந்தங்கள் கூறியிருக்கும்போது, அவைகளையெல்லாம் விட்டுவிட்டு, அவற்றி லொன்றைமாத்திர மெடுத்துத்

குற்றங் கூறுவது அத்வைத சித்தாந்தம் அறியார் கூற்றேயாம். அத்
வைதிகள் பிம்பப் பிரதிபிம்பவாதம் பகர்ந்தது ஜீவன் கற்பிதமென்
பதற்காக மாத்திரமென அதன் விசேஷத்தை யிவரறிந்திருந்தால்
அத்வைதிகளுடைய எல்லையில் இவர் கால்வைக்க அஞ்சி, மற்றவை
களுக் கோடிப் போனதுபோல இதற்கும் ஓடிப்போவார்.

ஜீவான்மா பிரமத்தின் பிரதிபிம்பம் என்பதில் குற்றங்கூறும்
இவரது மதத்தில் ஜீவான்மாக்கள் சிருட்டிக்குமுன் மாயையில் அட
ங்கி, சிருஷ்டிகாலத்தில் வெளியாமெனச் சொல்வதுமாத்திரம் பொ
ருந்துமா? ஜீவான்மா மாயையில் அடங்குகிறதென்னின் மாயை
புரையுள்ளதாக வேண்டும். அப்போது மாயையின் இடையிடையில்
அனேககோடி புரைகளிருந்து அவற்றில் ஜீவான்மாக்கள் அடங்கி
யிருக்கவேண்டும். ஜீவான்மாக்கள் சிருஷ்டிகாலத்தில் வெளியே
வரும்போது அந்தப்புரைகள் அப்படியேயிருக்குமோ? அடைந்துபோ
மோ? அடைந்துபோமென்னில் எதனாலடையுமோ தெரியவில்லை.
ஜீவான்மாக்கள் மாயையினின்றும் வெளிப்பட்டுவிட்டால் பிறகு
ஜீவான்மாக்க ளிருக்குமிடத்தில் மாயையும் மாயை யிருக்குமிடத்
தில் ஜீவான்மாக்களு மில்லையென்றாகி, யாவுங் கண்டப் பொருளாய்ப்
போம். ஜீவான்மாக்களும் அகண்டம், மாயையும் அகண்டமெனச்
சொல்லும் இவரது சித்தாந்தத்துக் கிஃதுடம்படாமா? அன்றி
ஜீவான்மாக்கள் ஞானசொரூபிகள், மாயையோ அஞ்ஞான வடிவம்.
அஞ்ஞானப் பொருளானது ஞானப்பொருளை அடக்கிவைத்திருக்கு
மென்பது, இருளானது சூரியனை அடக்கிவைத் திருக்கின்றதென்பத
ற்கு ஒப்பாயிருக்கின்றது.ஜீவான்மாக்கள் தனித்தனி அகண்டமெனக்
கூறும் மதப்பிரகாரம் இந்தச் சோ. நாய்க்கரது ஆன்மாவே அகண்ட
மானதால் மற்ற ஆன்மாக்க ளிருக்க விடமில்லாமற்போம். மற்ற ஆன்
மாக்களே யிருக்கவிடமில்லாமற் போம்போது அகண்ட சிவனிருக்க
விடமெங்ககப்படப்போகின்றது? சிவனுக்கே தாம்பூலம்பிடித்துச் சிவ
னே யில்லையெனச் சொல்லுவதற் கிடனு மிவர்மதப்பிரகாரம் இவர்
நாஸ்திகராகாமல் தப்புவரோ? இவர் நாஸ்திக ராகிறபோது இவர் கட
வுளை வணங்குகிறேனென்று சொல்வதும் நாஸ்தியல்லவா? இவரைத்
தவிர வேறுபொரு ளில்லாமையால் இவரே கடந்த பொருளாகி, இவ
ரை யிவர் வணங்குவதோடு போகாமல், தம்மை வணங்கவே பிறர்க்
கும் பிரசங்கஞ் செய்கிறாரென வேற்படுகின்ற தல்லவா? இவர், தம்
மைக் கடவுளெனச் சொல்லாது சொல்லி மற்றவரை யேமாற்றிவரும்
கொடியபாதகம் இவரைவிடுமா? இரணியன் பட்டபாடும், தக்கன்
பட்டபாடும் இவரறிந்திலரோ? இப்படிப்பட்ட பொய்ம்மதத்திற் றும்
புகுந்து கெட்டுப்போனதுமன்றி, பிறரையுங் கெடுக்கப் பார்ப்பது
மூக்கறுப்புண்டவன் அவமானம் பொறுக்கமாட்டாமல் பிறரையும்
மூக்கறுக்கப்பார்த்த கதைபோலாமென்க. இப்படிப்பட்ட பரமநாஸ்

திகரென வறியாது, அவரைப் பரம ஆஸ்திகரென மதித்து, அவரைக் கொண்டு இலகுலேகம் எழுதிவித்து அச்சிட்டது தூத்துக்குடிச் சமாஜத்தாருக்குப் பெரியதோர் இழுக்காம்!

அத்வைதக் கொள்கையில் பிம்பப் பிரதிபிம்ப வாதம், ஆரம்ப பரிணும காரண காரியவாத முதலிய வாதங்களெல்லாம் பூர்வபக்ஷம்; சித்தாந்தம் விவர்த்தவாதமேயாம். (விவர்த்தவாதஞ் சொலலாவிடில் பிரமப்பொருள் அபரிபூரண தோஷத்தை யுடையும். அத்வைதிகள் என்ன பேசினுலும் பிரமத்துக்கு அபரிபூரணத்வம் வராதபடி பேசுவார்கள்.) அந்த விவர்த்தவாத திருஷ்டாந்தங்களாகிய கயிற்றரவு, கானனீர், இந்திரஜாலம், சொப்பனவுலகு முதலியவைகளுக்குள் சொப்பன வுலகே சித்தாந்தம். சொப்பனவுலகில் பல ஜீவர்கள் உண்டாதல்போல, பிரமத்தினின்றும் ஜாக்கிரஜீவர்க ளுண்டாகின்றுர்களென் றறிந்திருந்தால், கடமழிந்தவுடனே பிரதிபிம்பசந்திரன் அழிவதுபோல, தேகம் அழிந்தவுடனே ஜீவனழிந்து போவானென்றும் பிறகு மறுபிறப்பு ஜநநமரண சொர்க்கங்கள் இல்லையென்றுஞ் சொல்லத் துணியார்.

திருநெல்வேலி பொன்னைமாநகரம் கவிராஜ அழகிய நம்பியா பிள்ளை அவர்கள் குமாரர் ஆரியங்காவுப் பிள்ளையென்பவ ரியற்றியச்சிடுவித்த "பெரியர் அற்புதத்திரட்டு, சைவசித்தாந்த நவநீதம்" என்னும் நூலில் அவர் கேட்ட விணவிடை வருமாறு:—

"விஞ:—ஆன்மாக்கள் எங்கும் வியாபகராக விருக்க எவ்வாறு சரீரத்தைப் பற்றுவர்?

விடை:—படிகமலையானது எந்தப் புறத்தில் வன்னத்தைக் கொடுத்தாலும் பற்றிக்கொள்வதுபோல எல்லாப் புவனங்களிலும் வியாபகராக விருக்கின்ற ஆன்மாக்கள், கடவுள் எந்தப் புவனத்திலே சரீரத்தைக் கொடுத்தாலும் பற்றிக்கொள்வர்."

இதனுல் ஒவ்வொரு ஜீவான்மாக்களும் எவ்வுலகிலுமிருக்கிறுர்களெனத் தெரிகின்றது. இதன்படியே பரிபூரண ஆன்மாவின் ஓர்மூலையில் இருக்கும் ஆணவ இந்திரிய அந்தக்கரண சரீரங்களைக் கொண்டு போய் வேறோர் உலகில் அங்கிருக்கும் ஆன்மாவின் ஓர் பாகத்தில் அமைக்கும் ஈசுவரன், அத்வைதத்தின்படி அவித்தை, ஜீவன், இந்திரிய, அந்தக்கரணங்களைப் பிறிதோர் உடலில் அமைக்கமாட்டாரா? ஈசுவரன் இவருக்குமாத்திரம் அமைப்பதும் மற்றவர்க்கு அமைக்காது கைவிடுவதும் என்னே! ஜீவர்களுக்கு அவரவர் கருமத்தின்படி தநு கரண புவனபோகங்களைக் கொடுப்பிப்பதும் புசிப்பிப்பதும் தொலைப்பிப்பதும் ஈசன் செயலன்ரு? ஒரு சரீரத்தில் கொண்டுவந்து புகுவித்த ஈசன், மற்றொரு சரீரத்தில் கொண்டுபோய்ப் புகுவிப்ப தருமையோ!

### கைவல்லியநவநீதம் தத்துவவிளக்கம்.

ஏமமாயாவினோத வீசனாருளினாலே
பூமலியுயிர்கட்கெல்லாம் போகசாதனமுண்டாகத்
தாமதகுணமிரண்டு சத்தியாய்ப்பிரிந்தொன்றும்
வீமமாமூடலென்றும் விவிதமாந்தோற்றமென்றும். (௩௫)

அதுதானெப்படியென்றக்கா லநாதியாஞ்சீவரெல்லாம்
பொதுவானசுழுத்திபோலப் பொருந்துமவ்வியத்தந்தன்னில்
இதுகாலதத்துவப்பேர் ஈசனுட்பார்வையாலே
முதுமூலசுபாவம்விட்டு முக்குணம் வியத்தமாமே. (௨௧)

இந்த வேதாந்தநூற் பிரமாணங்களாலும் அதனுண்மை யுணர்ந்திடுக.

பிம்பப் பிரதிபிம்பவாதம் பூர்வ பக்ஷமாயிருந்தாலும் அத்வைதிகள், தாங்களே சொல்லுகின்றார்களா? பொதுவாய் யாவரும ஒப்புக்கொள்ளத்தக்க வேதமுதலிய பிரமாணங்களோடு சொல்லுகின்றார்களா? என்னின் வேதமுதலிய பிரமாணங்களோடு தான் சொல்லுகின்றார்க ளென்பதற்கு அடியில வரும் பிரமாணங்களே சான்று பகரும்.

ஜீவன் பிரதிபிம்பன் என்பதற்கும் கற்பிதனென்பதற்கும் வேதமுதலிய நூற்பிரமாணங்கள் வருமாறு:—

ஸாமவேதத்தில் மைத்திராயண்ணி யுபநிஷத்

௪ - வது பிரபாடகம்.

மாயோபாதியையும் தனக்குள்ள அவித்தியோபாதியையும் தள்ளித் தானே ப்ரம்மமென்று உபாசிப்பானாகில் பிராரப்தமாகியஇத்தேகம் இருக்கையிலேயே முக்தனாகிறான்.

௫ - வது பிரபாடகம்.

இதுதான் ஆத்மாவினுடைய ஓரம்சம். (கடாகாசம்போல்) இந்த அம்சமானது சேதனமாத்திரமாக விருக்கிறது. ஒவ்வொரு பிராணியிடத்திலும் (அனேக ஜல பாத்திரத்தில் சூரியன்போல) பிரதிபிம்பமா யிருக்கின்றது. அதுதான் க்ஷேத்திரக்ஞன். (பாதமுதல் சிரசுவரை தேகத்தைத் தானே என்று அறிகிறவனாகியஜீவன்.)

யசுர்வேதத்தில் ஸர்வஸாரோப நிஷத்.

அதில் பிரதிபலித்துப்பிரகாசித்துக்கொண்டிருக்கிற சைதன்னியமானது க்ஷேத்திரக்ஞனெனப்படுகிறான்.

சூதசங்கிதை சூதகிதை

பரமவிஞ்ஞான முரைத்த அத்தியாயம்.

முன்னுமவித்தையாற் பசுபேதமும் மொய்வலிய மாயையாற்
பன்னுபர தத்துவபேதமுங் கற்பிக்கப்பட்டது வான்
மன்னு தேகேந்திரியாதி வாசனை பேதத்தாலே
பின்னுபேதமா மவித்தைபேசு பசு பேதத்திற்கும். (௬)

அவித்தியாவுபாதி, துன்னவுண்டாயிருக்கும்
சீவவிபாகத்திற் சேர்ந்தவரலர் சொல்லின் (உஉ)

ஷை சருவசாத்திர சங்கிரகமுரைத்த அத்தியாயம்.

உன்னுபர தத்துவமுபாதி பேதத்தாலே
பன்னுஜீவான்மா பரான்மாவென் றிருவிதமாய்
மன்னுமவற் றுட்சீவர் மருவியிரு வினைகளோடு
துன்னுசமு சாரிகளா யிருப்பரெனச் சொல்லுவரால் (எ)

பிரமகீதை கடவல்லி சுவேதாசுவதர உபநிடதம்.

ஏயபேருலகில் வினைப்பய னுகர்ந்தங்கிதயமேமருவுவாரிருவர்
சாயையாதபமாகின்றனர் சீவசங்கரரொன்றிடத் தருவா
ரோயுமாறற வேயுண்பவன் சீவனூட்டுவோன்சிவனிவர்தமக்கிங்
காயபேதந் தானுபாதியால் வந்ததல்ல தபேதமே யாகும். (கூ)

மகா இதிகாசமாகிய சிவரகசியம் ஆறுவது அம்சத்திலுள்ள

ரிபுகீதை கக-வது அத்தியாயம்.

சீவபர சகத்தெனவே காண்பதெல்லாம்
சின்மயமாம் பிரமத்திற் கற்பிதந்தான். (உ௰)

காசிகாண்டம்

சிவசன்மா தேய்வலோகங்கண்ட அத்தியாயம்.

இலகொளிய கதிரொன்றாயிரம் புனல்பெய் குடங்கடொறு மியைந்து நாளும், அலகில் பலவுருவாகித் தோன்றுதல்போற் சராசரங்களனைத்து மாகி. (சகூ)

ஆரியப்புலவரியற்றிய பாகவதம்

கக-வது கந்தம் ச-வது ஆசிரியனை யுரைத்த அத்தியாயம்.

அருவமாமறிவானவ னுக்கைகள்பலவும்
ஒருவனுகியே யுறைகுவனென்பதை யுணர்ந்தேன்
பரிதிவானவன் ஒருவனேயாய்ப் பலகடத்தின்
மருவுநீர்தொறுநிழல் பலவாயுறன்மதித்தேன். (க௦)

ஷை ரு-வது ஞானகன்ம முரைத்த அத்தியாயம்.

சீவனுமீசன்றானுஞ் செப்பியவாக்கைதோறும்
மேவுவருபாதியாலே விழைந்தநல்வின்பதுன்பம்
தாவிலாச்சீவனுண்ணுஞ் சார்ந்துண்ணுந்தன்மைவெய்யோன்
பூவுலவாவிநீருட் பொருந்திநின்றசைதல்போலும். (கரு)

இப்படிப்பட்ட சற்பிரமாணங்க ளெல்லாம் ஜீவனைப் பிரதிபிம்ப னென்றும் கற்பிதனென்றுங் கூறுகின்றமையால் சோம. நாயகருடைம வாதம் பயனில் வாதமாயும் பிரமாண விரோதமாயும் முடிந்தமை காண்க.

பிரம்ம அகண்டமாகலின் அதற்குவேறாய் ஒருபொருளில் பிரதிபிம்பித்தல் கூடாதெனக் கூறுகின்றாரன்றோ? இது உண்மைதான். இதற்கு விடை யிறுக்கவேண்டுவது அத்வைதிகள் கடனே. இவரது

வினவுக்கு அத்வைதிகள் விடையிறுக்கக் கடமைப்பட்டபோது அவர்
கள் வினவுக்கும் இவர் விடையிறுக்கவேண்டுமே. இவர்மாத்திரம்
ஓடி ஒளித்துப் படிற்றொழுக்க விரதத்தைப் பூணலாமோ! இவர் மத
ப்படி இவரது ஆன்மா அகண்டமானபோது பிறிதொரு ஆன்மா விரு
க்க விடமேது? பிறிதொரு ஆன்மாவே யிருக்க விடமில்லாதபோது
பல கோடாகோடி ஆன்மாக்க ளிருக்க விடமேது? ஆன்மாக்களே
"நீயும் அகண்டம், நானும் அகண்டம், நானிருக்கிறவிடத்தில் நீயெப்
படி யிருக்கக்கூடும்? நீயிருந்தால் நானிருக்க விடமின்றே; நானெங்
கே போவேன்?" என வொன்றுக்கொன்று வாதுபுரிந்து சண்டை
போட்டுக்கொண்டு இருக்க விடமின்றி அவஸ்தைப் பட்டுக்கொண்டி
ருக்கும்போது சிவனிருக்க விடமேது? சிவனே யிருக்க விடமின்றித்
திண்டாட்டப்படும்போது அஞ்ஞானம் இருக்க விடங் கிடைக்குமா?
அஞ்ஞானம் இருப்பதற்கே யிடங்கிடைக்காதபோது அது ஆன்மாக்
களை மறைக்குமென்று கூறுவதும் அவ்வஞ்ஞானத்தைச் சிவன் ஒழி
ப்பாரென்பதும் அது ஒழிதற்குச் சரியையாதிகள் செய்யவேண்டு
மென்பதும் வெற்றுரையே யன்றிச் சத்துரையாமா? இவர் மதப்
படி நீர்ஸ்தானத்தில் ஆன்மாவையும் நிழல்ஸ்தானத்தில் சிவனையுங்
கூறுவதில் ஆன்மாவும் சிவனும் தனித்தனி அகண்டமாகலின் அவ்வி
ரண்டில் ஒன்று நிழலாயும் ஒன்று நிழற்பொருளாயும் இருத்தல் கூடு
மா? அகண்ட பரிபூரணமான வொருபொருளின் நிழலாக, ஒருஅணு
வு மிருக்க இடனில்லாதபோது அகண்ட பரிபூரணப் பொருளிருக்கு
மென்றுரைப்பது நியாயத்திற் கிணங்குமா? இணங்காமையின் இவ
ரது சித்தாந்தம் தப்புச்சித்தாந்தமாய்க் கழிந்துபோயிற்றென்க.

இனி இவரதாசங்கைக்கு அத்வைத சித்தாந்தப்படி நாம் உத்த
ரங் கூறுகின்றோம். கேட்பாராக. அகண்டமான ஆகாயத்தில் அடங்
கியிருந்த வாயு தேயு அப்பு பிருதிவிகள் ஷை ஆகாயத்தினின்றும்
சிருட்டிகாலத்தில் தோன்றி ஷை வாயுவாதிகளிலொன்றான (பிருதிவி
யின்காரியமான) கடத்தில் இருக்கும் ஷை வாயுவாதிகளிலொன்றான
நீரில் ஷை ஆகாயம் பிரதிபலித்தலேயாம். இதைப்போலவே பிரமத்
தில் அடங்கியிருந்த மூலப்பகுதியின் ரஜோகுணமான அவித்தை
யானது வெளிப்பட்டு அதில் பிரமம் பிரதிபலித்த தென்க. அந்
தப் பிரதிபலனமே ஜீவனென்பதாம். பிரமத்துக்கு வேறாய் ஒரு
பொருளிருந்து அதிற் பிரமம் பிரதிபலிக்கவேண்டு மென்கிறாரே. இது
என்ன விவேகம்! இச் சோ. நாய்க்கர் சொல்லுகிறபடி பிரமம் பிரதி
பிம்பிப்பதற்குப் பிரமத்திற்கு வேறாய் ஒரு பொருள் அவசியமில்லை.
ஆகாயத்திற்குள் அடங்கியிருந்து அதற்குமீறாமல் அதனின்றுந் தோ
ன்றிய நீரில் அவ்வாகாயம் பிரதிபலிக்க வில்லையா? அவ்வாறே பிரம
மும் தன்னிடத்தினின்றும் வெளிப்பட்ட அவித்தையிற் பிரதிபலித்த
தென்றால் குற்றமென்னை? வேதமுடிவான வுபநிஷத் புராணம் கீதை

முதலியவற்றில் பிரமத்தின் பிரதிபலனம் ஜீவனென்று கூறியிருப்ப தின்பொருளை யிவர் அறிந்திலராகலின் அதன்பொருள் விளங்க 'குரங்கெறி விளாங்காய்' கதையாய்க் கேட்டுத் தெரிந்துகொள்ளப் பார்க்கின்றார். இப்படிக்கெல்லாம் கேட்டு ஆகிறதா? யான் எனதென்னுஞ் செருக்கை யொழித்து வைராக்கிய வுபரதி சீலராய்ப் பிரமாநுபூதி பெற்ற ஞானவான்களுக்குத் தொண்டுபூண் டொழுகி, அவரது திவ்விய சந்நிதானத்தில் நெடுநாள் காத்திருந்து சிரவணஞ் செய்தால் மாத்திரம் வேதாந்தத்தின் உண்மைப்பொருள் விளங்குமேயன்றி, வேத வேதாந்தங்களையும் அவைகளுக்கிணங்கிய நூல்களையும் ஞானவான்களையும் சதா தூஷித்துத் திரிபவர்க்கு அதன்பொருள் விளங்குமா? விளங்காது விளங்காது! ஒருபோதும் விளங்காது!!

திருத்தொண்டர் புராணத்தில் சொல்லப்படும் அடியவர்களி லொருவரான சுந்தரமூர்த்திசுவாமிகள், பரமசிவனுடைய பிரதிபிம்பமாய்ச் சொல்லப்படுகின்றதென்ப திவ ரறியாத தன்று. பரமசிவன் கண்ணாடியைப் பார்த்தபோது அதிற் றோற்றிய பிரதிபிம்பம் மிகச் சுந்தரமாயிருந்ததாகவும் அதைநோக்கிச் "சுந்தரா இங்கு வா" வென்றதாகவும் அவ்வாறே அது வந்ததாகவும் அந்தப் பிரதிபிம்பந்தான் சுந்தரமூர்த்திசுவாமிக ளென்பதாகவும் கூறப்பட் டிருக்கின்றனவன்றோ? அதை யிவர் ஒத்துக்கொள்ளாமற் றீராது. பிரமத்தின் பிரதிபிம்பம் ஜீவனெனச் சுருதியாதிகள் சொல்லியும் அதை யொத்துக்கொள்ளாமல் அவைதிகராய் நின்று வேதவிரோதமாய் ஆக்ஷேபிப்பவர் பரமசிவனுடைய பிரதிபிம்பம் சுந்தரமூர்த்திசுவாமிகளென விவர் அங்கீகரிப்ப தெங்ஙனமோ அறியேம்! நிற்க, சமாஜத்தார்க்கு எழுதிக்கொடுத்து அச்சிடுவித்த மாயாவாசகத் தப்புச் சிறுபத்திரத்தில் வேதாந்திகளைக் கண்டிக்க 'இந்தச் சந்திரபிம்பம் கடத்தில் சத்தியமானதன்று' என்கின்றார். இதன்படியே சுந்தரமூர்த்திசுவாமிகளும் கண்ணாடியில் சத்தியமன்று, அசத்தியமேயாம். இவர் 'இது அந்தக் கடத்தினின்றுந் தாண்டி வேறுகடத்திற் புகுதமாட்டாது' என்கின்றார். இஃதுண்மையாயின் சுந்தரமூர்த்திசுவாமிகளும் அந்தக் கண்ணாடியைவிட்டுத் தாண்டி வேறுகண்ணாடியிற் புகமாட்டார். புகமாட்டாராகவே பரமசிவன் கூப்பிட்டபோது கண்ணாடியினின்றும் வெளிப்பட்டு வந்தாரென்பதும் அவர் சாபத்திற் கிலக்கானாரென்பதும் பிறகு பூமியில்வந்து பிறந்தாரென்பதும் அவர் கலியாணஞ் செய்துகொள்ளவிருக்குஞ்சமயத்தில் பரமசிவன் வந்து தடுத்தாட்கொண்டாரென்பதும் அவர் தலங்கடோறுஞ்சென்று தேவாரம் பாடினாரென்பதும் பரவை சங்கிலியாரை மணந்தாரென்பதும் அனேக அற்புதங்க ளியற்றினாரென்பதும் இறுதியில் சேரமான் பெருமாளுயனாருடன் கைலைக்குச் சென்றாரென்பதும் அவ்விடத்தி லிப்போது மிருக்கின்றா ரென்பதும் இந்தப் புத்திமானுடைய ஆசங்கையின்படி பொய்யினும் பொய்,

சுத்த பொய்யாகின்றது. இவைகள் பொய்யாம்போது பெரியபுராணம்
திருநாவலூர்ப் புராண முதலிய புராணங்களும் பொய்யாம். இவை
கள் பொய்யாம்போது இப்படிப்பட்ட பொய்த் திருத்தொண்டர்
புராணத்துக்குப் பரமேசுவரன் "உலகெலாம்" என அடியெடுத்துக்
கொடுத்தாரென்பது எங்ஙனம் உண்மையாகும்? இவைகளெல்லாம்
இங்ஙனமாங்கால் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடியருளப்பட்டன
வென்னுந் தேவாரப்பதிகங்கள் மாத்திரமுண்மையாமா? இதன்மேல்
'அந்தக் கடமுடைந்தவழி அத்தோடே போய்விடுவதாம்' என்றார்.
இங்ஙனமே பரமசிவனால் பார்க்கப்பட்ட கண்ணாடியுடைந்தவழி அத்
துடனே சுந்தரமூர்த்திசுவாமிகளும் இல்லாமற் போய்விடுகின்றனர்.
"இல்லாதவற்றை நிலையினவென்றுணரும் புல்லறிவாண்மை கடை"
என்றபடி காணப்பட்ட பொருளெல்லாம் அழிந்துபோகுமாகலானும்
"உணருருஅசத்து" என்றும், "யாவையுஞ் சூனியஞ்சத்தெதிராகலின்"
என்றும் கூறியபடி கைகண்ணாடி யொருகாலத்தில் அழிந்துபோதற்
கிலக்காதலானும் அசத்தாதலுமாய்ப் போமாகலானும் பிரதிபிம்ப
மான சுந்தரமூர்த்திசுவாமிகள் இல்லாமற்போவதோடு அசத்தாயும்
போவாரென்பது திண்ணம். வேத வேதாந்த புராணாதிகளைத் தூஷிப்
பதில் மகா வல்லவரானவிந்தச்சோமசுந்தரநாயகர் இதன்பேரில் 'வேறு
கடமொன்று ஆண்டுக்கொணர்ந்திடின் அந்தச் சந்திரபிம்பம் அதிற்
றோன்றுமெனின், வேறுகடத்திற்றோன்றிய சந்திரபிம்பம் மூலசந்திர
னுடையதேயன்றி உடைந்த கடபிரதிபிம்ப சந்திரனுடையதன்று'
என்கிறார். இவ்வண்ணமே வேறுகண்ணாடியொன்று ஆண்டுக் கொ
ணர்ந்திடின் அந்தப் பிரதிபிம்ப சுந்தரமூர்த்திசுவாமிகள் அந்தக் கண்
ணாடியிற் றோன்றுமெனின், வேறு கண்ணாடியிற்றோன்றிய பரசிவ
னது (சுந்தரமூர்த்திசுவாமிகளாகிய) பிரதிபிம்பம் மூலசிவனுடைய
தேயன்றி யுடைந்த கண்ணாடியின் (சுந்தரமூர்த்திகளாகிய) பிரதிபிம்
ப மன்று. இத்துணையும் வெகு நல்ல அருத்தங் கூறியதாய்க் கருதி
யிதன்மேல் 'இதனைப் பரியாலோசிக்கையில், (வேதாந்திகள்) மாயா
வாதஞானிகள் மறுபிறப்பை யொப்புதற்கிடமில்லை' என று பகர்கின்
றார். சிவனது பிரதிபிம்பம் சுந்தரமூர்த்திசுவாமிகள் என்னும் விஷ
யத்தை யாம் பரியாலோசிக்கையில் கண்ணாடியிற் பிரதிபலித்த சுந்
தரமூர்த்திசுவாமிகள் கண்ணாடியைவிட்டு வெளிப்பட்டுப் பரசிவன்
சந்நிதானத்திலிருந்து சாபம்பெற்று இப்பூமியின்கண் மற்றொரு பிறப்
பெடுத்து அதாவது சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் புத்
திரராகி மானிட சரீரமெடுத்தாரென் றொப்புதற் கிடமில்லை யென்ப
தாம். இவ்வாறே மற்றைய ஆசங்கையுங் கொள்க.

அத்வைதிகள் பிம்பப்பிரதிபிம்பவாதம் பூர்வபக்ஷமாய்க் கூறு
கின்றனரேயன்றிச் சித்தாந்த மன்று. அவ்வாறு இந்தச் சோமசுந்தர
நாயகர் பிரதிபிம்ப சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பூர்வபக்ஷமாய்ச்

சொல்ல விடமில்லை; அது சித்தாந்தமே யானமையானென்க. ஆதலால் இவரே விடையிறுக்கவேண்டுவ தவசியம். இந்தச் சோமசுந்தரநாய்க்கரை நோக்கி யெவராவது: "சிவனது பிரதிபிம்பம் சுந்தரமூர்த்திசுவாமிகள் எனச் சொல்லியிருக்கிறதே, அங்ஙனமாயின் பிரதிபிம்பம் பொய்யானவாறு சுந்தரமூர்த்திசுவாமிகளும் பொய்யாய்ப் போகவேண்டுமே, பொய்யாய்ப் போகும்போது, சுந்தரமூர்த்திசுவாமிகள் புராணமும் பொய்தானே, அது பொய்யாகும்போது திருத்தொண்டர் புராணந் திருநாவலூர்ப் புராணமுதலிய புராணங்களும் பொய்தானே, அப்படிப்பட்ட பொய்ப் புராணத்தை மெய்ப்புராணம் போல் பிரசங்கிப்பது கற்றவர்க்கழகாமா? அத்துடன் அதனிமித்தம் இவ்வளவெனக் காசுபெறுவதும் பரிசு பெறுவதும் நியாயமாமா? பிரதிபிம்பமான பொய்ப்புராணத்தைச் சொல்லிவிட்டு, பிம்பமான மெய்க்காசையும் மெய்ப்பரிசையும் பெறுவது தருமமா? நீர் கண்ணாடியிற் பிரதிபிம்பித்த பொய்ப்புராணத்தை மெய்யென்று சொல்வதுபோல் நாமும் பணத்தையும் மற்றப் பரிசுகளையும் கண்ணாடிமுன் வைக்கின்றோம், கண்ணாடியிற் பிரதிபலித்த ஷை பணத்தையும் பரிசையும் பெற்றுக்கொள்ளும், நீர் பொய்ப்புராணத்தைச் சொன்னால் நாம் பொய்ப் பணத்தையும் பொய்ப் பரிசையுந்தருகின்றோம், நீர் யதார்த்த புராணத்தைச்சொன்னால் நாமும் யதார்த்த பணத்தையும் யதார்த்த பரிசையுந் தருகின்றோம், நீர் பொய்யைக்கொடுத்து மெய்யைப்பெறுவது நியாயமன்று, இனி நீர் பிரதிபிம்ப பொய்ப்புராணஞ் சொல்லுகிறவரையில் நாமும் பிரதிபிம்ப பொய்ப் பணத்தையும் பொய்ப் பரிசையுந்தான் றருவோம், இதுவரையில் ஏமாற்றிப் பணத்தையும் பரிசையும் பெற்றதுபோல் இனிப் பெறமுடியாது, நாம் இப்போது விழித்துக்கொண்டு சாக்கிரதையா யிருக்கின்றோம், இதற்கேதேனும் சமாதானமுண்டானால் கூறும்" எனக் கேட்டிருக்கவேண்டும். அதற்கு விடைகூற முடியாமல், "அத்வைதிகள் ஜீவர்களைப் பிரதிபிம்பமாகக் கூறுகின்றார்க ளல்லவா? அவர்களைக் கேட்டால் பதில் கூறுவார்கள், அதையே சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கும் சொல்லிவிடலாம், இல்லாவிடில் புராணப் பிரசங்கத்துக்கு நம்மை யெவருங் கூப்பிடமாட்டார்கள் கூப்பிடாதபோது அதனால் வரும் பயனுமில்லாமற் போம், அப்படி அத்வைதிகளைக் கேள்விகேட்கிறதாயிருந்தாலுந் தெரியாதுபோல் கேட்கப்படாது, 'குரங்கெறிவிளங்காய் கதை'யாய்க் கேட்கவேண்டும்." எனத் தந்திரவெண்ணத்தோடு, அத்வைதிகளை ஷை கேள்வி கேட்டிருக்கவேண்டும். இந்த உள் உளவு தெரியாமல் தூத்துக்குடி சைவசமாஜத்தார், அவருடைய வெளிவேடப் பொலிவைக் கண்டு பிரமித்து ஏமாறிப் போனார்கள் போலும்! ஐயோ பாவம்!

இனிச் சுந்தரமூர்த்திசுவாமிகள்மாத்திரம் பிரதிபிம்பமல்ல, அவருக்கு மனைவிகளாயிருந்த பரவையாரும் சங்கிலியாருங்கூடப் பிரதிபிம்பங்கள்தான். அவர்கள் கைலாயத்தில் பார்வதி தேவியார் கண்ணாடியை நோக்கியபோது தோன்றிய விரண்டுபெண்களை அழைத்து அவர்களுக்குக் "கமலினி" "அநிந்திதை"யெனப் பெயரளித்தனர். அவர்கள்தான் சாபம் பெற்று இப்பூமியில் வந்து பரவையாராகவும் சங்கிலியாராகவும் பிறந்து சுந்தரமூர்த்திசுவாமிகளை விவாகஞ்செய்து கொண்டது. சோ. நாய்க்கர் பிரதிபிம்பம் பொய்யென்று கூறுகிறபடி சுந்தரமூர்த்திசுவாமிகள் பொய்யாவதோடு, அவரது பத்தினிமார்களான பரவையாரும் சங்கிலியாரும் பொய்யாகின்றார்கள். இவ்வாண் பெண் பிரதிபிம்பங்களுக்கு எப்படி விவாகம் நடந்ததோ அறிந்திலேம். ஒவ்வொருமுறையிலும் சுந்தரமூர்த்திசுவாமிகள் சரித்திரப் பிரசங்கத்தில் பரவையார் கலியாணமும் சங்கிலியார் கலியாணமும் வந்திருக்கலாமன்றோ? அவ்வப்போது இவர்க்கு எவ்வளவோ காசும் வந்திருக்கலா மன்றோ? காசுவருஞ் சமயத்தில் சுந்தரமூர்த்திசுவாமிகளும் பரவை சங்கிலியாரும் பிரதிபிம்பங்களென்றும் பிரதிபிம்பங்களெல்லாம் பொய்யென்றும் யொய்யானமையால் கலியாணம் நடந்ததும் வெறும் பொய்யென்றும் சொல்லியிருப்பாரோயானால் ஒரு காசுகூட வந்திராது. அப்போது காசுநிமித்தம் மெய்யென்று பிரசங்கித்துவிட்டார். இப்போது வேதசாஸ்திர விஷயத்தில் காசு அகப்படாமையினால் அவைகளில் சொல்லிய பிரதிபிம்ப ஜீவர்களைப் பொய் யென்கிறார். இவர்க்கு வேதசாஸ்திரங்கள் வேண்டாம், காசே வேண்டும். காசு வருகிறதானால் வேதசாஸ்திரங்களிற்கூறிய பிரதிபிம்ப ஜீவர்களை மெய்யென்று சாதிப்பார். அப்படி இவர்க்குப் பணங்கொடுத்து ஜீவர்களை மெய்யென்று ஸ்தாபித்துக்கொள்ளும் அத்வைதிகள் எவருமில்லையே!

சுந்தரமூர்த்திசுவாமிகளும் பரவைசங்கிலியாரும் பிரதிபிம்பங்களென்பதற்குப் பிரமாணங்களாவன:—

திருநாவலூர்ப்புராணம்

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவவதாரச்சருக்கம்.

ஒருதினமாடியிற்றன்னொளிகெழுவிம்பநோக்கிச்
சுருதியோர்நான்குங்காணத் தூயவெம்பெருமானிங்கு
வருதியென்றுளமகிழ்ந்து மலர்முடியசைக்கமுன்னந்
திருவருள் பெற்றுவாழுஞ் சிவகணங்களிற்சிறக்க. (கஉ)

சுந்தமாமலரோனுளகாலமுஞ்
சிந்தைசெய்துஞ்சிருஷ்டிக்கமைவுறு
அந்தமுற்றுந்திரண்டுருவாகியே
சுந்தரன்னெனத் தோன்றினன் அண்ணல்முன் (கங)

பம்பரம்போற்பருப்பதமத்தகங்
கும்பமென்னக்குவிந்தகுயத்துணை
யம்பிகைவிளங்காடியிற்றன்னுரு
விம்பந்தன்னைவிழிகொண்டழைத்தனள் (கரு)

மும்மலமதகற்றியடிமுன்னுமவருக்கே
யமலமெனுமுத்தியருளத்தனிடமேவும்
விமலையிருதாடொழுதமெல்லியர்தநாமங்
கமலினியநிந்திதையெனக்கழறினுரால் (கசு)

இனி வேததூஷகரும் வேதப்புறமதஸ்தருமான விச் சோ. நாய்க்கர், வேசமுதலிய கலைகளை அத்வைதிகள் திருடியதாகச் சொல்லுகிறுர். இப்படிச் சொல்லிவிட்டதால் இவரை வேதப்பிரமாணீகரென்று சொல்வார்களென நினைக்கின்றுராக்கும்! அத்வைதிகள் வேதமுதலிய பதினுன்கு பிரமாணங்களுக்குக் கட்டுப்பட் டொழுகுகின்றுர்களென்றும் அவைகளுக்கு இம்மிகூட மீறிநடக்கவில்லையென்றும் இவரும் இவர் சமயத்தவருமே வேதத்தையும் வேதாவிரோதமான மற்ற நூல்களையும் இகழ்ந்து தூஷிக்கின்றுர்களென்றும் ஆதலால் இவர்கள் வேதபாஹியரென்றும் பிரத்தியக்ஷமாய் ஒவ்வொரு முறையிலும் வேதமுதலிய சாஸ்திராதாரத்தோடு காட்டிவந்திருக்கின்றேமாதலாலும் அத்வைதம் உண்மையென்பதற்கும் பிரமாணமென்பதற்கும் எல்லோரும் பொதுவாய் ஒப்புக்கொள்ளத்தக்க வேதமுதலிய பதினுன்கு நூல்களை நாமும் பிறரும் பிரமாணமாகக் காட்டியதுபோல இவரோனும் இவர் சமயத்தவரோனும் காட்டாமல் இவர்சமயத்தவர் எழுதிய நூல்களையே (அதாவது பொதுவென அங்கீகரிக்கத்தகாத நூல்களையே) பிரமாணமாகக் காட்டுகின்றமையாலும் அன்றி யுக்தி அநுபவங்களென்றுல் வெகுகாததூரம் ஓடுகின்றமையாலும் அன்றி ஒளிந்து பதுங்குகின்றமையாலும் அத்வைதிகளுக்கு வைதிகரென்றும் ஸ்ரௌதிகள் என்றும் வேதாந்திகளென்றும் பேரிருக்கின்றமையாலும் அதனுலேயே வேதப்பிரமாணவாதிகளென நிதர்சனப்படுகின்றமையாலும் இவர் வேதத்தையும் வேதத்தை அநுசரித்த நூல்களையும் தூஷிப்பது உலகப்பிரசித்தமாதலாலும் இப்படிப்பட்ட வேதபாஹியர் :சுத்த வைதிகர்களும் சிரௌதிகளும் வேதாந்திகளுமான அத்வைதிகளை வேதமுதலிய கலைகளைத் திருடியதாகச் சொல்வது பாமரர்களும் அருவருக்கத்தக்க பெரும் பொய்வசனமாமென்க. இப்படிப்பட்ட பொய்நிறைந்த வழுவாசக மெழுதும் இவரை நாமென்னெனக் கூறுவோம்!

பின்னும் தாம் வேதபாஹியரொன்றே சத்தியஞ்செய்து உறுதிமொழி கூறுதற்குப் பதிலாக "குடாகாய மகாகாய முதலிய வுவமைகள் தேடுவதும் இவ்வாறே யழிகின்றனவென்க" என்கிறுர். இப்படிப் பேசும் துன்மார்க்க தனத்திற்கு ஷை வேதமுதலிய பிரமாணங்களையே சாக்ஷியாகக் கொடுத்து அவர் வாயைத் தம்பிக்கச்செய்வாம்,

## வராகோபநிஷத் உ - வது அத்தியாயம்.

தேகமே ஆத்மாவென்பதை விட்டு ஜகத் வியவகாரத்தில் விகாரமற்றவனாய் ஓரே நிஷ்டையாயிருக்கும் நிலைமையினாலே யுள்ளேயிருக்கிற ஞானத்தில் மாத்திரம் ஆசையுள்ளவனாக ஆய்விடு. மகாகாசத்தில் கடாகாசம் மடாகாசம்போலச் சிதாகாசமாயிருக்கிற என்னிடத்தில் ஜீவேசுவரர்கள் கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள்.

## சுக்கில யசுர்வேதத்தில் முத்திகோபநிஷத்
## உ-வது அத்தியாயம்.

(உ) உபாதிநிவர்த்தியான (மறைவு போய்விட்ட) கடாகாசம்போலப் பிராரப்தம் நசிக்கிறதினாலே விதேகமுத்தி.

## கூர்மபுராணம் சாங்கியயோகமுரைத்த அத்தியாயம்.

நித்தியமாகுமான்மா ஏகமாய் நிகழ்த்துமாயா
சத்தியாய் அளப்பில்பேத மாமுறு பேதஞ்சாற்றில்
வைத்தநீர்க் குடங்கடோறுந் தோன்றிடு மதியம்போல
வுய்த்திடு முபாதிதன்னாற் பற்பல வுருவந்தோன்றும். (கள)

## சூதசங்கிதை ஞானயாக வைபவமுரைத்த அத்தியாயம்.

மல்லவான்மா பலவாய்த் தோன்றுவதுஞ் சிவான்மா பரான்மாவெனும்
பேதந் தோன்றுமதுவுஞ், சொல்லலுறினு பாதியாலன்றி மாமுனிவீர் சுபா
வத்தினின் றஃதெப்படியென்னிற் கேண்மின், வல்லகடமுதலாய வுபாதிசம்
பந்தத்தால் வான்பேதமாய்த் தோன்றுமதுபோலுமுணர்வீர், செல்லலில் வே
தாந்த வாக்கியங்களெலாம் பரமசிவ னொருவனேயென்னத் தெரிவிக்கு
நாளும். (உ.ச)

## சூதசங்கிதை சமாதிவிதி யுரைத்த அத்தியாயம்.

பெருகுறு பரமானந்தப் பேரொளி யொன்றேயேனு
மொருவிறன் மாயையாலே யுறப்பலபேதமாகிக்
கருதும்வான் மடாகாசஞ்செய்கடாகாச மாயினாற்போற்
றிருகற விளங்குமுண்மை தெளிதரிற் பேதமின்றே (ச)

## பிரமகீதை சாந்தோக்கிய வுபநிடதத்தின்
## எ-வது அ-வது அத்தியாயம்.

பின்னகடாகா யாதிகளாலா காயமபேதம் பேதமுறுதே
யன்னவனேகா காரனேகா காரவகம்புக் காலுமனைத்தா
மன்னியபேதா காரமபேதா காரமுமாய்மா தேவனிரானே
வின்னதெனுமத் தானெனு மாறெனி யாவையு மீசானன். (கக)

## ஆரியப்புலவர் பாகவதம் கக - வது கந்தம்
## ச-வது ஆசிரியரையுரைத்த அத்தியாயம்.

கண்ணகன்றிடு மிடத்துளவான் கடத்துளவான்
எண்ணநின்றன போகவொன்று யியைந்ததனால்
பண்ணுகின்றதன் மாயையிற் பற்பலபடைப்பாய்
கண்ணுகின்றவும் பிரமமொன்றுரு வெனவறிந்தேன். (அ)

உறைவுறாவிட னின்றெனவுறையும் வானொன்றால்
குறைவுறாவகை கண்டதிற்கூறு மொன்றாலும்
மறைவுறாதொரு குறையுமன்னது மற்றெங்கும்
நிறைவுறாதவை காதெனநினைந்தனன் பிரமம். (௧)

ஷை ௧௨-வது கந்தம் பரிட்சித்து
வீடுபெற்ற அத்தியாயம்.

கடத்துறைவானுமக் கடமுடைக் கின்வான்
இடத்தொடு மொன்றுபட் டிருக்குமாறுபோல்
சடத்துறை யுயிருமச்சடந் தணக்கினீங்
கடக்கரும் பரத்தினொன் றாகிவைகுமே. (௫)

மகா இதிகாசமான சிவரகசியத்தில் ஆறாவது அம்சம்
ரீபுகீதை ௩௫ - வது அத்தியாயம்.

கடமடமென் றுணர்வுற்ற வுபாதிநீக்கிற்
கடவிண்ணு மடவிண்ணு மொன்றேபோல
மடமைமுதல் சீவபர வுபாதிநீக்கின்
மாசற்ற சீவ:பர மிரண்டுமொன்றென்
றிடமருவு மூகத்தாற் பரசீவைக்ய
வியல்புதனை யிருமையற வறிந்தேயத்தா
லடருமகண் டாகார சொரூபமாகி
யசஞ்சலமா யான்மாவி லமர்ந்துநிற்பாய். (௨௧)

பகவற்கீதை ௧௫-வது பிரபஞ்ச அத்தியாயம்.

குடந்தொறுந் தோன்றுகின்ற வாகாயமுங் குலைதற்கேற்பத்
தடம்புன றோறுந்தோன்றுஞ் சந்திரன் றானுமென்ன
வுடம்புக டோறும்வேறா யுயிரென நின்றேயந்த
விடம்படு புலன்களாறு மியல்பினி லியற்றுவேனான். (௧௨)

இன்னும் அவர் அசத்துரைகூறி அவலமாவதைக் காட்டுவாம். அத்துவிதிகள் அகம் பிரமமென்று கூறுகின்றனரென்றும் ஒவ்வொரு மாயாவாதி (அத்வைதி) யும் தேகச்சுமை சுமந்திருக்கக் கண்டோமென்றும் பிரமம் சுமையற்றதென்றும் தேகச்சுமை தாங்குவது பிரதிபலனப்பிரமமேயன்றி அதிஷ்டானப் பிரமமன்றென்றும் அதிஷ்டான பிரமமல்லாத தான் அகம்பிரமமென்பது கூடாதென்றும் பிரமம் அவ்வாறு கூறிக்கொள்ளாதென்றும் அவ்வாறு கூறிக்கொள்வதற்கு அதற்கு வாக்குமுதலிய கரணங்களுமில்லையென்றும் பேசித் தமது தெரியாமையை யெனது கையெழுத்துடன் யாவரும் பாருங்கள் எனக் காட்டிக்கொண்டார். இவைகளுக்கெல்லாம் 'சங்கராசாரியரது அவதாரமகிமை'யில் விடைகூறிவிட்டோம். அவைகளைப் பூர்வபக்கஞ்செய்து, அதன்மேல் தமது நியாயத்தைக் காட்டுதலொழிந்து அதையே மறுபடியு மெழுதித் தொந்தரவு கொடுக்கின்றார். அகம் பிரமமென்பது சுருதிசம்மதம். அதுமாத்திரமா? ஸ்மிருதிகளின் சம்மதமுமாம். அதுமாத்திரமா? புராணங்களின் சம்மதமுமாம். அதுமாத்திரமா? இதிகாசங்களுக்கும் சம்மதமாம். அதுமாத்திரமா? சகல

கீதைகளுக்குஞ் சம்மதமாம். அதுமாத்திரமா? ஆகமங்களுக்குஞ் சம்மதமாம். அதுமாத்திரமா? ஞானவான்களுக்கெல்லாமுஞ் சம்மதமாம். அன்றி யுக்தி அனுபவங்கட்கும் பொருத்தமாம். இங்ஙனமாக இதற்கு மாறாகப் பேசுதல் புறமதத்தவர் செய்கையேயாம். இதுவிஷயமாக இதுகாறும் ப்ரம்மவித்யாவில் ஒன்றரை வருஷங்களாகச் சுருதி யுக்தி அநுபவங்கட் கொத்துப்பேசி அனேக ப்ரமாணங்களுங் காட்டி யிருக்கின்றமையின் இங்கு விசேஷமாய்ப் பேசுவ தநாவசியகமென்று விட்டொழித்தோம். அல்லாமல் வேதாந்த மகாவாக்கியத்தின் இரண்டாவது வாக்கியத்தில் அகம் பிரமத்தைத் தாபித்தலால் அகம் பிரமமென்பது வேதத்துக்குடம்பாடான வைதிகவாக்கியமேயாம்.

அகம் பிரமவாதம் வேதாகம இதிகாசபுராணாதிகட் குடன்பாடென்பதற்குப் பிரமாணங்கள் வருமாறு:—

யசுர்வேதம் கைவல்லியோபநிஷத்.

அது பிரமமே. அது நானேயென்றறிந்தால் சகலபந்தத்தினின்றும்விடுபடுகிறான்......சாக்ஷியாயுஞ் சின்மாத்திரமாயுமிருக்கிற சதாசிவன் நான்தான். ......அந்த அத்வயமான பிரமம் நானே.

ஸாமவேதத்தில் மைத்திரேயோபநிஷத்

உ-வது அத்தியாயம்.

அதிலிருக்கிற ஜீவனானவன் சிவனே.

௩-வது அத்தியாயம்.

நானுயுமிருக்கிறேன்; அந்நியனுயுமிருக்கிறேன்; பிரமமாயுமிருக்கிறேன்.

ருக்வேதத்தின் ஆத்மபோதோபநிஷத்.

நான்ஜகத் ஈசுவர ஜீவபேதமற்றவன்......நான் இரண்டாவதற்றவன்.

அதர்வணவேதத்தில் நாரத பரிவிராஜகோப நிஷத்

ரு-வது உபதேசம்.

அந்தப்பிரமமே நான் என்று உச்சரிக்கவேண்டியது.

சுக்கில யசுர்வேதத்தில் பைங்களோபநிஷத்.

நானே பிரமமென்றிருக்கிறது மகாத்துமாக்களுக்கு மோக்ஷஹேதுவானது......நானேபிரமமென்றறியாதவனுக்கு முத்தியுண்டாகிறதில்லை.

முக்திகோபநிஷத் உ - வது அத்தியாயம்.

பூரணமாயிருக்கிற பிரமம்நான்.

ஆரியப்புலவர் பாகவதம் ௩-வது கந்தம்

கருத்தமன்மணம்புரிந்து கபிலர்ப்பெற்ற அத்தியாயம்.

ஈரனும் வேறியங்குயிரும் வேறெனு
நேசமுற்றெனை நினைப்பவற்கு மீசற்கும்
பேசுபல்லுயிர்க்கு மோர்பேத மில்லெனும்
மாசிலாதவற்கும் வந்தொன்று முத்தியே. (ருரு)

திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம் திருக்கழுமலம் திருத்தாளச்சத்தி பல்லவியாளக்குறிஞ்சி.

சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்த மெய்ப்பரம்பொருள் சேர்வார்தாமே தானாகச் செயுமவனுறையுமிடம். (எ)

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.

நீயாகி நானாகி நேர்மையாகி.

பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி.

அஷ்டவர்க்கிரர்கீதை

முதலாவது உபதேசஅதிகாரம்.

வாரும் பிள்ளாய் புத்திரா! நீ தேக அபிமானமென்கிற பாசத்தினாலே கட்டுப்பட்டாய், இனி நான் பிரமமென்கிற வாளினாலே அந்தப் பாசத்தை யறுத்துச் சுகத்தையடை.

விஷ்ணுபுராணம் முதலம்சம்

பிரகலாதர் தோத்திரஞ் செய்தது.

நானு மவனாகவே யிருக்கிறேன்.

திருவாசகம்.

சித்தமல மறுவித்துச் சிவமாக்கி.

திருமந்திரம் நின்மலாவத்தை.

தானே சிவமானதன்மை தலைப்பட.

ஷை ஞானோதயம்.

நானென்றுந் தானென் றிரண்டில்லை.

ஆகமவாக்கியம்.

பாசபத்ததேஜீவா பாசமுத்ததே சதாசிவா.

சர்வசாக்ஷி சிவோகம்.

தேகச்சுமையைச் சுமந்திருப்பது பிரமமல்ல; இந்திரிய அந்தக்கரண ஜீவர்களாம். பிரமத்தில் அவாந்திரமா யுள்ள மூலப்பகுதியின் ரஜோகுண அவித்தையென்னும் பின்னுசத்தியி னின்றும் தோன்றியவர்கள் ஜீவர்கள். தமோகுணத்தின் சத்துவ ரஜோ பாகத்திலிருந்துண்டானவை அந்தக்கரண இந்திரிய வாயுக்கள்; தமோபாகத்திலிருந்துண்டானது தேகம். இவைகளுக்குப் பிரத்தியேகமாய்த் தாக்கத்திருப்பது பிரமம். அப்பிரமம் ஷை தேகாதிகளைத் தாங்கவு மில்லை; தாங்கவு மாட்டாது; தாங்குவதாக எந்த அத்வைதநூல்களாவது எந்த அத்வைதிகளாவது சொல்லவு மில்லை. அதிஷ்டான பிரமமல்லாதஜீவன் சத்துப்போலியா யிருப்பதால் தன்னைச் சத்தான பிரமமென வொருபோதுஞ் சொல்லமாட்டான்; சொல்லவு மில்லை; சொல்லும்நூல்களு மில்லை. அரவுக்குக் கயிறு பொருளாயிருப்பதுபோலவும் சொப்பன

வுலக ஜீவர்களுக்கு மனம்பொருளாயிருப்பதுபோலவும் சாக்கிரவுலக
ஜீவர்களுக்குப் பிரமம்பொருளாயிருப்பதால்ஜீவனே பிரமமெனவொ
ருவிதத்திற் சொல்ல நியாய மிருக்கின்றது. சொல்லும் அவசரபேத
த்தையுணராமல் தடுமாறி விபரீதப்படுவது இப்போதுமாத்திரமன்று,
என்றுமிவர்க்கியல்பாம். "மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம்
பேய்" என்பதொக்க,மருண்டபுத்தியுடையவிவர்க்குஒன்று பிறிதொன்
றாய்த் தோன்றுகின்றது. பிரமம் நான்பிரமமெனச் சொல்வதாய் ஒரு
வருஞ் சொல்லவில்லை. பிரமம் வாக்கு மனோதீதப்பொருளாகலின் அது
ஒருபோதுஞ் சொல்லாது. சொல்வதாய் எந்த அத்வைதநூல்களில்
கண்டார்? எந்தஅத்வைதிகள்சொன்னார்கள்? சொன்னாலன்றோ அதை
மறுக்க விவர் வரவேண்டும்? ஆனால் முத்திநிலையில் ஜீவத்துவமிற
ந்து பிரமமாத்திரமாய் நிற்கின்றது. இதையே சகல வுபநிஷத்துகளுங்
கூறுகின்றன. அங்ஙனம் பிரமமாத்திரமாய் நிற்காமல் ஜீவனும் பிரமத்
தைப்போல் சத்தாய்இருக்கின்றானென்னின் அப்போது இரண்டுசத்துப்
பொருளெனப்பட்டுப் பிரமுஞ் சிவனும் கண்டப்பட்டுப்போம். ஜீவன்
கண்டப்படுவதில்குற்றமில்லை. பிரமங்கண்டப்படுவது ஒருபோதுமொ
வ்வாது. பிரமத்தில் பிரமத்தைப்போலச் சத்தாய் வேறுபொருளிரு
க்குமென்று சொல்லும்பக்ஷத்தில் பிரமத்துக்கு அபரிபூரண தோஷ
முண்டாமேயெனப் பலர் பன்முறை ஆக்ஷேபஞ்செய்ததற்கு இவரே
னும் இவர்வகுப்பாரேனுஞ்சமாதானஞ் சொன்னார்களில்லை. வாயைத்
திறந்தால் அகப்பட்டுக்கொள்வேமென மௌனவிரதம் பூண்டார்கள்.

இனிவேதம் பசுநூல், மயக்கநூல், உலகநூல், விபசரிக்கும்நூல்
எனச்சொல்லிநிந்தித்தபெரும்பாதகங்களையெல்லாம் காரியத்தினிமித்
தம் தற்காலம் ஒருபக்கம வைத்துவிட்டு இப்போது "இவ்வான்மா
வைப் பிரமமென்று கொள்ளுங்கால் பிரமம் போக்குவரத்தில்லாதது
என்னுஞ் சுருதி பொய்ப்பட்டுப்போம்" என்று கூறிச் சுருதியை
வெகுகௌரவம் பண்ணுவதுபோல் பேசி நடிக்கின்றார். இத்துணையும்
இவர் பேசியவை யாவும் சுருதியாதிகளுக்கு விருத்தமெனக் காட்டி
வந்தோமன்றோ? இவ்விஷயத்திலும் அங்ஙனமே அவைகளுக்கு விரோ
தமாகவே பேசுகின்றாரென்பதைக் காட்டுகின்றோம். ஆன்மாவென்
றும், சிவனென்றும், பிரமமென்றும் சொல்வது சச்சிதானந்தப்பொ
ருளையென நாம்காட்டியிருப்பதோடு வேதாந்தி என்பவர் "சித்தாந்தி
களும் ஏகாத்துமவாதிகளே" என்றெழுதிய விஷயத்திலும் சுருதிமுத
லிய பல பிரமாணங்களோடு காட்டியிருக்கின்றாரென்பதை யறியார்
யார்? இவரை நேரே விளித்து யாம் சொல்லியிருக்கவும் அதை ஆங்
குச் சுருதி முதலிய பிரமாணங்கள் காட்டிமறுக்க வகையின்றிப் பின்
னுங் கேட்டதையே கேட்டு ஆக்ஷேபிப்பது தோல்வித்தானத்திற்
கிலக்கணமாம். கிறிஸ்துப்பிரசங்கிகள் செய்யும் ஆக்ஷேபத்துக்கு இந்
துக்கள் எத்தனையிடத்தில் எத்தனைமுறை எத்தனைபேர் எவ்வளவு
சமாதானஞ் சொன்னாலும் அதைப் பூர்வபக்ஷப்படுத்தி அதன்மேல்

நியாயங்காட்டித் தமதுகக்ஷியை ஸ்தாபித்துக்கொள்ளாமல் பின்னும் பழைய ஆக்ஷேபத்தையே செய்வது அவர்களுக் கியற்கை யென்பதை யாவரும் அறிவார்கள். விக்கிரகாராதனை விஷயமாகக் கிறிஸ்தவர்கள் செய்யும் ஆக்ஷேபத்துக்கு இந்துக்கள் பன்முறையும் பலவிதமாகப் பலகாலங்களில் சமாதானஞ் சொல்லியிருக்கின்றார்களென்ப திவரறி யாத தன்று. அதற்கு அவர்கள் இது காறும் பதில்பேசாது மௌன முற்றும் அவ்வாக்ஷேபங்களை யின்றுஞ் செய்யாதிருப்ப தில்லை. அங் ஙனமே ஆன்மாவே பிரமம் என்னும் விஷயத்தில் இவராலும் இவ ரினத்தாராலும் இவர் முன்னோராலும் நேர்ந்த ஆக்ஷேபங்கட்கு நா மும் பிறரும் சமாதானங் கூறியிருக்கவும் அதைப் பாராதுபோல வும் கேளாதுபோலவும் குருட்டுவேஷம் செவிட்டுவேஷம் போட் டுக்கொண்டு, "இந்தப்பூனையும் பால்குடிக்குமா" வென வொரு சங்கதியும் அறியார்போலப் பின்னும் பின்னும் ஆக்ஷேபிக்க வருகின் றார். எந்தக் காரணத்தினால் கிறிஸ்தவர்கள், சமாதானத்தைக் கவ னியாமல் ஆக்ஷேபத்தை ஆக்ஷேபமாகவே கொள்ளுகின்றார்களோ, அதே காரணத்தால இவரும் சமாதானத்தைக் கவனியாமல் ஆக்ஷே பத்தை ஆக்ஷேபமாகவே கொண்டு நிற்கின்றார். இப்படிப்பட்டவ ரிடத்தில் யாம் பேசுவதென்ன விருக்கின்றது! தூங்குகின்றவனை யெ ழுப்பலாமேயன்றி, தூங்குகின்றவனைப்போலிருப்பானை யெழுப்ப யாரா லாகும்? நாமும் பிறரும் எவ்வளவோ நூல்களை யாராய்ந்து கைவ லிக்க எவ்வளவோ பிரயாசைப்பட்டு எழுதியும் அதை யிலக்ஷியஞ் செய்யாமலும் பூர்வபக்ஷம்பண்ணாமலும் எழுதினதையே எழுதிப் பே சினதையே பேசினால் இவரிடத்தில் அருவருப்புண்டாகு மன்றோ? அருவருப்புண்டாய் எவரும் தமது ஜோலிக்கு வராமலிருப்பதே தமது பக்ஷத்துக்கு ஜெயமெனக் கருதி, இவ்வித தந்திரோபாயஞ் செய்துகொண்டனரோ யாதோ அறிந்திலமென்க. எந்தப் பொருளை வேதத்தில் பிரமமெனச் சொல்லுகின்றதோ, அதே பொருளை ஆன் மாவென்றுஞ்சொல்லுகின்றதென்பதற்குச்சான்று அவ்வேத முதலிய கலைகளேயாம். ஆன்மாவென்னும் பரியாய நாமம்பெற்ற பிரமம் எங் கும் பூரணமாயிருப்பதால் அது போக்குவரத்துச் செய்யாது. அதி னின்றுந் தோன்றிய ஜீவன் ஏகதேசமாகலின் அவனே போக்குவரத் துச் செய்பவன். ஆன்மாவென்னுஞ் சொல் சில சமயஞ் சீவனுக்குஞ் சொல்வதுண்டு. அப்போது ஜீவான்மாவெனச் சொல்லப்படுகிறது. ஜீவான்மாவே போக்குவரத்துள்ளதாய்ப் பிறப்பு, இறப்பு, துறக்க, நிர யங்களை யடைகின்றது. ஏகதேசமாயும் கிஞ்சிக்கியத்துவமுள்ளதா யும் பிறப்பு இறப்பு முதலியவைகளைப் பெறுவதாயும் அஞ்ஞான முடையதாயும் தேகத்தில் கட்டுப்பட்டதாயும் கர்மோபாசனை செ ய்து சித்த சுத்திபெற்று ஞானத்தையடைந்து முத்திபெறுதற்குரிய தாயும் ஆண்டானை ஈசனை யுபாசிப்பதாயும் அவ்வீசனுக்கு அடி மையாயும் பசுவாயும் பலவாயும் சாக்கிரத்தில் விசுவனென்றும்

சொப்பனத்தில் தைஜஸனென்றும் சுழுத்தியில் பிராஞ்ஞனென்றும் அவஸ்தைக்குரியபேர்பெற்றதாயும் நினைப்பு மறப்புகளை யுடையதாயு மிருக்கின்ற ஜீவனை, எங்கும் பரிபூரணமாய் நீக்கமின்றி நிறைந்து, சச்சிதாநந்த நித்திய நிர்ம்மல நிர்ச்சல நிர்விகார நிராதார நிரஞ்சன நிர்க்குண நிஷ்கள நிஷ்பிரபஞ்ச நிர்முத்த நிர்விசேஷ நிர்த்தொந்த நிஷ்காரண நிர்விசேஷ முதலிய பல அதீத குணங்களைப்பெற்ற பிரம மென்று கூறுவது அடுக்குமோ! மசகத்தை மகாமேருமலை யெனச் சொல்பவரு முளரோ! பிரமத்துக்கு ஆன்மாவெனச் சுருதிகளில் பேரிருப்பதுபற்றி, பிரமமென்று வருமிடங்களில் ஆன்மாவென்னும் பதத்தை அத்வைதிகள் பிரயோகித்தால் அதுகுற்றமா ? இவர் செக் கென்றுஞ் சிவலிங்கமென்றும் அறியாது மயங்கினால் யார் என்ன செய்யலாம்! சுருதியாதி நூற்களில் சொல்வதுபோலப் பிரமப்பொரு ளுக்கு ஆன்மாவென்னும் சொல்லைப் பெரும்பாலும், ஜீவனுக்குச் சிறு பாலு முபயோகிக்கின்றார்களாதலால் அத்வைதம் வைதிகசித்தாந் தம் என்பதிலையமில்லை யென்க. இவர்வகுப்பினர் அதற்குத்தோஷங் கூறுவதாலும் அதை யங்கீகரியாமையாலும் சுருதியாதிகளுக்கு வி ரோதமாக ஜீவர்களுக்குமாத்திரம் உபயோகிப்பதாலும் இவர் சித்தாந் தம் வேதபாஹிய மென்பதில் இறையளவும் ஐயமில்லை. இதன்பே ரில் அதனைவற்புறுத்த "ஆன்மாவைப் பிரமமென்றுகொள்ளுங்கால்" என்றுங் கூறினர். இதனால் வேதசம்பிரதாய மிவரறிந்திலரென்றேற்ப டுகின்றது. கிறிஸ்தவர் மகம்மதியர் எங்ஙனம் வேதசம்பிரதாயத்தை அறிந்திலரோ அங்ஙனமே இவருமறிந்திலராகவின் இவர்வேதபாஹிய ரென்பது பசுமரத்தாணிபோல் நாட்டப்படுகின்றவாறறிக. அத்வைதி கள், வேதத்திற்கூறியபடி ஆன்மசத்தத்தைப் பிரமத்துக்குப் பிரயோ கிக்க, அதையுணராது ஜீவனையே பிரமமாகக்கூறியதாய்க் கூறுவ தொருகுற்றம், ஆன்மசத்தம் ஜீவனுக்கே யுரியதென்பது ஒருகுற்றம், ஆகவிரண்டுகுற்றங்களும் தமதுபேரிலிருக்க, குற்றமற்ற அத்வைதிகள் பேரில் குற்றத்தை ஆரோபிப்பது குணமுடையார் கூற்றன்று. மஞ் சள்காமாலை கொண்டவனுக்கு உலகமெல்லாம் மஞ்சள் நிறமாய்த்தோ ற்றுவதுபோல ஆன்மசத்தம் ஜீவனுக்குரியது; பிரமத்துக் குரியதன் றெனக்கொண்ட தமதுசமயப்பிரமை,பிறர்பேரிலுந் தோன்றி, தம்மை ப்போல மாறுபாடாய்க் கொள்ளாதவர்களை யெல்லாம் தப்புச் சித்தா ந்திகளெனச்சொல்லச் செய்கின்றது. மஞ்சள்காமாலை போனலல்லது உலகமஞ்சள் தன்மையெங்ஙனம் ஒழியாதோ அங்ஙனமே ஆன்ம சத் தம் ஜீவனுக்கே யுரியது, பிரமத்துக்குரிய தன்றென்கின்ற பிரமை யொழிந்தாலன்றி, அத்வைதிகள் ஜீவான்மாவைப் பிரமமென்கிறா ர்கள் என்ற பிரமை யொழியாது; நாம் சிறுபாலும், வேதாந்தி பெரும் பாலும் இதுவிஷயமாகப் பேசியிருப்பதற்குச் சமாதானங் கூறாமல் மறுபடியும் ஆன்மாவைப் பிரமமென்று சொல்லுகின்றார்களென்று சொன்னதையே சொல்வதால் அதற்குச் சமாதானஞ் சொல்லத்

தமக்கு நியாயமில்லையென்றும் அதுவிஷயத்தில் அபஜெயப்பட்டு வழக்கப்படி மறைந்தொளிகின்றாரென்றும் விளங்குகின்றன.

பிரமத்துக்கு ஆன்மாவென்னும் பேர் உண்டென்பதற்குப் பிரமாணங்களாவன:—

யசுர்வேதத்தில் வராகோபநிஷத் 2-வது அத்தியாயம்.

தேகாத்துமஞானத்திற்கு விரோதியான ஞானம் ஆத்மாவினிடத்தில் எவனுக்குண்டாகிறதோ, அவன் விரும்பாவிட்டாலும் மோக்ஷமடைகிறான்.

சூதசங்கிதை பராசத்தி விசாரமுரைத்த அத்தியாயம்.

பாவுதானெனும் நிறையான்மாவினின்றும் பல்லவுலகமுஞ்சீர், மேவுசீவனுமீச்சுரனும் மாயாசத்தியும் வேறல்லரம்மா. (கக)

இலிங்கபுராணம் தியானவிதியுரைத்த அத்தியாயம்.

காரியகாரணங்கள் யாவையுங் காசொன்றில்லாத், தாருமான்மாவின் கண்ணே யமருமென்றறிந்து கொண்டோன். (கக)

இதுவரையில், கட்டைகளில் தோன்றிய கள்ளர்களையெல்லாம் வெட்டிவெட்டித்துண்டம் துண்டமாக்கினவன்போல அத்வைதிகளுடைய சித்தாந்தமல்லாதவற்றையெல்லாம் சித்தாந்தமாகக்கொண்டுவென்றவீரத்துவம் வெளிப்பட்டதன்றோ? அதுபோக அவர்வாதிக்காதவற்றையெல்லாம் வாதிக்கலாம் என்று பேச எழுந்து, "பிரமம் பூரணப்பொருளாகையால் தேகச்சுமைதாங்கியயாமும் பிரமமாதல் கூடும் என்றுவாதிக்கலாம்" என்கிறார். இவர், "யாம்" என்னுஞ்சொல்லுக்குப் பொருள் எதைக் கொண்டனரோ அறிந்திலம். ஜீவனைக் கொண்டனரா? பிரமத்தைக் கொண்டனரா? ஜீவனைக் கொண்டனரென்னின் இதுநியாயந்தான்; பிரமத்தைக் கொண்டனரென்னின் அது முத்திநிலையிற் கூறவேண்டுவ தாகவினும் அந்தநிலையில் சரீர இந்திரிய கரண ஜீவர்களில்லாமையாலும் காண்பான் காட்சி காணும்பொருள் அபாவமாகவினும் நானென்கிற சூட்ம சங்கற்பமும் இறந்துபோனமையானும் அப்படிப்பட்ட அதீதநிலையில் 'தேகச்சுமை தாங்கியயாமும் பிரமமாதல்கூடும்' எனக் கூறுவது ஞானநூலாராய்ச்சியில்லாமையாம். இவர்க்குத் துவிதமயக்கந் தலைகொண்டிருப்பதால் அது அத்வைதிகள் நினையாதவற்றையெல்லாம் நினைக்கவும் சொல்லாதவற்றையெல்லாம் சொல்லவுஞ் செய்கின்றது. தேகாதிப்பொருளுக்குப்பிரமம் விவர்த்தோபாதான காரணங்கூறும் அத்வைதிகள், பிரமம் தேகச்சுமையைத் தாங்குவதாய்ச்சொல்வார்களா?சொல்வார் சொன்னாலுங் கேட்பார்க்கு மதியில்லையா? பிரமத்தையும் உலகையும் சத்தியமெனக்கொண்டாலன்றோ வொன்றையொன்று சுமக்கிறதாகச்சொல்லவேண்டும்? பிரமத்தின்கண் உலகுளதென்பது கடத்தின்கண் படமுளதென்பதுபோலன்றே. கயிற்றின்கண் அரவு முதலனை போலாமன்றோ? இங்ஙனமாகக் கடத்தின்கண் படம்போல இரண்டுஞ் சத்து

ப்பொருளாக வைத்து ஆக்ஷேபிப்பது என்ன மதி? தமக்குத் தெரி
யாதவற்றையெல்லாம் தெரிந்ததுபோலவைத்து ஆசங்கை செய்து
அவமானப்படுவ திவர்க் கியற்கையாங் கொல்லோ ? இப்படிப்பட்ட
வுதவியற்ற ஆசங்கைசெய்து அத்வைதத்தை வெல்லக் கருதுவது
மசகம் மலையை விழுங்கக் கருதுவதுபோலா மென்க.

தேகச்சுமையைத் தாங்குவது பரிபூரணப்பிரமமன்று; ஏகதேச
மான சிவனேயாம். நாம் இவர்க்கு இப்போது சமாதானஞ் சொல்லி
விட்டோம். நாம் கேட்பதற் கிவர் ஒளியாது சமாதானஞ் சொல்லட்
டும் பார்ப்போம். இவர் ஜீவான்மாவைப் பூரண மென்கிற மதத்தை
மெய்யென்று நம்பியொழுகுஞ் சிலர். பூரண ஆன்மா ஏகதேசமான
சரீரத்தில் அடங்குவ தெங்ஙனம்? அதுவே பூரணமாகிறபோது தேக
மாகிய பொருளிருக்கவிடமேது? பலகோடிஜீவான்மாக்களிருப்பதால்
எந்தஆன்மா இவருடைய சரீரத்தைத்தாங்குகின்றது? இவரது பூரண
ஆன்மாவில் பலகோடி பூரண ஆன்மாக்களுமிருப்பதால் இவருடைய
ஆன்மாமாத்திரந் தாங்குகின்றதென்று எங்ஙனங் கூறத்தகும்? பூரண
ஆன்மா ஆணவத்தால் கட்டுண்டு ஏகதேசப்பட்டதென்னின்,ஆணவ
மலம் இருளாகலின், அது ஞானமயமான ஆன்மாமுன் தலைகாட்டுமோ?
ஒளி ரூபமான கண்ணை யிருள் மறைப்பதுபோல் மறைக்குமென்னின்
ஒளியை யிருள் மறைப்பது நிஜமானால்சூரியனையும் விளக்கையும் கண்
டு இருள் தலைகாட்டாதோடுவதேன்? இதனாலேயே கண்ணுக்கு ஒளி
யில்லையென்பது வியக்தமாகின்ற தன்றோ? கண்ணுக்கொளியில்லையெ
ன்று நாமும் ஆரியனும் இவரோடு செய்த போரில்,இவர் முதுகுகாட்
டியோடின வோட்டம் ஓட்டமாய்ப் போய் விட்டதன்றி, திரும்பக்
காலே யெழவில்லை யென்பதெவரும் அறிந்த விஷய மன்றோ? சூரியன்
விளக்கு முதலிய வியற்கை யொளிப்பொருள்களை இருள்மறையாமை
யானும் இருளை அவைகள் ஓட்டுகின்றமையானும் கண்ணை இருள்
மறைக்கின்றமையானும் கண் இருளையோட்டாமையானும் கண்ணுக்
கொளி யின்றென்பதுவே திண்ணமெனபதாம். இருள், ஒளிமயமான
சூரியனை யெங்ஙனம் மறைக்கவில்லையோ, அங்ஙனமே அஞ்ஞானமெ
ன்னும் இருள் மயமான ஆணவம், ஞானமென்னும் ஒளிமயமான ஆ
ன்மாவை மறைக்கவே மாட்டாது. மறைத்ததாக வைத்துக்கொண்
டாலும் பூரண ஆன்மா ஏகதேசப்படுவதும் பட்டுச்சிறுதேகதில் அட
ங்குவதும் எங்ஙனங்கூடும்? பெரிய வஸ்திரத்தில் ஒருபக்கத்தில் சிறிய
கறுப்பு மைபடின் அவ்வஸ்திரஞ் சிறிதாய்ப்போமா? அல்லாமல் சிறு
பொருளில் அடங்குமா ? சிறிதாய்ப் போதலும் சிறுபொருளில்
அடங்குதலுங் கூடாதன்றோ? நிற்க, ஆணவம் ஆன்மாவை மறைத்த
தென்பதில் ஒருபக்கம் மறைத்ததா? எல்லாப் பக்கங்களும் மறைத்
ததா? ஒருபக்கம் மறைத்த தென்னின் மற்றப்பக்கங்களில் ஒளிக்குக்
குறைவில்லையே. எல்லாப்பக்கங்களையும் மறைத்ததென்னின் ஒளியு

ள்ளபொன்னை யொருபானையில் வைத்து மூடிவிட்டால் தனது பொன் தன்மைக்காவது பொன்னொளிக்காவது தன்வரையில் பாதக முண்டுகொலோ? சூரியனைப் பலபக்கங்களிலும் மேகங்கள் மூடிவிட்டால் சூரியன் தன்வரையில் தன்பிரகாசத்தில் குறைவுபடானே. அது போல ஆன்மாவும் தனது ஞானப்பிரகாசத்திற்குறைவுபடாதே. ஆணவம் அணு அணுவாய் உள்நுழைந்து மறைக்குமென்றாலும் அணு அணு வரையில் ஞானத்துக்குக் குறைவில்லையெனக் கூறுதற்கிடனாகி மொத்தத்தில் எல்லா அணுக்களும் ஞானவடிவாகவே அதாவது ஆணவத்தால் மறைவுபடவில்லையெனவே சொல்லற்கிடனாம். ஆணவம் அணு அணுவாய் உள்நுழையுமென்று சொல்வதில் ஆன்மா அணு அணுவாய்ப் பிளவுபட்டு ஒவ்வொரு ஆன்மாவும் பல்லாயிரங் கோடி ஆன்மாக்களாம். ஆன்மாக்களாகிறபோது அவைகளினது சஞ்சித ஆகாமிய பிராரத்துவ கருமங்களும் அவைகளுக்குரிய சரீராதிகளும் அத்தனை கோடிகளாகும். அப்போது ஈசுவரனது தொழிலும் அங்ஙனமாக விரியும். ஒருஆன்மா பலஆன்ம அணுக்களாகப் பிரியுமென்பதில் எது பிரிதலுடையதோ அல்லது பிரிகிறதோ அது ஒருகாலத்திற்கூடியே யிருந்திருக்கவேண்டும். ஒரு ஆன்மாபலகோடி ஆன்மாகளாகிறபோது அவையெல்லாம் தனித்தனிச் சரீரமெடுத்துச் சனனமரண சமுசாரத்திற்சுழன்று நரகசொற்கபலன்களை அனுபவித்து முத்திக்கு வழிதேடவேண்டும். அநாதிதொட்டுள்ள இப்போதைய ஆன்மாக்களே சிருட்டியொழிய முத்தியடையாதபோது ஒவ்வொரு ஆன்மாக்களும் பலகோடிகளாகப்பிரிந்தால் சிருட்டி யொழிவதெக்காலமோ! இவ்வளவும் இந்த ஆணவத்தினால்வந்த பெருமநர்த்தமாம்! அம்மம்ம கொடிது! கொடிது!! இப்படிப்பட்ட ஆணவத்தைக் கட்டுக் கடங்காமல் விட்டுவிடுவது ஈசுரனுக் கொருபோதும் அடுக்காது! அடுக்காது!! இது பைபில்கடவுளான ஏகோவா, ஜீவர்கள் தன்னை வணங்கவொட்டாமற்செய்யப் பசாசைவைத்த கதைபோலாமென்க. இப்படிப்பட்ட சித்தாந்தத்தை மெய்யெனக்கொள்வதற்குக்காரணம் சுருதிநூற்பொருளை விசாரியாமையேயாம். அத்வைதத்தை அனுசரித்துப் பிரமமொன்றே மெய்ப்பொருளெனவும் ஜகஜீவபரங்கள் அநிர்வசனீயப் பொருளெனவும் கொள்வாரேயாயின் இவ்வாறு அத்வைதிகளிடத்தில் அகப்பட்டுக்கொண்டு ஆந்தைபோல் விழிக்கவேண்டிய ஆவசியகமின்றென்க.

தேகத்தை ஏகதேசமான ஜீவன் தாங்குவதாய் அத்வைதிகள் கூற, பூரணப்பிரமங் தாங்குவதாய்ச் சொல்லக்கூடுமெனப் பொய்ம் மொழி புகன்றார். தம்பக்கத்தில் பூரணவான்மா தேகத்தையெங்ஙனந் தாங்குமெனக் கடாவி அதற்கு விடைகூறாது மறைத்தார். பிறர் விஷயத்திற் குற்றமற்றதைக் குற்றமாகக் கற்பித்தார்; தம்விஷயத்திற்

குற்றத்தைக் குணம்போல் காட்டினூர். இவ்வித மாறுபாடு செய்வதில் இவர் மிகு சமர்த்தர் போலும்!

வாசுதேவமனனம் அத்தியாரோபநிரூபகம்.

சாக்கிராவஸ்தையில் தூலசரீரத்தில் அபிமானியாயிருக்கிற சீவனுக்கு விசுவனென்று பெயர்... ... ... ... சொப்பனுவஸ்தையில் சூட்சும சரீரத்தில் அபிமானியாயிருக்கிற சீவனுக்குத் தைசதனென்று பெயர்...........சுழுத்தியவஸ்தையில் காரணசரீரத்தில் அபிமானியாயிருக்கிற சீவனுக்குப் பிராக்ஞனென்று பெயர்.

ஷை ஆத்மானுத்மவிசார நிரூபகம்.

ஜீவர்களுக்குத் தானென்ற அபிமானவக முண்டாயிருக்கிறபடியாலும் சுயசரீரங்களில் அபிமானமிருக்கிறபடியாலும் ஈசுவரனுக்கு இப்படிப்பட்ட அபிமானமில்லாதபடியினுலும் லோகசம்ரட்சணூர்த்தமாகவே யபிமானமிருக்கிறபடியாலும் சீவர்களுக்கும் ஈசுவரனுக்கும் பேதலட்சணமுண்டு.

பஞ்சதசப்பிரகரணம் நாடகதீபிகை.

உபாதிகளிற் பிரதிபிம்பித்துச் சரீரங்களிற் பிரவேசித்து விவகரிக்கிற சிதாபாசன்ருன் சீவன்.

கைவல்லியம் தத்துவவிளக்கப் படலம்.

உடம்பினுட் சீவனைப்பார்த்துபதேசமோதுவாரே. (கஅ)

இவ்வுடல் மருவுஞ் சீவனிலங்குதைசதனென்ருவன். (௬௧)

இவ்வுயிர்க்குத்தூலதநுவும் போகமுமுண்டாகக் காக்குமவ்வீசன் பஞ்சீகரணங்கள் செய்தான்ருனே. (௬௰)

தூலமே மருவுஞ் சீவன் சொல்லிய விசுவனுகும். (௬௧)

வேதாந்தசூடாமணி.

சாற்றரிய சீவபேதங்கள் முறைவிசுவன்
றைசதன் பின் பிராஞ்ஞனெனப் பகர்ந்திடுவரவருள்
வேற்றுமை செய்தூலவுடல் வியட்டியபிமானி
விவகாரின் புத்திகதவுறு சைதன்யன்
மாற்றரிய சிதாபாசன் விட்சேபரூபன்
வருபிரமாத்திருநுவல் கத்திருவொடு போத்திருவே
தோற்றியிடு விஞ்ஞான மயன்குடும்பி சரீரி
தொம்பத முக்கியன் முதலாயின விசுவனுமம். (௬௭)

அவித்தையின்விம்பித்துள்ள ஆருயிர்நுகர்ச்சிக்காகத்
துவக்குறு காரியங்கடோற்றிட வெதிர்குறித்த
வுவப்புறு மீசனேக்க மாத்திரத்துற்றலர்ந்து
பவப்படு காலமாகியதுகொடு பரிணமித்து. (௬௬)

ஞானவாசிட்டம் சுரதுகதை.

கரணமீரைந்து மன்னியசடமெனுங் கணக்கினுனன்றித்
திரளெனக்கிவ்வுடன் முதனுனலன் சேடமேதெனநோக்கில்

*விரவுசீவனே சேடமாமின்னதும் வேறொன்றாற் றெரிகின்ற*
*துரவிதான வேறொன்றினாற்றெரியுமீதுயர்ந்ததத்துவமாகா.* (உஎ)

### ௯ பாசவிபாசன் கதை.

*ஆசைவன் பாசத்திரளினாற் கட்டுண்டரும்பிணியீக் கடிக்கணுங்கி*
*யேசுறுபோகக்கதைகளான் மொத்துண்டிச்சை முட்கோலினாலுலைந்து*
*காசுறு கருமச்சேற்றிலேயழுந்திக் கடுஞ்சகக்காட்டிலே சுழன்று*
*வீசுமாமோகத்தளிர்நிழற்றுயிலும் வீரனே சீவனாமெருது.* (உ)

*மேவுறுதுன்பப் பெருஞ்சுமைசுமந்து மீட்சிபோக்கிலை யுடற்புண்ணா*
*யீவறுபிறவிக்குழியில் வீழ்சிவளருத்தினை யிக்குழிநின்று, மோவலின்முயல்வா*
*லெடுப்பதேவலியாமுயர்ந்த ஞானிகளுறவுளதேல், நாவிகர்நாவாய் தருவ*
*போல் ஊகம்நல்குவர் பவக்கடல்கடக்க.* (௩)

இந்தவேதாந்தநூற் பிரமாணங்களினாலே யெல்லாம் உடற்குளிருப்பதும் உடலைத்தாங்குவதும் உடலை அபிமானிப்பதும் சீவனென்றும் தனு கரண புவன போகங்கள் ஈசுவரனால் சீவனுக்குக் கொடுக்கப்பட்டனவென்றும் பிரமத்துக்குச் சீவன் வேறென்றும் அறிந்துகொள்க.

ஆடிக்காற்றுப் பஞ்சுபோல் நமது சமாதானத்தாற் பறந்துபோம்படி "ஆன்மாவைப்பரிபூரணமென்றும், அதுதான் பிரமமென்றும் கூறுவது அபசித்தாந்தமாய் முடிந்தது" எனக் கூறி யிழுக்குப்பட்டார். எந்தச் சச்சிதாநந்த நித்திய பரிபூரணப்பொருளுக்குப் பிரமமெனவும் சிவமெனவும் சுருதியாதிகள்கூறுகின்றனவோ, அதேபொருளுக்கு ஆன்மாவென்றும் அச்சுருதியாதிகளேகூறுவதால் அச்சுருதியாதிகளையே பிரமாணமாகக்கொண்ட அத்வைதிகள், பிரமம் அல்லது சிவம் என்னும் பதத்தைப் பிரயோகிக்கவேண்டிய இடத்தில் ஆன்மாவென்னும் பதத்தையும் பிரயோகிக்கின்றார்கள். இதற்கு வேண்டிய பிரமாணங்களை முன்னரே காட்டியுள்ளேம். இங்ஙனமாக அதை அபசித்தாந்தமெனக் கூறுவதென்கொண்டோ! இவ்வாறு கூறிவிட்டுப் பின் வேதபாஹியராகாது தவிர்வரோ! இதன்பின்னர் "ஆன்மா வியாபகமுடையதென்பது அழிந்தது" என்றார். பிரமத்துக்கு மற்றொரு பெயராகிய ஆன்மா வியாபகமுடையதாகலினாலும் அது சுருதி சம்மதமாகலினாலும் அது ஒருபோதும் அழியாது. ஜீவான்மா அவ்வியாபகமுடையதாகலின் அதை வியாபகமெனக் கொள்ளும் இவரது அவைதிக ஆபாசவாதம் இன்று நேற்றன்று, வேதந்தோன்றியவன்றே யழிந்தொழிந்ததென்றறிக. பிரமமான ஆன்மாவோ வியாபகம். அது வேதசம்மதமாகலின் அதைத் தடுக்க எவராலுமாகாது. ஜீவனோ அவ்வியாபகம். அதுவும் வேதசம்மதமாகலின் அதையுந்தடுக்க எவராலுமாகாது. இதன்படியே அத்வைதிகள்சொல்லுகின்றார்கள். ஆதலால் அவர்கள்பேரில் அற்பமுந்தோஷமில்லை. இவர்பேரில்தான் முற்றுந்தோஷம். இவர்பிரமத்துக்கு ஆன்மாவென்கிறபெயர் கூடாதென்பதுபோல் காட்

டி அதற்குவேருக ஜீவான்மாவைச்சொல்லி அதை வியாபகமென்று கூறுகின்றனர். இந்தக் குற்றத்தைப் பலவாறு நாமும் வேதாந்தியும் காட்டி மறுத்திருக்க, அதை நிவர்த்திசெய்துகொள்ள வகையின்றித் தம் குற்றத்தை அத்வைதிகளின்பேரி லேற்றிக் கூறுவது அடாது! அடாது!! தமது சித்தாந்தப்படி ஜீவான்மா பூரணமாகவும், அத்வைதிகளின் சித்தாந்தம் ஏகதேசமாகவு மிருக்க, அவர்கள் பூரணஞ் சொல்லுவதுபோல்காட்டி மறுக்கப் புகுவது, மகளுக்குச் சற்புத்தி புகன்று, தாய் விபசரிக்குந் தொழிலை மேற்கொண்டதுபோலாமென்க.

இனி ஒருவன் ஆகாயத்தைத் துண்டந்துண்டமாய் வெட்டுவேனென வீரமொழிபுகன்று, வாள்கொண்டுவீசி, தன்னையே வெட்டிக்கொண்டு மாய்ந்தான்போல அத்வைதிகளுக் குரிமையல்லாததை யுரிமையாக வைத்து ஆசங்கைபுரிய, அது அவர்கள்பேரில் தாக்காது தம்மையே தாக்கிய தொரு விந்தையை வரைவாம். அது அடியில் வருமாறு காண்க:—"இனி வியாபகம் அல்லது பூரணம் என்பது ஒன்ருயிருந்த பிரமம் பலவாக விரிந்த நிலைமையென்று அவர் பொருள் விரிக்கின்றனர். அங்ஙனமாயின், அது இப்போது விரிந்த நிலைமையினின்று மின்னு மதிகமாய் விரிதலுங்கூடும்" என வரைந்தமையே. இவ்வளவு தெரியா ஏழையை யொரு வாதியாகவைத்துப் பேசுவ தவமானமாயினும் அவருடைய மாறுபாட்டில் பேதையர் மயங்கிக் கலங்காவண்ணம் பதில்விடுவது கடமையாகவின் அதுபற்றி விடைதருவாம். பிரமம் பலவாய் விரிந்ததென்கிருரே. எவ்வாறு விரிந்தது? மண்குடம்போலா? வித்து விருக்ஷம்போலா? நீர் அலையாதல்போலா? கயிறு அரவாதல்போலா? இவற்றி லெது அத்வைதிகளுடைய சித்தாந்தம்? மண்குடம்போலென்னின் மண்விகாரமுற்றுக் குடமாவதோடு மண்ணில்லாவிடத்தில் வினைதலாதித்தொழில் அடைகின்றது. அங்ஙனமே பிரமம் விகாரமுற்றுப் பலவாதலோடு பிரமம் தானில்லாவிடத்திலேயே பலவாக விரிதல்வேண்டும். இதில் பிரமம் விகாரப்படுவ தொரு குற்றம்; தானில்லாவிடத்தில் விகாரப்படுகின்றதென்பதில் தானிலலா விடமிருப்பதுபற்றிப் பிரமம் அபரிபூரணமாவதொரு குற்றம். இவ்விரண்டு குற்றங்களையும் அங்கீகரிக்குங்கால் பிரமம் நிர்விகாரமெனவும், பரிபூரணமெனவுங்கூறிய சுருதிகட்கு விரோதமுண்டாம். வித்து விருக்ஷம்போலென்ருலோ இதினின்னும் பெருந் தோஷமுண்டாகின்றது. வித்து விகாரப்பட்டு விருக்ஷமாவ தொன்று, வித்துத் தானில்லாவிடத்தில் விருக்ஷமாவதொன்று, வித்துடன் ஜலமுதலிய இதரபொருள்கள் சேர்ந்து விருக்ஷமாவதொன்று. இவ்வாறு உபமேயத்தை யொத்துப்பார்க்கின் பிரமம் விகாரப்பட்டு உலகாவதொரு குற்றம், பிரமமில்லாவிடத்தில் உலகாவதொருகுற்றம், பிரமத்துடன் ஜலமுதலிய பொருள்களைப்போல் ஏதோ சில பொருள்கள் சேர்ந்து உலகாவ தொருகுற்றம். இதனுல் பிரமம் விகாரத்துவம் அபரிபூரணத்துவங்கள் அடைவதோடு, ஜலமுதலியனபோலச் சில பொருள்களைத்

தேடவேண்டிய தத்தியாவசியக மாகின்றது. வித்து ஏகதேசமான அற்பப் பொருளாகலின் வித்தில்லா இதரவிடங்களில் ஜலமுதலிய பொருள்க ளிருக்கலாம். பிரமம் பரிபூரணமாகலின் வேறு பொருளிருத்தல் கூடாதென்பதாம். இத்துடனே வித்து சிறிதாயிருந்து பெரிதாவதுபோலப் பிரமமும் சிறிதாயிருந்து பெரிதாகவேண்டும். இனி நீர் அலையர்திகளாதல்போலப் பிரமம் உலகாக விரிகிறதென்னின் இதுவும் அனர்த்தமாகவே முடிகின்றது. யாங்ஙன மென்னின் நீர் விகாரமுற்று அலையாதிகளாகின்றன வென்பதொன்று, நீர் இல்லாவிடத்தில் அலையாதிகளாகின்றன வென்பதொன்று. இங்ஙனமே பிரமம் விகாரமுற்று உலகாதலொன்று, பிரமமில்லாவிடத்தில் உலகாதலொன்று. இதனாலும் பிரமம்விகாரமும் அபரிபூரணத்வமும்பெறுகின்றது. ஆதலால் இவ்வுபமானமும் பசையற்ற வுபமானமாம். இவைபோலப் பல குற்றங்க ணிகழ்வதால் இவ்வித வுபமானங்கள் சொல்லாமல் அத்வைதிகள் விவர்த்த உபமானமே சொல்லுகின்றார்கள். விவர்த்த உபமானத்தி லிவ்விதகுற்றங்க ளேதுமில்லை. விவர்த்தோபாதானங்களாவன கயிற்றரவு, கானனீர், இந்திரசாலப்பொருள், சொப்பனவுலகு முதலியனவாம். பிரமம் பலவாய் விரிந்ததென்பதூஉ மண்கடம், வித்து விருக்ஷம், நீர் அலையாதிகள்போ லன்று; கயிற்றரவு முதலாயின போலாமென்க. விவர்த்தோபாதானத்திற் காரணத்திற்குப் பங்கமில்லாமல் காரியம் விரியும். கயிறு அரவாய் விரிந்ததென்னின் அரவு தோற்றமானதால் கயிற்றுக்கு யாதொரு பாதகமு மில்லை. இவ்வகையே கானனீர், இந்திரசாலப்பொருள், சொப்பன வுலகு முதலனவா மென்க. வேதமுதலிய நூல்களும் பிராசீனச்சான்றோரும் உலகு பொய் யென்றும், உலகிற்குப் பிரமம் விவர்த்தோபாதான காரணமென்றும் கோஷிக்கவும் நாமும் பிறரும் இவர்க்கும் இவர் பக்ஷத்தார்க்கும் கிளிப்பிள்ளைக்குச் சொல்வதுபோலப் பத்திரிகைகள் வாயிலாகப் பன்முறை யோலமிட்டுச் சொல்லியும் பின்னும் ஆரம்ப பரிணமவாதமாய் அத்வைதிகள் கூறுவதுபோலக் கூறி, தமது பேதைமையைத் தாமே பலரும் நகைக்கப் பகிரங்கமாய்ப் பத்திரிகையிலெழுதிக் காட்டிக்கொள்வது மானத்தை யுயிர்போல் கருதும் உத்தமர் செய்கையன்று.

பிரமம் எல்லாமாய் விரிந்ததென்னின் பொருளாய் விரிந்ததென்பது அத்வைதிகளுடைய சித்தாந்தமன்று. கயிறு அரவாயிற்று, கானனீராயிற்று, இந்திரசாலசத்தி பலபொருளாயிற்று, மனம் சொப்பனவுலகாயிற்று என்பதில் கயிறு முதலியன அரவு முதலியனவாதல் தோற்றமேயன்றிப் பொருளல்ல. இதுதான் அத்வைதிகளுடைய சித்தாந்தம். கயிறு அரவாதற்கு முன்னரும் அரவாகும்போதும் அரவில்லையெனத் தெளியும்போதும் கயிறு கயிறாகவேயிருந்தது. அது விகாரப்படவுமில்லை; காரியப்படவுமில்லை; விரியவுமில்லை; குவியவுமில்லை. யாவுந் தோற்றமாய்ச் சொல்லப்படுகின்றன. அவ்வாறே பிரமம் உல

காய்த்தோற்றும் அவசரத்திலும், உலகு தோற்றம் ஒழிந்தபின்னரும் பிரமம் பிரமமாகவே யிருந்தது. அதற்கு யாதொரு ஆனியுமில்லை; விரிந்ததெனப் பூர்வபக்ஷமாய்ச்சொல்லினும் சித்தாந்தத்தில் விரிந்தது மில்லை; குவிந்ததுமில்லை. விரிந்ததுபோல் காணப்படுவதுந் தோற்றம். குவிந்ததுபோலக் காணப்படுவதுந் தோற்றம். கானனீர் இந்திரசாலம் சொப்பனவுலகு முதலிய விஷயத்திலும் இவ்வாறே காண்க. சொப்பன வுலகுக்கு மனம் விவர்த்தோபாதான காரணம். அம்மனத்தில் ஓர் சத்தியுள்ளது. அது அவாந்தரசத்தி; அன்றிப் பின்னாசத்தி. அந்தச்சத்தி மனத்திற்கு வேறுமல்ல; அது மனமுமல்ல. அச்சத்தி சத்துமல்ல; அசத்துமல்ல; சதசத்துமல்ல; அனிர்வசனீயமாம். அந்தச் சத்தியினின்றும் சொப்பனவுலகு தோற்றுகின்றது. பின்னாசத்தி யென்பதற்குக் காரணம் சொப்பன வுலகில் பல ஜீவர்களுக் குண்டாகும் சுகதுக்கங்கள் மனத்தைத் தாக்காதிருப்பதேயாம். அப்படியிருந்தும் மனத்தைவிட அச்சத்தி வேறா யிராமையின் அதை மனத்திலடக்கி, சொப்பன வுலகிற்கு மனம் முதற்காரணமெனச்சொல்ல இடமாகின்றதோடு, சொப்பனவுலகு சத்துப்பொருளாயிராமையின் சொப்பனவுலகிற்கு மனம் விவர்த்தோபாதான காரணமென்றுஞ் சொல்ல விடமாகின்றது. அங்ஙனமே பிரமத்தின்கண் ஓர் சத்தியுள்ளது; அது அவாந்தரசத்தி; அன்றிப் பின்னாசத்தி. அந்தச்சத்தி பிரமத்திற்கு வேறுமல்ல; பிரமமுமல்ல. அந்தச்சத்தி சத்துமல்ல; அசத்துமல்ல; சதசத்துமல்ல; அநிர்வசனமாம். அந்தச்சத்தியினின்றும் இச்சாக்கிர வுலகுண்டாயிற்று. அந்தச்சத்திதான் மாயாசத்தி. அது பின்னாசத்தி யென்பதற்குக்காரணம் அதினின்றுந்தோன்றிய இச்சாக்கிர வுலகிலுள்ள ஜீவர்கள் அநுபவிக்கும் இன்பதுன்பங்கள் பிரமத்தைச் சாராமையேயாம். அப்படியிருந்தும் அம்மாயாசத்தி பிரமத்தைவிட வேறாயிராமையின் அதைப்பிரமத்திலடக்கி, சாக்ரவுலகிற்குப் பிரமம் முதற்காரணமென்று சொல்ல இடனாகின்றதோடு, சாக்ரவுலகு சத்துப்பொருளாயிராமையின் சாக்ரவுலகிற்குப் பிரமம் விவர்த்தோபாதான காரணமென்றுஞ் சொல்லற்கிடனாகின்றது. உண்மையில் பிரமம் உலகாகவுமில்லை; உலகாக விரியவுமில்லை; மீண்டும் பிரமமாகவு மில்லையென்பதே யுண்மை. இம்மாதிரி இப்போதுமாத்திரமன்று, பலவருஷங்களாகப் பலமுறையிலும் நாமும் பிறரும் எழுதியிருக்கின்றோம். அதிலும் பன்னிப்பன்னி இவர்புத்தியில் தைக்கும்படி அழுத்தி அழுத்திச்சொல்லியிருக்கின்றோம். அவ்வாறு சொல்லியும் சோ. நாய்க்கர் புத்தியிலேறவில்லை. தடித்தபுத்தியாயிருக்கின்றது. அன்றித்துவேஷபுத்தியை வைத்துக்கொண்டுமிருக்கின்றார். வேதாதிகளைத் தூஷித்து அவைகளுக்கு மாறாகப்பேசுகின்ற இவருடைய புத்தியில் நுட்பவிஷயங்கள் படுவது கஷ்டந்தான்.

## சூதசங்கிதை எக்யவைபவகண்டம்

### சூதகீதை விசேஷ சிருட்டியுரைத்த அத்தியாயம்.

கருத்தாவாயபரசிவன்றன் மாயையொடுவேறறக்கலப்புற்
றிருப்பானெனினும் பூருவகற்பத்தினிலையவாசனையானுங்
கருச்சாய்த்துயர்ந்தீர் செறிகாலகருமவனுகுணமதாயும
தருக்காநின்றமாயைக்குந் தனக்கும்பேதங்கற்பிப்பான். (௨)

அறையாநிற்குங்கற்பிதமானது வாத்துவமல்லாமையால்
குறைதீர்ந்தீர்கற்பிதபேதம் கூறுஅபேதம்பாரியா
திறைபின்பூருவேட்சண வாசனையாலீட்சிதாவுமாய்
மறைதன்மாயையொடுகூடி மாயாகுணபேதங்களால். (௩)

திரிமூர்த்திகளைப்படைத்தவர்க்குந் திகழுந்தரியாமியாயிருப்பான்
றுரிசிலவரும்பரதத்துவ வபேதத்தான்முத்தொழில்செய்வா
ரூரியவிசேடரூபத் தொவ்வொருவரொவ்வோர்காரியத்தைப்
பிரியமருவச்செய்வார்கள் பேணியுணர்மின்மாதவத்தீர். (௪)

நிருமலசிவன்றன்மாயையாற் கனுப்போனிருமிக்கப்பட்டனவெல்லாம்
மருவுகாரியங்காரணத்திற்கு வேறாகாமையின்மாயைரூபந்தான்
பெருகுமாயையும்மற்றதிட்டானமாகும் பிரமத்தின்வேறானதன்று
குருபரனருள்கைக்கொண்டு முக்குறும்புங்கொன்றுயர்ந்தோங்கியமுனிவீர்.()

தத்துவஞானத்தாற்பரசிவமே சகமாயைசீவன்முன்னுன
தொத்துறுசொரூபமாகவேதெரியும் குறித்திடின்வேறொன்றுமிலைச்ச
கத்துவேறாகப்பார்ப்பவன்பந்தக் கடுந்தளைநீங்குறானென்றும்
பொத்துமாமலத்தினீங்கியின்னருளைப் புணர்ந்தின்பமார்தருமுனிவீர். (௧௨)

### ௸ ௸ ௸ சருவவேதாந்த சங்கிரகமுரைத்த அத்தியாயம்.

படர்சமுசாரக்கேதுவாம்மாயை பகர்பிரதீதியினாலே
தொடர்தருசத்தாயேயிருந்தாலும் துலங்குறுபரமார்த்தமாக
அடர்புலனவித்தஅந்தணீர்சத்து விலக்ஷணமானதேயதுவுஞ்
சுடர்பரசிவத்தின்வேறன்றாலென்று சொல்லுவர்நல்லவர்மாதோ. (௪)

### ௸ சத்தாவிசாரமுரைத்த அத்தியாயம்.

அத்தகுசத்தாவாகியபிரமமம் மமண்கடாதியானுற்போற்
சுத்தமாமுனிவீர்பற்பலவான சொரூபங்களாய்ப்பரிணமிக்கும்
உத்தமப்பிரமம்பவஞ்சமாய்த்தோன்ற லொளிதருசுத்திவெண்பொன்னாய்
வித்தகமுறத்தோன்றிடுதலேபோலும் வேதமுமிங்ஙனமுரைக்கும். (௬)

### ௸ பிரபஞ்சவாரோபமுரைத்த அத்தியாயம்.

பரமவான்மாவின்றனகண்டசொரூபத்தினதன்சத்தியாலே
சுத்தசேதனஅசேதனவிபாகந்தொகுமாறுகற்பிக்கப்பட்டதாலோ. (௫)

### ௸ வேதார்த்தத்தை யுரைத்த அத்தியாயம்.

அபாவமாமனையமாயை மாற்றருஞ்சதசத்திற்குப்
பின்னமாய்வயங்குமாலோ. (சா)

### யசுர்வேதம் சர்வசாரோப நிஷத்.

*கஉ. மாயையென்பது யாது?*

*இருக்கிறவளுமல்ல; இல்லாதவளுமல்ல;*
*அவ்விரண்டுங் கலந்தவளுமல்ல.*

சிறந்த இப்பிரமாணங்களினாலே நாம் மேற்கூறியவைகளெல்லா ம் உண்மையென்றும் வைதிக சித்தாந்தமென்றும் விளங்குகின்றன.

மனிதசஞ்சாரமேயில்லாத வொரு தீவுக்கு ஒருவன மாலைப் பொழுதில் சென்று அங்கிருந்த ஒரு குற்றிமகனைக்கண்டு இந்தத்தீவில் மனிதன் கிடையாதே, அங்ஙனமாக எப்படி அம்மனிதன் இங்கு வந் தான் என்கிற மிகப்பெரிய ஆசங்கை அவனுக்குத் தோன்றிற்றென வைத்துக்கொள்வோம். அதுபோல இந்தச் சோமசுந்தரநாயகருக்குப் பெரியதொரு ஆசங்கை தோன்றி யிருக்கின்றதாம். அந்த ஆசங் கையைக்கேட்டாலோ இனி யிதற்கியாதுசெய்வதென அத்வைதிகள் எலிவளையிற் றுன்போய் ஒளித்துக்கொள்ளவேண்டும்போலும்! அது அப்படிப்பட்ட ஆசங்கை. அது ஷை தீவில் மனிதன் எப்படிவந்தான் என்கிற ஆசங்கையைப் போன்றதுதான். அந்த ஆசங்கையைக் கூறி விடை அளிப்பாம்.

"ஒன்றாயிருந்த அது பலவான காரணம் யாதென்னு மாசங்கை யுண்டாம்" என்றமையே யாசங்கையாம். இத்துடனே "பலவென் னும் பிரசங்கமுண்டாகுகையில், ஒன்று கெடுதலும் அவர் மதத்துக் கிடர்தேடியதாம்" என்றுங் கூறினார். இதைப்பரியாலோசிக்கையில் சோ. நாய்க்கர் கள்ளங் கவடுதெரியாத பேதையரிற்பேதையரென்றே விளங்குகின்றது. பேதையர் என்று மாத்திரஞ் சொல்லாமற் பேதை யரிற் பேதையர் என்று கூறியதென்னெனின் அத்வைதிகள் காரியத் தைத் தோற்றமாய்ச் சொல்வதை யறியாது பொருளாய்ச்சொல்வதா ய்க் கருதிப் பேசுவதால் பேதையரென்றும் இந்த ஆக்ஷேபம் தமது மதத்துக்கும் ஆக்ஷேபமாயிருப்ப தறியாது பேசுவதால் பேதையரிற் பேதையரென்றும் கூறினுமென்க. முன்பு முன்னையதுக்குச் சமாதா னமும் பின்பு பின்னையதிலுள்ள ஆசங்கையையுஞ் சொல்வாம்.

மண் பலபாத்திரங்களாய் விரிந்ததென்றுகொண்டாலும் எங்கு ம் இருப்பது மண்தானே. மண்ணைவிட்டுப் பாத்திரங்கள் இருக்கின்ற னவா? தோற்றமான பாத்திரங்களெல்லாவற்றிற்கும் பொருள் மண் தானே. கானல்நீர் அலையாதிகளாய் விரிந்தாலும் கானலுக்கு நஷ்ட முண்டோ? உண்மையில் கானனீராயிற்றோ? நீர் பொய்யானபோது கானல் நீராய் விரிந்ததென்பதும் பொய்யன்றோ? கானல் உண்மைப் பொருள்; நீர் அலையாதிகள் தோற்றப்பொருள். அங்ஙனமே பிரமம் உண்மைப்பொருள்; பஞ்சபூதவுலகு தோற்றப்பொருள். யதார்த்தப் பொருளில் பொய்ப் பொருள் தோற்றுகின்றதென்னின் அல்லது

விரிந்தது என்னின் யதார்த்தமாய் விரிந்தது என்று கொள்ளும் அறிஞருமுளரோ? கானல்நீர் அலையாதிகளாய் விரிந்ததென் றொரு அவசரத்தில் சொல்லப்பட்டாலும் யதார்த்தத்தில் கானல் நீராகவாவது அலையாகவாவது துளியாகவாவது ஆனதில்லையென்ப துண்மையாம். மனம் சொப்பனப் பிரபஞ்சமாக விரிந்ததென ஒரு அவசரத்தில் சொல்லக்கூடுமோனாலும் மற்றொரு அவசரத்தில இல்லையென்றே சொல்லவேண்டுவது சத்தியம். பிரமம் இங்ஙனமே பஞ்சபூத பௌதிகங்களாக விரிந்ததென்று சொன்னாலும் உண்மையில் அவ்வாறு விரியவில்லையென்பதே துணிவு. பிரமத்தில் அவாந்தரமாயிராநின்ற பின்னு சத்தியானமாயை விரிதலே யுலகு; குவிதலே சத்தி அல்லது சத்தியையுடைய பிரமம். அந்தச்சத்தியும் தோற்றமே; உண்மையல்ல.'

பலவானால் ஒன்றுகெட்டுப்போம் என்கின்றாரன்றோ? ஒன்றுபலவாவதில் ஒன்றுகெட்டுப் பலவாவதுமுண்டு; ஒன்று கெடாமல் பலவாவதுமுண்டு. அது யாங்ஙனமெனின், வித்து: இலை, துளிர், அரும்பு, பூ, பிஞ்சு, காய், பழமுதலியனவாவது ஒன்றுகெட்டுப் பலவாவது; அதாவது வித்துக்கெட்டுப் பலவாவது. வித்துக்கெடாது இலைமுதலியனவாகா. அத்துவிதிகள் பிரமம் பலவாகிறதென்றால், இவர் வித்து இலை முதலிய பலவாதலைச் சொல்லக்கருதிக் குற்றம்கூற வருகின்றார். இது அத்வைதிகளுடைய கொள்கையன்று. பின்னை யாதென்னின் கானல்: நீர் அலையாதிகள் ஆதல்போலாம். இதுதான் அத்வைதிகளுடைய கொள்கை. அத்வைதிகள் உலகுக்குப் பிரமத்தை விவர்த்தோபாதானமாகக் கூறுகின்றவர்களானதாலும் உலகு அனிர்வசனீயமென்று கூறுகின்றவர்களானதாலும் கானல் நீர் முதலிய திருட்டாந்தங் கூறுகின்றவர்களானதாலும் ஒன்றுகெட்டுப் பலவாதலென்று கூறுங் கூற்று அத்வைதிகளுடைய கூற்றன்றென்பதாம்.

சோமசுந்தரநாயகர் துரிய சிவனிடத்தினின்றும் சிவனடியார் வந்தார் அல்லது வருவார் என்று சொல்லி, அதன்விஷயமாக நாம் ஆசங்கித்த ஆசங்கைகளுக்கு எதிர்பேசா தடங்கிவிட்டசங்கதி யெவரும் அறிந்திருக்கின்றனரன்றோ? அப்படிச்சொன்ன சோ. நாய்க்கர் ஷை சிவனிடத்தினின்றும் சபாபதி, உமாமகேசுவரர், காபாலி, தக்ஷிணாமூர்த்தி, ஸ்கந்தர், விநாயகர் முதலிய திருவுருவங்கள் விரிந்து தோன்றினவாக யாதொரு ஆக்ஷேபமில்லாமல் ஒப்புக்கொள்வாரென்பதற்கையமில்லை. ஷை உருவங்கள், துரிய சிவனென வொருபொருளினிடத்துத் தோன்றினவால் அவ்வொருபொருள் அதாவது சிவனாகிய ஒருபொருள் கெட்டுப்போய்த்தானே ஷை சபாபதி முதலிய வுருவங்கள் தோன்றவேண்டும். திருவிளையாடற்புராணத்தில் ஞானசொரூபியாயிருக்கும் பரமசிவன், மிருகசரீரங்களி லொன்றான பன்றியுருவெடுத்து, பன்றிக்குட்டிகட்குப் பால்கொடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றதே. இதில் ஞானசொரூபியான பரசிவன் பன்றியாய் வரும்

போதும் பரசிவன் தனது ஞானவடிவங் கெட்டுத்தானே அஞ்ஞான வடிவான பன்றியுருவெடுத்து வந்திருக்கவேண்டும். ஞானம் அதன் விரோதமான அஞ்ஞானமாகிறதானால் ஞானங்கெட்டுத் தானே அஞ் ஞானமாகவேண்டும். கெட்டு ஆகும்போது ஞானமே யில்லாமற்போ குமே. ஞானமே யில்லாமற்போகுங்கால் அதை யபேதமாகவுடைய பரசிவனு மில்லாமற்போவரோ. அதுமாத்திரமா? பன்றிகாரியமாதலா லும் காரியம் அழிவுபாடுடைய தாதலாலும் காரியம் பொருளின்றித் தோற்றமுடைய தாதலாலும் பன்றி யப்போதே யில்லாமற் போயிற் றாதலாலும் இப்போதும் பன்றி அபாவமாதலாலும் பன்றியுருவமான காரிய பரமசிவனும் இல்லாமற்போவரோ. இங்ஙனமாகக் காரண சிவ னுங் காரிய சிவனு மில்லாமற் போவாராயின் இவர் நாஸ்திகராகத் தடையாது? இவர் நாஸ்திகராகுங்கால் இவர் வணங்குவ தியாரை? வணங்கச்சொல்வது எவரை? இவர் நாஸ்திகராவது ஒருவகையிலா? எந்தவகையிலும்நாஸ்திகராய்ப்போகின்றனரோ. அத்திப்பழத்தைப்பிட் டால் அத்தனையுஞ் சொத்தை யென்பதுபோல் இவர் எதைப்பேசினா லும் நாஸ்திகமதமாகவே முடிகின்றமைக்கு எவர்தான் விசனமுறார்! அந்தோ! அந்தோ! இவரது நாஸ்திகநிலைமை மிகப்பரிதாபமான நிலை மை யென்பதாம்! இவர் மசகக்கடிக்கஞ்சி வேங்கையின் வாய்க்கிரை யாவார்க் கினமாவர்போலும்! பிறரை ஆக்ஷேபிக்கவந்து இந்த விஷ யத்தில் தமக்கு என்னகதியைத் தேடிக்கொண்டார் பாருங்கள்? வே தாகமசாஸ்திர வுண்மைகளை யழிக்கவந்தவராகலின் இவர் நிரயத்து ன்பத்திற் காளாவாரென்பதிலையமில்லை. சாக்ஷாத் சிவபிரானுக்கே தா ம்பூலம்பிடித்து நாஸ்திகராகத்தான் இப்படிப்பட்ட கேள்விகேட்க ஆ ரம்பித்தார். ஒன்று பலவானால் ஒன்று கெடவேண்டுமென்பது அவர் சித்தாந்தமானதால் இந்தச்சித்தாந்தப்பிரகாரம், சிவன் சபாபதி முத லியதிருவுருவங்களாங்கால் சிவனேயில்லாமற் போகவேண்டுமே. அந் தச் சபாபதிமுதலியதிருவுருவங்கள்மானிடசட்டை தாங்கிக்கொண்டு அடியார்களுடைய அநுக்கிரகார்த்தம் மானிட வுருவாய் வருங்கால் அந்தச்சபாபதிமுதலிய திருவுருவுகளுக்கும் அபாவமுண்டாகவேண் டும்; ஷை உருவுகள் காரியமானதினாலும் காரியம் அழிவுடைய தாத லாலுமென்க. ஒன்று மற்றொன்றுமாயின் முதலுருவுக்கு நாசம் வர வேண்டும்போலும். நாசம் வராதபடி மற்றொன்றாகாது போலும். இது சோ. நாய்க்கர் படித்தபடிப்பு. இந்தப்படிப்பைச் சொல்லிக்கொ டுத்தகுரு இவருக் கண்ணனாகத்தா னிருக்கவேண்டும்.

இது ஒருபக்க மிருக்கட்டும். அவர் மதத்தில் மாயையென்பது ஒருபொருள். அதுகாரணப்பொருள். அது பஞ்சபூத காரியமாய் விரிந் ததென்ப தவர்மதம். அது விரிந்ததென்னில் தானில்லா விடத்திற் றானே விரியவேண்டும். அதுகெட்டுத் தானே யுலகாக வேண்டும்; இப்போதிருக்கிறவுலகும் மாயைகெட்டுத்தானேவந்திருக்கவேண்டும்.

அப்படியானால் இப்போது மாயையில்லையென்று சொல்லவேண்டுமே. சொன்னால் இவ்வுலகு இலயகாலத்தில் எதில் இலயமாகும்? இலயமாதற் கிடனின்றே. பால்கெட்டுத் தயிரானால் பின்னும் பாலாகாமல், போகப்போக வேறு வேறு பல வடிவங்களாய் மாறுவதுபோல, இவ்வுலகும் மாயையாகாமல் போகப்போக வேறுவேறு பலபல வடிவமாய்த் தானே மாறுமென்று சொல்லவேண்டும். இது இவர்க்குடன்படாமா? உடன் படின் இவர் மதத்துக்குப் பங்கமாகுமே. இவற்றினாலே யெல்லாம் இவர் ஆக்ஷேபித்த ஆக்ஷேபம் அத்துவித மதத்தைத்தாக்காமல் திரும்பிப்போய் இவர் மதத்தையேதாக்கித் தூரிகரணஞ் செய்து விடுகின்றதே. இவருக்குப் பிறர்மதத்தைக் கண்டிக்க வேண்டுமென்கிற ஆசை நிரம்பவிருக்கின்றது. அந்தஆசையால் கண்டிக்க வருகிறார். ஆனால் அது பிறர் மதத்தைக் கௌரவம் செய்து விட்டுத்திரும்பிவந்து தம்மதத்தையே நாசம்செய்துவிடுகின்றது. இவர் ஆக்ஷேபிக்கும் ஆக்ஷேபங்களெல்லா மிவர் மதத்துக்கே தீங்கு செய்வதா யிருப்பதை யிவரறியாமற்போகின்றனரோ!

பின்னும் இதன்பேரில் பிரமத்துக்கே தாம்பூலம்பிடிக்கவும் பின்னும் நாஸ்திகராகவுமெண்ணிப் பிரமத்தைச்சுட்டிய பொருளிருக்கிறதென்றும் அதனால் பிரமம் ஒருபொருளும்பிரமமெனச்சுட்டியதொரு பொருளும் இருக்கின்றனவென்றும் ஆதலால் அவ் இரண்டுபொருளும் ஒன்றாவதில்லையென்றுங் கூறி, இதனால் தமது இரட்டைச்சித்தாந்தம் பாசாய்விட்டதென்றும் ஜயிக்கப்பட்டுப்போயிற்றென்றும் அற்பசந்தோஷப்படுகின்றார். இவர்க்குச் சுயபுத்தி கிடையாது. இவரதுமுன்னோர் அப்போது எழுதிவைத்த நூலை யுருப்போட்டுக் குருட்டுப்பாடம் பண்ணி மறவாமல் ஒப்புவிக்கின்றார். இவர்மாத்திரமல்ல; இவரதுகூட்டாளிகளும் இப்படியே குருட்டுப்பாடம்பண்ணி யொப்பிவிப்பதில் வெகுதிறமைசாலிகள். இவ்வண்ணமே கோபா - சபாபதி நாவலரும் ஒப்பிவித்தார். இவர் ஒரு மாதிரியாய் ஒப்பிவித்தார்; அவர் ஒரு மாதிரியாய் ஒப்புவித்தார். அவருக்குச் சமாதானங் கிடைத்துவிட்டது. அதுவே யிவருடைய கேள்விக்குஞ் சமாதானமாய்விட்டது. அப்படியிருந்தும் அதன்பேரில் பூர்வபட்சம் பண்ணிப்பேசாமல் அதையே பேசுவதால் குருட்டுப்பாடம் பண்ணி ஒப்பிவிக்கிறாரென்ப துண்மையாகின்றது. சுட்டிக்காட்டிய தொருபொருளும் சுட்டப்பட்டதொருபொருளு மிருக்கின்றன வெனக்கூறி, இரண்டு மொன்றாயிருத்தல் யாங்ஙன மெனக் கேட்கின்றமையின் இரண்டும் இரண்டாகவே யிருக்கவேண்டுமென்ப தவர் சித்தாந்தமென்றாயிற்று. இவர்க்கு எங்குப்போனாலும் இரட்டை இரட்டையாகவேயிருக்கவேண்டும். ஒற்றையானால்சரிப்படாது. இவர் விருந்துக்குப்போனால் இரட்டையிலை போடவேண்டும். ஒற்றையிலை போட்டால் சாப்பிடமாட்டார். சொப்பனத்திற்கூட இவருக்கு இரட்டையில் வெகுபிரியமாயிருக்கும். சொ

ப்பனம் பொய்தானே, அங்கு இரட்டையில்லாவிட்டால் முழுகிப்
போவதென்ன வென் றிருக்கமாட்டார். அவர் சொப்பனத்தைச் சத்
தியமெனக் கொண்டிருக்கும் சொப்பன தத்துவசாஸ்திரியா ராக
வின் அங்கும் தமது சித்தாந்தம் இரட்டையாகவே பலிக்கவேண்டு
மென் றிருப்பார். அம்மம்ம இவரதியற்கை வெகு அற்புதம்! நாம்
இது கடம், இதுபடமென்று சுட்டுகின்றோம். சுட்டும்போது சுட்டும்
பொருள் நாம்; சுட்டப்படும் பொருள்கள் கடபடங்கள். அம்மாதிரிக்
கடவுளை யார் சுட்டினார்கள்? யார் சுட்டுகின்றார்கள்? சுட்டப்படும்
பொருளான கடவுள், நம்மால் சுட்டியறிவதற்கு ங்கடபடம்போல் கா
ணப்படுகின்றனரோ? காணப்படுகின்றன ரென்னின் அவர் கண்ணால்
சுட்டிக் காணப்படுபவரா? மனத்தினாற்சுட்டிக் காணப்படுபவரா?
கண்ணால் சுட்டிக் காணப்படுபவரென்று சொல்வதற் கிடனின்று;
அவர் கண்ணுக்கு விஷயப்படாமையாலென்க. மனத்தினால் சுட்டிக்
காணப்படுபவரென்னின் கண்ணினால் கண்ட பொருளை மனம் நினைக்
குமேயன்றி, தானே யொருபொருளையும் நினையாது. ஜீவனால் அல்
லது ஜீவான்மாவினால் காணப்படுபவரென்னின் ஜீவான்மா கண்
ணின்றியும் கண்ணின் வழியாக மனமின்றியும் காணுதலென்பது
வெற்றுரையாம். ஆகவே, கடவுள் இந்திரியத்தினாலும் மனத்தினா
லும் ஜீவான்மாவினாலும் காணப்படாதவரென்பது சித்தாந்தமாயிற்
றென்க. கடவுள்காணப்படுவாரொன்றேவைத்துக்கொள்வோம். காண
ப்படும்கடவுளும், காண்பானான புருஷனும் பின்னமா? அபின்னமா?
கடமென்கிற சுட்டுப்பொருளும் அதைச் சுட்டிக் காண்கின்ற புருஷ
னும் பின்னமாவதுபோல, சுட்டுப்பொருளானகடவுளும், சுட்டியறி
கின்ற நாமும் பின்னப்பொருள்களாம். புருஷன் ஒரு இடத்திலிருக்
கின்றான்; கடம் ஒரு இடத்தி லிருக்கின்றது. இதுபோலக் கடவுள்
ஒரு இடத்திலும் நாம் ஒரு இடத்திலும் இருக்கின்றதாய் ஆகின்றது.
புருஷ னிருக்குமிடத்தில் கடமில்லை; கடமிருக்குமிடத்தில் புருஷ
னில்லை. அங்ஙனமே கடவுளிருக்கு மிடத்தில் நாமில்லை; நாமிருக்கு
மிடத்தில் கடவு ளில்லை. இதனால் கடவுள் அபரிபூரணரெனச்
சித்தாந்தமாயிற்று. இந்தத்தோஷத்தோடொழிந்ததா? இல்லை இல்லை.
இன்னும் பெரும் அநர்த்தத்திற் கிடமாகின்றது. எது சுட்டப்படும்
பொருளோ, எது அறிபடும்பொருளோ அது சடப்பொருளாயிருக்க
வேண்டும்; எது சடப்பொருளோ அது அசத்தா யிருக்கவேண்டும்.
(அது பற்றியே சிவஞானபோதம் உணருரு அசத்தென்று கூறுகின்
றது.) கடவுளை அபரிபூரணரென்று சொன்னாலும் சொல்லட்டும்.
அதனால் அவ்வளவு தோஷ மில்லை. சடமென்றும் அசத்தென்
றும் சொல்வதுதான் பெருந்தோஷம். இவர் கடவுளைச் சுட்டுப்பொ
ருளெனக்கூறி, இரட்டைச் சித்தாந்தத்துக்கு ஆஸ்பதந்தேடப்போய்
க்கடவுளுக்கே தாம்பூலம் பிடிக்கின்றாரே! சடமென்றும் அசத்தெ
ன்றும் சொல்லிவிட்டபிறகு கடவுளெனச்சொல்லலென்? சொல்லா

தொழிலென்? உலகமென்று சொல்வதற்குப்பதில் உலகைக் கடவுளென்கிறார். சட இலக்கணமும் அசத்திலக்கணமும் உடையது உலகமேயன்றிக் கடவுளல்ல. நாஸ்திகர் எதை யுலகமென்று சொல்லுகின்றனரோ, அதையே இந்தச்சோமசுந்தரநாயகர் கடவுளென்கின்றார். நாஸ்திகர் உலகை யுலகென்றுசொல்வதால் சத்தியவாதிகள்; சோமசுந்தர நாயக்கர் உலகை யுலகென்று சொல்லாமல் கடவுளென்று சொல்வதால் அசத்தியவாதி. நாஸ்திகர்க்கு நாஸ்திகவாதியென்று மாத்திரம் பேர். இச்சோமசுந்தர நாயக்கருக்கு நாஸ்திகவாதியென்றும்பேர்; அசத்தியவாதி யென்றும்பேர். ஆதலால நாஸ்திகரைவிட இவர் குறைந்தவராம். ஆகவே இவர் பரம நாஸ்திகராவென்றார். நாஸ்திகர், தம்மை நாஸ்திகரென வுண்மையைச்சொல்வதால் அவர் யோக்கியர். இவர் அவரைவிடப் பரம நாஸ்திகராயிருந்தும், தம்மைப் பரம நாஸ்திகரென வெட்கத்தினாலோ, இன்னும் யாதுகாரணத்தினாலோசொல்லிக்கொள்ள இஷ்டமில்லாவிடினும் வாளா நாஸ்திகரென்றாவது சொல்லாது, ஆஸ்திகரென்று சொல்வதால் அவர்போல யோக்கியராகார். ஆகாரென்பது திண்ணமாயிருக்க, ஆஸ்திகரென்றும் அதிலுஞ் சைவரென்றும் சொல்லிக்கொண்டு வெளியில்வருவது பாமரரும் பரிகசித்தற் கிடனும். உண்மையில் பரம நாஸ்திகரும் பொய்ம்மையில் பரமஆஸ்திகரும் அதிலும் பரமசைவரென விபூதிஉருத்திராக்ஷவேடம் பூண்டவருமான இந்தச் சோம. நாயக்கரைக்கொண்டு, தூத்துக்குடி சைவப்பிரகாச சமாஜத்தார் இலகு பத்திரமெழுதுவித்துக்கொண்டது, தாங்களும் பரமநாஸ்திகரென்று காட்டிக்கொள்வதற்காகவேதான் போலும்! இந்தச்சோம-நாயக்கர் கடவுளைச்சுட்டுப் பொருளெனச் சொல்லப்போய் தாம் நாஸ்திகராவது மசகக்கடிக்கஞ்சிப் புலியின் வாய்க்கிரையான கதைபோலாமென்க.

கடவுளைச் சுட்டாமல் எப்படிவணங்குகின்றது, எப்படித்தியானிக்கின்றது எனின், கடவுளை அதாவது அவரது யதார்த்ததுரியசொரூபத்தைச் சுட்டியறிதலாகாது. அவரது சத்துவமாயா சம்பந்தமான சகளவடிவே வணங்குதற்கும் தியானித்தற்கும் யோக்கியமாம். மாயையின்றி அவர் சகளமாய் வெளிப்படமாட்டார். அதுபற்றியே

சூதசங்கிதை பரசிவசொருபவிசார முரைத்த அத்தியாயம்.

*மறைமுதல்தனக்கு நாமரூபங்கள் மருவுதலில்லையே யெனினும், மறையறவிளங்கும் மாயையினாலே கற்பிக்கப்பட்டனவாகும், முறைகயச்சிவன்மாதேவன் முற்பெயர்களுருத்திரனு மங்களாகும், மறை பரம்பிரமமுதற்பெயர் பரதத்துவ வவிர் வாசகமால்.* (கசு)

ஷை பஞ்சப்பிரமவிசார முரைத்த அத்தியாயம்.

*பரமசிவன் மாயையினாலே யைம்பிரம வுருவானான்.* (கஎ)

வாயுசங்கிதை உருத்திரன் வெளிப்படும் அத்தியாயம்.

*உறையு மாயையுடன் கூடியுறைவோய் நின்னைத்தொழுகிடுவோம்.* (ச)

### யசுர்வேதத்தில் கைவல்யோபநிஷத்.

அவனே (அந்தப் பரமாத்துமாவே) மாயையினாலே மோகிக்கப்பட்ட அந்தக்கரணத்தை யுடையவனாய்ச் சரீரத்தை யடைந்து சகலத்தையுஞ் செய்கிறான்.

### சுக்கில யசுர் வேதத்தில் நிராலம்போபநிஷத்.

ப்ரம்மமே தன்னுடைய சக்தியாகிற பிரகிருதியினாலே (ஈசுவரன் என்கிற) பெயரைவகித்து உலகங்களைச்சிருஷ்டித்து (அதிலே) அந்தரியாமியாய்ப் பிரவேசித்து ப்ரம்மாமுதலானவர்களுடைய புத்தி இந்திரியங்களுக்கு நியாமகனாயிருப்பதினாலே ஈசுவரனாகிறான்.

### திருவாசகம்.

மாயனே—மாயவன் அப்பரிமேல்கொண்டு.

என்றுகூறப்பட்டிருக்கின்றன. மாயையின்றித் துரிய சிவக்கடவுளுக்கு உருவமில்லை; உருவமில்லாவிடில் வணங்குதற்கும் தியானித்தற்கும் இடனில்லை. கடவுள் சுட்டி அறியப்படாதவரென்பதற்கும் அளவைக்குட்படாதவரென்பதற்கும் வேண்டிய பிரமாணங்கள் ப்ரம்மவித்யாவின் 'வேதாந்த சங்கை நிராகரணை'த்தில் அனேகமாய்க் காட்டப்பட்டிருக்கின்றன; ஆங்குக்கண்டுகொள்க. மாயாசம்பந்தமின்றித் துரிய சிவனிடத்தினின்றும் சிவனடியார் வந்தார், அல்லது வருவாரென வேதாதிகலைகளுக்கு மாறாய்ச்சொல்லிவிட்டு இவர் பட்டபாடு எவருமறிந்தே யிருக்கின்றமையானும் அதற்காக நியாயம் இது வரையில் அரித்தரித்துத் தேடியும் அகப்படாமையானும் இவருடைய வாதம் துர்வாதமாயும் குளறுபடை வாதமாயும் முடிந்தமை காண்க.

பின்னும் பழைய கதையையே விரித்தவமானப்படவேண்டி, "அவ்வொன்று பலவாய் விரிந்ததென்னுங்கால் அது முன்னர் வியா"பித்திராத விடத்திலேயே பின்னர் வியாபித்திடல் வேண்டும். ஒரு "வித்து அங்குரித்து விருக்ஷமாகுகையில் அதனது சாகோப சாகை"கள் தழைக்கின்றன. அவ்வாறு தழைத்து வியாபிப்பது அது முன்"னரில்லாத இடத்திலேயேயாம்" என்று கரைகின்றார். இது துரிய சிவன் சிவனடியாராய் ஆகின்றாரென இவர் கூறியபோது'சங்கராசாரியார் அவதார மகிமை'யில் நாம் மறுத்த மறுப்பே. விரிதல் பொருளாகவானால் தானில்லாவிடத்திற்றான் விரியவேண்டும். அத்துவிதிகள் பொருளாக விரிவதாய் ஒப்பாமையால் அவர்கள் பேரில் தோஷமில்லை. அத்துவிதிகள் விரிதலைத் தோற்றமாகச் சொல்ல, அதை யுண்மையாகப்பிரமித்து, அப்பிரமை காரணமாக அவர்கள் பேரில் குற்றங்கூறிக்குற்றவாளியாவ திவ்வொரு விஷயத்தில் மாத்திரமன்று; எல்லா விஷயத்திலு மிவர்க் கியற்கையாம். அத்துவிதிகள் விரிதலைத்தோற்றமாகச் சொல்வதால் இவருடையகேள்விக்குச்சமாதானஞ் சொல்லித் தப்பித்துக்கொண்டார்கள். இவர், துரிய சிவனைப் பலவுருவங்களாக வெளிப்படுவதையும் அதிலும் பன்றியாக வந்ததையும் மாயை பல வகைக்காரியமாக ஆவதையும் சத்தாகச்சொல்வதால் தப்பித்துக்கொ

ள்ளவிடமின்றி நமது ஆக்ஷேபமென்னும் விலங்கைச் சணப்பன் வீட்டுக்கோழிபோலத் தாமே பூட்டிக்கொண்டு நியாயமென்னுஞ் சிறைச்சாலையில் மீளாமல் கிடக்கின்றார்.

இவர் பக்ஷத்தில் பிரமஸ்தானத்தில் நிலமும் மாயைஸ்தானத்தில் வித்தும் உலகஸ்தானத்தில் அங்குரமுமாம். நிலத்தில் வித்து அடங்கியிருக்கிறது. வித்து அங்குரமாய் விரியுங்கால் நிலமில்லாவிடத்தில் அதாவது நிலத்துக்கு மேலே விரிகின்றது. அங்குரமாய் அதன்பேரில் விருக்ஷமாகுகையில் இவர் கூறுவது போலச் சாகோபசாகைகள் தழைக்கின்றன. அவ்வாறு தழைத்து வியாபிப்பது நிலமில்லாவிடத்திற்றான். அங்ஙனமே பிரம மில்லா விடத்திற்றான் மாயை யுலகாக விரியவேண்டும். பிரம மில்லாவிடத்தில் மாயை உலகாக விரியுமென்பதொரு குற்றம்; மாயை முன்னில்லா விடத்தில் உலகாக விரியுமென்பதொரு குற்றம். ஆக விருகுற்றத்தையும் தம்மிடம் வைத்துக்கொண்டு, இவர்போல் சத்தாகச்சொல்லாமல் போலியாகச்சொல்லும் அத்வைதிகளைக் கண்டிக்கப்புகுவது பேதைமையே யென்க. இருவகைக் குற்றங்களைத் தம்மிடம் வைத்துக்கொண்டு குற்றமற்ற அத்வைதிகளைக் கேள்விகேட்பது தமது மதங் குற்றமுள்ளதெனத் தம்மவர்க்குக்காட்டிவிட்டுப் பின் அதைவிட்டு விலகுவதற்கே போலும்!

இனிச் சோம. நாய்க்கர் மற்றொரு உபமானங் கூறித்தாமேபின்னும் வலியவந்து அகப்பட்டுக்கொள்ளும் விந்தையிது:—"பிரமம் ஆகாயத்தானத்திலே உவமிக்கப் படுவதாகையால் ஆகாயம் விரிதற்கு வேறிடமில்லாதவாறுபோலப் பிரமம் பலவாக விரிந்திடற்கு வேறில்லாமை தெளிந்திடுக" என்பது. இவர் ஆகாயஸ்தானத்தில்பிரமத்தையும் ஆகாயத்திலிருக்கும் வாயு தேயு அப்பு பிருதிவி ஸ்தானத்தில் உலகையும் உபமானமாகச் சொல்லுகின்றார். இந்த வுபமானஞ் சொல்வதால் ஆழமறியாமல் கால்வைத்தவர்க்கினமாகின்றார். இவருக்குமுன் யோசனையே யன்றிப் பின் யோசனையில்லை. இவர் கேட்குங் கேள்வியிவருக்குப் பயன்படாமல் வீணாய்ப்போவதோடொழிவதில்லை; இவர் தலைக்கே தீங்கையும் கொண்டு வந்து விடுகின்றது. இப்படிப்பட்ட கேள்வியை விட்டாலும் வேறு வழியில்லை. யாது செய்வார்! இவருடைய சிநேகர்கள் "துவைத சைவத்துக்கு மோசம் வருகிறதே, ஆதலால் அதற்கேதேனும் பதிலெழுதி, துவைத சைவத்தை ஸ்தாபிக்க வேண்டுமெனத் தூண்டியிருப்பார்கள். அவர்களுடைய மகிழ்ச்சிக்காக தப்போ, தவறோ, ஏதோ தம்மனத்துக்குத் தோன்றியமட்டில், காகிதங்கண்டமட்டில், கைகொண்ட மட்டில், வாய்க்கு வந்தமட்டில் வரிந்து விட்டால் சரியானாலாகட்டும், இல்லாவிட்டால் போகட்டு"மென வொன்றை யெழுதித் தொலைத்து விட்டார்போ லிருக்கிறது. சுபாவமாயுள்ள துவிதிகளுக்கு அத்துவிதத்தில் இவ்வளவு த்வேஷமிராது. இவர் அத்துவிதத்தினின்றும் துவிதத்திற்குச் சென்றவராகலின் இவருக்கு முன்னிருந்த மதத்தில் த்வேஷம் அதிகரித்திருக்கின்

றது. அதனால் அத்வைதத்தைத் தகர்த்து விடவேண்டுமென்று என்
னென்னமோ கஜகரண கோகரணங்கள் செய்து பார்க்கின்றார். இத்
தத் துவிதமசகத்துக்கு அத்துவித மலை யசைகிறதா? இல்லை. அசை
யாமற் போனாலும் போகட்டும். அதிர்தொடிகின்றதா? அம்மலையில்
மோதுகிற மோதலினால் துவிதமசகத்துக்குக் காயமுட்பட்டு, எழவே
சக்தியில்லாமற்போகிறது. இது தான் இலாபம் துவித மசகத்துக்கு.

ஆகாயத்தினின்றும் வாயுவும், வாயுவினின்றும் தேயுவும், தேயு
வினின்றும் அப்புவும், அப்புவினின்றும் பிருதிவியும் தோன்றின வென்
பது வேதாகமபுராணாதிகளின் சம்மதம்; அந்த முறைப்பிரகாரம் ஒடு
ங்குகின்றன வென்பதும் அவைகளின் சம்மதமாம். பஞ்சினின்றும்
நூலும் நூலினின்றும் வஸ்திரமும் உண்டாவது போல, ஆகாயத்தி
னின்றும வாயுவாதிகளுண்டாகின்றன. பஞ்சு காரணமும் நூல் வஸ்
திரங்கள் காரியமும் ஆதல்போல ஆகாயம் காரணமும் வாயுவாதிகள்
காரியமுமாம். காரணத்தைத்தவிரக் காரியத்துக்கு எங்ஙனம் பொரு
ளின்றோ, அதாவது பஞ்சைத்தவிர நூல் வஸ்திரங்கட்கு எங்ஙனம்
பொருளின்றோ, அங்ஙனமே ஆகாயத்தைத்தவிர வாயுவாதிகளுக்குப்
பொருளின்று. நூலுக்கும் வஸ்திரங்கட்கும் பொருளாயிருப்பது எங்
ஙனம் பஞ்சோ, அங்ஙனமே வாயுவாதிகளுக்குப் பொருளாயிருப்பது
ஆகாயமேயாம். பஞ்சில் நூல் வஸ்திரங்கள் எங்ஙனந் தோற்றமோ,
அங்ஙனமே ஆகாயத்தில் வாயுவாதிகள் தோற்றமாம். இவ்வாறே பிர
மத்தின்கண் இச்சாக்கிரவுலகு தோற்றமேயாம். வாயுவாதிகள் அநு
பவிக்கப்படுகின்றமையின் எங்ஙனந் தோற்றமாகும் என்றாலோ தோ
ற்ற மூன்று வகைப்படும். அவைகளாவன கயிற்றரவு, கானனீர், சொ
ப்பன ஜகங்களாம். கயிற்றரவில் அரவு அசத்தென வுணரில் பின்னர்
அரவு தோற்றுவதின்று. கானனீரில் கானலையன்றி நீர் இன்றெனவுண
ரினும் பின்னரும் நீர் தோற்றிக்கொண்டே யிருக்கின்றது. ஆனால் நீர்
அருந்துதற்குதவுவதில்லை. சொப்பன ஜகமோ சத்த பரிச ரூப ரச கந்
தனை அநுபவிப்பதற் கேற்றதாயிருக்கின்றது. அங்ஙனமிருந்தும் சொ
ப்பன சகம் அசத்தென்று கூறுதற்கிடனாயிருக்கின்றதன்றோ? அங்ஙன
மே ஆகாயத்தின்கண் மற்ற வாயுவாதிகள் அநுபவத்திற் கிடனாயினும்
அசத்தென்றே கூறுதற் கிடனாம். இன்னுஞ் சற்று ஊன்றிப்பார்க்கு
மிடத்து அநுபவமென்பதும் பொய்யாம். எங்ஙனமென்னின் வாயு
தேயு அப்பு பிருதிவிகளான சரீரத்தைவிட்டு யாருக்கு அநுபவமெ
ன்று பார்க்குமிடத்து அநுபவமென்பதும் அபாவமாகும். இந்த அநு
த்தம் கோபா - சபாபதி நாவலரைக்கண்டித் தெழுதப்பட்ட வேதா
ந்த சங்கை நிவாரணத்தில் விசதமாய் விளங்கும். ஆங்குக்கண்டு தெ
ளிந்திடுக. ஷை வாயுவாதிகளும் சொப்பன ஜகமும் பிரமத்திற்றோ
றிய இவ்வுலகமும் ஆகாயப்பூப்போல முற்றும் அபாவமாய்ப் போ
கின்றதலால் அவைகள் சதசத்விலக்ஷண அநிர்வசனீயமெனச் சொ
ல்லப்படுகின்றனவாம்.

இது வரையில் வாதஞ்செய்ததில் ஆகாயதிருட்டாந்தம் அத்வைதிகளுக்குச் சாதகமும் அதிலும் பெருஞ் சாதகமும் இந்தச் சோ. நாய்க்கருக்குப் பாதகமும் அதிலும் பெரும்பாதகமுமாய் முடிந்தமை காண்க. இனி ஷை ஆகாய திருட்டாந்த மிவருடைய மதத்துக்கே மோசமாதலைத் தெரிவிப்பாம். ஆகாயத்திலிருந்துணடான வாயுவாதிகளில் ஆகாயம் நிறைந்துமிருக்கின்றது; வாயுவாதிகள் ஆகாயத்துக்கு மிஞ்சாமல் உட்பட்டும் இருக்கின்றன. அது மண்கடமாய் விரிந்து அக்கடத்திலேயே நிறைந்து அக்கடம் மண்ணுக்கு மிஞ்சாமல் இருப்பதுபோலும், கயிறு பாம்பாய் விரிந்து அப்பாம்பில் நிறைந்து அப்பாம்பு கயிற்றுக்குமிஞ்சாமல் இருப்பதுபோலும் இருக்கின்றனவென்க. இங்ஙனமே பிரமம் உலகாய் விரிந்து அவ்வுலகில் நிறைந்து அவ்வுலகு பிரமத்துக்கு மிஞ்சாமலிருக்கின்றது. இதனால் பிரமம் விரிந்ததென்பதுண்மையன்றெனவும் போலியெனவும்ஆகாயமும் அங்ஙனமேயாமெனவுமாகி, ஆகாயவுபமானம் இவரது துவைத சித்தாந்தத்தை மறுத்து அத்வைதியாக்கி விட்டதென் றறிந்திடுக.

ஷை ஆகாயவாதத்தால் ஆகாயங் காரணமும் இதர பூதபௌதிகங்கள் காரியமும் ஆனமைபோன்றும் அதிலும் விவர்த்தகாரணகாரியமானமைபோன்றும் பிரமம் காரணமும் இச்சாக்கிரவுலகு காரியமும் அதிலும் விவர்த்த காரண காரியமுமாகி, உலகுக்குப் பிரமத்தைவிவர்த்தோபாதானஞ் சொல்லும் அத்துவிதத்துக்குச் சாதகமும், அதையொப்பாத துவிதிகளுக்குப் பாதகமுமாய், இவரது மதத்துக்கிடையூற்றை யுண்டாக்கினமை காண்க.

இனி ஆகாயத்திலிருந்து வாயுவாதிகளுற்பத்தியாம் வகையை ஆராய்ந்து பார்த்து, அதுவும் இவருக்குச் சாதகமா? பாதகமா? என்பதை விசாரிப்பாம். ஆகாயத்தின்கண் வாயுவாதிகளுற்பத்தியாதல் தாய் குழவியைப்போல் பின்னவாத மாகவா? பால்தயிரைப்போல் பரிணாமவாதமாகவா? வித்து மரம்போல் மற்றொரு பரிணாம வாதமாகவா? சூரியன் பிரதி பிம்ப சூரியனைப்போல் பிம்பப் பிரதிபிம்ப வாதமாகவா? நீர் அலையாதிபோல் அம்சாம்சிக வாதமாகவா? மண் கடம்போல் காரணகாரியவாத மாகவா? கயிறு அரவுபோல் விவர்த்தவாத மாகவா? இவைகளல்லாவிடில் வேறு எவைபோல்? தாய் மகனைப்போலென்னின் தாய் ஒரு இடமும் மகன் ஒரு இடமுமாகிக் கண்டப்படுகின்றமையின் அகண்டமாகிய ஆகாயத்திற்கு இவ்வுவமானம் பொருந்தாது. அன்றித் தாயில்லாவிடத்தில் குழவி யிருப்பதுபோல் ஆகாயமில்லாவிடத்தில் வாயுவாதிகளிருக்கவேண்டும். இது பிரத்தியக்ஷ விரோதமா மென்க. இனிப் பால் தயிராவதுபோலென்னின் பால் தயிர்போலென்பதில் பால்கெட்டுத் தயிராவதுபோல ஆகாயங் கெட்டு வாயுவாதிளாக வேண்டும். தயிராகும்போது பாலி

ல்லாமற்போவதுபோல் வாயுவாதிகளிருக்கும் இப்போது ஆகாயமின்
றெனக் கூறவேண்டிவரும். ஆதலாலிதும் பொருத்தமன்று; இப்
போது ஆகாயமிருத்தலினாலென்க. வித்து மரமாம்போலென்னின் வித்
துக்கெட்டு மரமாவதுபோல் ஆகாயங்கெட்டு வாயுவாதிகளாகவேண்
டும். மரமாயிருக்கும்போது வித்தில்லாமற்போதல்போல வாயுவாதிக
ளாயிருக்கும்போது ஆகாயமில்லாமற் போகவேண்டும். வாயுவாதிக
ளாயிருக்குமிப்போது ஆகாயமில்லையா? இது நிற்க, வித்துத் தானில்
லாவிடத்தில் மரமாகின்றது. அதுபோல் ஆகாய மில்லாவிடத்தில்
வாயுவாதிக ளிருக்கவேண்டும். அன்றி வித்துடனே ஜலமுதலிய வஸ்
துகள் சேர்ந்து விருக்ஷமாகின்றது. அதுபோல் ஆகாயத்துடனே இதர
பொருள்கள் சேர்ந்து வாயுவாதிகளாக வேண்டும். ஆதலா லிவ்வுபமா
னமும் பயனற்றவுபமானமாம். சூரியன் பிரதிபிம்ப சூரியனாவதுபோ
ல என்னின் சூரியன் தானில்லாவிடத்திலுள்ள நீரிற் பிரதிபலித்துப்
பிரதிபலன சூரியனாதல்போல ஆகாயமும் தானில்லாவிடத்துள்ள
ஏதோ வொருபொருளிற் பிரதிபலிக்கவேண்டும். இங்ஙனங் கூறு
வதனால் ஆகாயங் கண்டப் பொருளாய்விடும். அத்துடனே பிரதி
பலிக்க மற்றொரு பொருளும் வேண்டும். ஆகாயத்தைவிட வேறு
பொருளின்மையின் அது பொருந்தாது. நீர் அலையாதிபோ லென்
னின் இதுவுங் குற்றமாம். நீர், தானில்லாவிடத்தில் அலையாதிகளாய்
எழக் காண்கின்றோம். அங்ஙனமே ஆகாய மில்லாவிடத்தில் வாயு
வாதிகள் எழவேண்டும். பூரணமாய் ஆகாய மிருப்பதால் அது இல்
லாவிடத்தில் வாயுவாதிகள் எழுகின்றனவென்பது வெறுஞ்சொல்
லாம். அன்றி நீரை யலையாக்குதற்கு வாயுவாதிகள் இன்றியமையா
மைபோல ஆகாயத்தை வாயுவாதிகளாக்க வேறுபொருள் அத்தியா
வசியம். உபமேயத்தில் ஆகாயத்தையன்றி வேறுபொருளின் றென்
பது திண்ணம். அன்றி நீர் விகாரமுற்றே அலையாதிகளா யாகின்றது.
அங்ஙனம் ஆகாயம் விகாரத்தைப்பெற்றே வாயுவாதிக ளாதல்வேண்
டும். இவ்வாறு தத்துவ நூலோர்ந்த எந்த மதிவல்லனாயினும் விள
ம்புவானோ? இது இப்படி யிருக்கட்டும். நீரைத்தவிர அலையாதிகளுக்
குப் பொருளுண்டா? அலையாதிகள் தோற்றமேயன்றிப்பொருளின்று.
அங்ஙனமே ஆகாயத்தையன்றி வாயுவாதிகளுக்குப் பொருள் அபா
வமாம். இனி மண்கடம்போ லென்னின் மண்ணின்கண் விகார
முண்டாகாது கடமாதலின்று. மண், தானில்லாவிடத்திலேயே வனை
தலாதித் தொழிலைப் பெறுகின்றது. அதுபோல் ஆகாயம் விகாரப்
பட்டே கடமாதல்வேண்டும். அன்றி ஆகாய மில்லாவிடத்திலேயே
வாயுவாதிக ளுண்டாதல்வேண்டும். அதுதவிர மண்ணையன்றிக்
கடத்துக்குப் பொருளில்லை; கடம் வெறுந்தோற்றமேயாம். அங்ங
னமே ஆகாயத்தையன்றி வாயுவாதிகளுக்குப் பொருளில்லாதிருக்க
வேண்டும்; அத்துடனே வாயுவாதிகள் வெறுந்தோற்றமாயு மிருக்க
வேண்டும். இத்துணைத் தோஷ மிருக்கின்றமையின் இவ்வாதமும்

சோம. நாயக்கருக்குப் பயன்படாமற்போமென்க. இனிக் கயிற்றரவுபோல் விவர்த்தவாதமாகக் கூறின் யாதொரு ஆட்சேபமுமில்லாமற் பொருந்தும். கயிற்றின்கண் அரவு தோற்றமேயன்றிப் பொருளில்லை. கயிற்றுக்கு நஷ்டமில்லாமலும் கயிறு விகாரப்படாமலும் அரவு தோற்றுகின்றது. அன்றிக்கயிற்றுக்கு மிஞ்சாமல் கயிறு ஸ்தானத்திலேயே தோற்றுகின்றது. இவ்வாறு ஆகாயம் நஷ்டப்படாமலும் விகாரப்படாமலும் வாயுவாதிக டோற்றுவதோடு, ஆகாயத்துக்கு மிஞ்சாமல் ஆகாயஸ்தானத்திலேயேதோற்றுகின்றன. கயிற்றைத்தவிர வரவில்லையெனத் தெளிந்தபின்னர் அரவு தோற்றவில்லை. அவ்வாறு ஆகாயத்தையன்றி வாயுவாதிகளில்லையெனத் தெளிந்தபின்னரும் தோற்றுகின்றதே யென்பதற்கும் வாயுவாதிகள் அநுபவப்படுகின்றனவே வென்பதற்கும் கானனீர் சொப்பன ஜகங்களைத் திருட்டாந்தமாகக் காட்டி முன்னரே கூறினும், ஆங்குக் கண்டுகொள்க. இந்த விவர்த்தவாதமே யுண்மையானது. இதனால் ஆகாயத்தில் மற்ற வாயுவாதிகளிருப்பது விவர்த்தமாகவன்றி யுண்மையாயல்லவெனவும், இங்ஙனமே பிரமத்தின்கண் உலகிருப்பது விவர்த்தமாகவன்றி யுண்மையாய் அல்லவெனவும் ஏற்படுகின்றன. இது பற்றியே ஆகாய வுவமானங் கூறப்படுகின்றதென்க. இதனை யோராது ஆகாய வுவமானந் தமக்குச் சாதகமாகவும் அத்வைதிகளுக்குப் பாதகமாகவும் இருப்பதுபோலெண்ணிக் கூறி யேமாந்து மோசம்போனார்! எந்தவகையி னுழையப் பார்த்தாலும சோம. நாய்க்கர் தப்பியோட வழியில்லை. ஒவ்வொரு வழியும் அடைக்கப்பட்டிருக்கின்றன; அதுவும் வச்சிரமலையினால் அடைக்கப்பட்டிருக்கின்றன.

"ஆகாயந் தனக்கு விஜாதியான பலபொருள்களாக விரிந்திடாததுபோலப் பிரமமும தனக்கு விஜாதியான பல பொருள்களாக விரிந்திடாது என்பதுஞ் சித்தாந்தமாயினமையுணர்க" எனப்பேசி உண்மையாகவே வேதாந்த வழக்கறியாரெனக் காட்டிக் கொண்டார். இவர் நூற்பிரமாணங்களை வைத்துக்கொண்டு வாதஞ்செய்கின்றாரில்லை. தான்றோன்றித்தம்பிரானாய் வாயில்வந்தபடி பேசுகின்றார்.

சுக்கில யசுர்வேதம் பைங்களோபநிஷத் க-வது அத்தியாயம்.

"அந்த ஆன்மா (ஆன்மாவென்னுஞ் சொல்லுக்குப் பொருள் பிரமம்) வினிடத்தினின்று ஆகாய முண்டாயிற்று. ஆகாயத்திலிருந்து வாயுவும் வாயுவிலிருந்து அக்கினியும் அக்கினியிலிருந்து அப்புவும அப்புவிலிருந்து பிருதிவியு முண்டாயின".

ஷை ௩-வது அத்தியாயம்.

பூமியைச்சலத்திலும் சலத்தை யக்கினியிலும் அக்கினியை வாயுவிலும் வாயுவை ஆகாயத்திலும் ஆகாயத்தை யகங்காரத்திலும் அகங்காரத்தை மகதத்துவத்திலும் மகதத்துவத்தை அவ்யக்தத்திலும் அவ்வியக்தத்தைப் புருஷனிலும் கிரமமாக லயிக்கச்செய்கிறான்.

## பிரமகீதை தைத்திரிய உபநிடதம்.

அஞ்ஞான மாயாசத்திக்குச் சான்று யகத்துறை யசலவான்மாவை,
மெய்ஞ்ஞானப்பரத்தில் வேறறக்காணுமவன் பிரம பீசனின் மிக்கான், மெய்
ஞ்ஞானப்பரத்தில் வேறறுஞ்சத்தி மிச்சிரமித்த வான்மாவிற், பைஞ்ஞாக
மாலைபோலவே தோன்றப்படும் பஞ்சீகரித்துளவான். (கஅ)

வாயுவென்று பெயருடைய பரிசம் வானத்துண்டாயத், தேயுவதிலே
தோன்றிற் றவ்வனலிலப்புமுண்டாயத், தோயமதனில் மண்ணுதித்தது ஞக்
கும மைந்தையும் பஞ்சீகரிக்கத், தூயவிறைவனுக்கினையாற் றூலபஞ்சபூத
மும்மாம். (கக)

## விஷ்ணுபுராணம் ஆறும் அம்சம் நாலாம் அத்தியாயம்
## பிராகிருதப் பிரளயம்.

பிருதிவியானது அதைச் சூழ்ந்த அப்புவிலும், அவ்வப்பு அதைச்சூழ்ந்த
தேஜசிலும், அத்தேஜசு அதைச்சூழ்ந்திரா நின்ற வாயுவிலும், அவ்வாயு
தன்னைச்சூழ்ந்த ஆகாயத்திலும், அவ்வாகாயம் அகங்காரத்திலும், அவ்வகங்
காரம் மகத்திலும் லயமாகின்றன.

என்று கூறியிருப்பதால் ஆகாயத்திலிருந்து வாயுவாதிகளுண்டாய்
ஒடுங்குகின்றன வென்பது சுருதி முதலிய நூற்பிரமாணமென்பதாம்.
இதில் ஆகாயத்திலிருந் துண்டான வாயுவாதிகள் ஆகாயத்திற்குச்
சுஜாதியா? விஜாதியா? ஆகாயத்திற்கு வாயு தேயு அப்பு பிருதிவிகள்
சுஜாதியல்ல, விஜாதியே யென்பது காட்சியளவையாகலினும் ஷ
வாயுவாதிகள் ஆகாயத்தின் காரியமென்பது சுருதிநூற் பிரமாணமா
கலினும் 'அவ்வாகாயம் தனக்கு விஜாதியான பலபொருள்களாக
விரிந்திடாது' என்று கூறிய விவாது வாக்கியம் மருள்வாக்கியமும்
அப்பிரமாண வாக்கியமும் ஞானநூலாராய்ச்சி யில்லாப் பேதையர்
வாக்கியமுமாமென ஒறுத்திடுக. காரணத்தின் றன்மையை விட்டு
வேறு தன்மையாகக் காரியம் விரியுமோவென்று கேட்கலாம். விரி
யுமென்பதை அநுபவத்திலேயே காட்டுகின்றோம். வித்தின்றன்மை
யைவிட்டு அரும்பு பூ பிஞ்சு காய் பழம் இலை பட்டை வேர் விழுது
முதலியவைகளோடுங்கூடி விருக்ஷமாகமாறுவதும், விந்துவின் றன்மை
யைவிட்டு மாமிசம் உதிரம் என்பு மூளை தோல் மயிர் நகம் முதலிய
வைகளோடுங் கூடி யுடலாக மாறுவதும், இந்திரசால சத்தியிலிரு
ந்து வேறு தன்மையான பலவிஜாதிப்பொருள்க ளுண்டாவதும், சித்
வடிவமான புத்தியினின்றும் ஜன்னிகாலத்தில் அசித்வடிவான பல
விகாரவடிவுகளுண்டாவதும், மனத்திலிருந்து சொப்பன சகமுண்டா
வதும் காட்சிப் பிரமாணமன்றோ? காரணத்தில் அங்ஙனமாய சத்தி யி
ருந்தமையான் விஜாதிவடிவங்களுண்டாயின வென்னின், அங்ஙனமே
விஜாதியான வாயுவாதிகள் தோன்றுதற்கியைந்த சத்தியிருந்தமை
யான் ஆகாயத்தினின்றும் விஜாதியான வாயுவாதிக ளுண்டாயின
வென்பதாம். இவ்வாறே ஞானரூபமான பிரமத்தினின்றும் அஞ்ஞான
ரூபமான (விஜாதிரூபம்) உலகுதித்த தென்க. வித்து ஜாதியைவிட

விருக்ஷஜாதியும் விந்துஜாதியைவிட வுடல்சாதியும் இந்திரசால சத்தி சாதியைவிட இந்திரசாலப் பொருள் சாதியும் மன சாதியைவிடச் சொப்பன வுலக சாதியும் ஆகாய சாதியைவிடச் சதுர்ப்பூத சாதியும் வேறு சாதி யாவதுபோல் பிரம ஜாதியைவிட வுலகஜாதி வேறு ஜாதியாமென் றறிக. பிரமத்துக்குச் சுஜாதி விஜாதி சுகத பேதங்க ளில் லை யென்று சுருதி முதலிய நூல்கள் கூறுகின்றனவே யென்னின், இல்லையென்று கூறுவதும் உண்மைதான்; உண்மை யென்று கூறுவது முண்மைதான். "உண்டு என்றுவது கூறவேண்டும், இல்லை யென்றுவது கூறவேண்டும், அதைவிட்டு ஒன்றுக்கொன்று நேர்மாறாக இரண்டையுஞ் சொல்வது கூடா" தென்னின், கயிற்றுக்கு அரவு வேறு ஜாதியென்ப துண்மை. ஆயினும் கயிற்றையன்றி யரவுக்குப் பொருளில்லை. அரவுக்குப் பொருள் யாதெனு வாராய்ந்துழிக் கயிறேயாம். அரவென்பதற்குப் பொருள் முக்காலத்தும் அதாவது அரவாகத் தோன்றுதற்குமுன்னரும், அரவில்லையெனத் தெளிந்தபின்னரும், அரவாகத்தோன்றுங்காலத்தும் இல்லை; இருப்பது கயிறேயாம். முக்காலத்தும் கயிறு உள்ளதாகவும் அரவு இல்லதாகவும் ஆகின்றமையின் கயிற்றுக்கு வேறுஜாதி அதாவது அரவு ஜாதிப்பொருளின்றென்பது முண்மையே; பிராந்தியாக வொருகாலத்து விஜாதியாய் அரவுதோன்றுதல்போலுண்மையின் அத்துணையு முண்டென்பது முண்மையே. ஆயினும் சித்தாந்தமாக ஆராயுமிடத்து விஜாதிப்பொருள் இன்றென்பதே திண்ண மென்க. இங்ஙனமே ஆகாயத்தின்கண் சதுர்ப் பூதங்களும் பிரமத்தின்கண் இவ்வுலகமுமாம். வியாவகாரிகத்தில் உலகுண்டெனக் கூறுவதை யித் துவிதமதத்தினர் பாரமார்த்திகத்திலு முண்டென மயங்கிக் கூறி, அடிக்கடி அத்வைதிகளால் கண்டிக்கப்பட்டுப் பின் வாய் திறக்க வழியின்றி வாளா போகின்றனர்.

இது விஷயமாக விவரை யொருகேள்வி கேட்போம். 'பிரமமும் தனக்கு விஜாதியான பலபொருள்களாக விரிந்திடாது' என்கின்றீரே. இதற்குமாறாகப் பிரமவடிவான சிவன் பன்றியுரு வெடுத்தாரே. அது மாத்திர மெப்படிக் கூடும்? பிரமத்துக்குப் பன்றி சுஜாதியா? விஜாதியா? பிரமம் அரூபம், பன்றி ரூபம். பிரமம் முக்காலத்துள்ள சத்துப் பொருள், பன்றி யோர் காலத்துள்ள அசத்து அல்லது சத்துப்போலிப் பொருள். பிரமம் சித்துப் பொருள், பன்றி வடிவம் ஜடப்பொருள். பிரமம் ஆநந்தப் பொருள், பன்றியுருவந் துக்கப்பொருள். பிரமம் நித்தியப்பொருள், பன்றியுருவம் அநித்தியப்பொருள். பிரமம் அகண்டப்பொருள், பன்றியுருவம் கண்டப்பொருள். பிரமம் நிர்க்குணப்பொருள், பன்றியுருவஞ் சகுணப் பொருள். பிரமம் நிஷ்களப்பொருள், பன்றியுருவம் சகளப்பொருள். பிரமம அழியாம லின்று மிருக்கின்றது, பன்றியுருவம் அன்றே யழிந்துவிட்டது.

பிரமம் கண்ணுக்குப்புலப்படுவதன்று, பன்றியுருவம் கண்ணுக்குப்புலப்படுவதொன்று. பிரமம் வாக்குமனங்களுக் கெட்டாதது, பன்றியுருவம் வாக்குமனங்களுக் கெட்டத்தக்கது. பிரமம் ஆதாரப்பொருள், பன்றியுருவம் ஆதேயப்பொருள். பிரமம் போக்குவரத் தில்லாதது, பன்றியுருவம் போக்குவரத்துள்ளது. பிரமம் காரணப்பொருள், பன்றி காரியப்பொருள். பிரமம் நிரவயவப்பொருள், பன்றியுருவம் அவயவப்பொருள். பிரமம் அநாதிப்பொருள், பன்றி ஆதிப்பொருள். பிரமம் நிஷ்ப்ரபஞ்சப்பொருள், பன்றி ப்ரபஞ்சப்பொருள்.

பரமசிவன் தனக்கு ஒருவகையிலல்ல, பலவகையாலும் விஜாதியான அதிலும் பகைச்சாதி யுலகவுருவான பன்றியுருவுகொள்ளுவது இவருக்கு நியாயமாயிருக்க, பிரமம் உலகாக விரியுமென அத்வைதிகள் சொல்வது மாத்திரம் ஏன் நியாயமாய்த் தோன்றவில்லை? பிரமத்துக்கு விஜாதியான பன்றியுருவந் தோன்றுவதற்கு நியாய மேற்படும்போது பிரமத்துக்கு விஜாதியான வுலகுந்தோன்றுவதற்கு நியாய மேற்படாதா? இவர் பிறரை ஆக்ஷேபிப்பதற்கு மாத்திரம் வெகு அவசரத்துடன் ஓட்டமாய் மார்பைக் காட்டிக்கொண்டு வீரத்தோடு ஓடிவருகின்றார்; அதைத்திருப்பிக்கேட்டாலோ முதுகைக்காட்டிக்கொண்டு தோல்வியுடன் பறந்துபோய்க் குகையில் ஒளிந்து படிற்றொழுக்க வேடவிரதம் பூணுகின்றார். இதனால் இவர் கொள்ளெனில் வாயைத் திறப்பவரும் கடிவாளமெனில் வாயை மூடுபவருமா மென்பதாம். பன்றியுருவு யதார்த்தம்போற் றோன்றுவதேயன்றி யதார்த்தமல்ல, உலகு அங்ஙனமன்று, யதார்த்தமாய் அநுபவப்படுகின்றதென்னின், உலகு எவ்வளவு யதார்த்தமோ எவ்வளவு அநுபவமோ, அவ்வளவு யதார்த்தமும் அவ்வளவு அநுபவமும் ஷை பன்றியினிடத்திலுமுண்டென்பதற்குச் சான்று, பன்றிக்குட்டிகள் பால் அருந்தி ஜீவித்து வளர்ந்தமையேயாம். இவ்வாறு பல வேறுபாடுகளிருக்கின்றன. இவைகளினாலே யெல்லாம் பிரமஜாதிக்குப் பன்றிஜாதி விஜாதியாயிருப்பது மாத்திரமன்றிப் பகைஜாதியாயு மிருக்கின்றது. இதற்கு இந்தத் தத்துவ சாஸ்திரியார் யாது விடை தருவாரோ அறியேம்! இவர தாசங்கையை யோசிக்கின் "மகன் செத்தாலுஞ் சாகட்டும்; மருமகள் கொட்ட மடங்கினாற் போதும்" என்னும் பழமொழிப்படி தன்மதத்துக்குக் கெடுதி வந்தாலும் வரட்டும், அத்வைதமதங் கண்டிக்கப்பட்டாற்போதும் என்று கருதுகின்றவர்போற்றோன்றுகின்றது. இன்னும் இவருடைய விவேகசூனியத்தைப் பாருங்கள்! "இனிப்பிரமமே, அஃது வேறு இடத்தில் வியாபித்ததின்று என அவர் வாதிக்கலாம், அப்போது அப்பிரமம் பலவாய் விரிந்ததென்னும் வாதம் நசித்திடும்" என்கின்றார். இதற்குச் சமாதானஞ் சொல்லி அவருடைய மருளை நிவர்த்திக்கின்றோம். பிரமம் வேறு இடத்தில் வியாபிக்கவில்லை; தன்னிடத்திலேயே வியாபித்ததென்பதாம்

பிரமம் வியாபிக்கதென்பது பொருளாகவல்ல; தோற்றலாக. காணல், நீர் அலை திவலையாக வியாபித்ததென ஒருவிதத்தில் சொல்ல இடந்தரினும் மற்றொரு விதத்தில் அவ்வாறு வியாபிக்கவில்லை யென்று சொல்லுதற்கே இடந்தருகின்றதன்றோ? அவ்வாறே பிரமம் உலகாய் வியாபித்ததென் றொரு விதத்தில் சொல்ல இடந்தரினும் மற்றொரு விதத்தில் அவ்வாறு வியாபிக்கவில்லையென்று சொல்லற்கே யிடந்தருகின்றது. வியாபித்ததென்பது பூர்வபக்ஷம்; வியாபிக்க வில்லை யென்பது சித்தாந்தம். பிரமம் நீக்கமின்றி யெங்கும் நிறைந்திருப்பதால் அது வியாபிக்கமாட்டாது; வியாபிக்கின்றதென்னின் வியாபிக்கவிடம் வேண்டும். வேறு இடமின்மையான் வியாபித்ததென்பது வியாவகாரிகமாம். வேதாந்திகலைகளில் பிரமம் வியாபித்ததென்றும் சொல்லுகின்றது; வியாபிக்கவில்லையென்றும் சொல்லுகின்றது. அவ்வாறே இரண்டையும் அத்வைதிகள் சொல்லுகின்றார்கள். இவர், பூர்வபக்கமின்னதெனவும்சித்தாந்தமின்னதெனவும் ஓராது, "எருமை, குளத்துநீரைக் கலக்கி ஆபாசஞ்செய்வது" போல வேதாந்தத்தை ஆபாசஞ் செய்ய வருகின்றார். நீரைக்கலக்குவதால் தெளிந்தநீரை எருமை குடிப்பதற்கியலாமற் போகின்றது; அது போல வேதாந்தத்தைக் கலக்குவதால் அதனுண்மையையுணராமற்போய் மயங்கிக்கெடுகின்றார். இவர் வேததூஷணம்,வேதாந்த தூஷணம், ஆன்றோர் தூஷணம் முதலிய பெருந்தூஷணங்கள்செய்து அதிபாதகத்தைத் தேடிக்கொண்டாரானதால் இவரது அபக்குவ அனதிகாரத்தை யுணர்ந்து, நல்லோர், இவருக்கு வேதாந்த ரகசியங்களைச் சொல்லித்தரமாட்டார்கள். இவருக்கு வேதாந்தத்தைப்படிக்கவும ஆசையிருக்கிறது போலிருக்கிறது. அதனாலிப்படிப்பட்ட ஆக்ஷேபங்களைக்கிறுக்கிவிட்டால் யாரேனும் சமாதானஞ் சொல்லுவார்கள், அப்போது படித்துக்கொள்ளலாமென்று பார்க்கிறாராக்கும்! பிரமம் பரிபூரண மாயிற்றே, அது எப்படி வியாபிக்குமென்கிற ஐயம் நெடுநாளாய் இவருள்ளத்திற் குடிபுகுந்து வாட்டுகிறது போ லிருக்கிறது. அந்த ஐயத்தை நிவர்த்தித்துக் கொள்ளத் தமது மதத்திலிடமில்லாதுபோகவே இந்தக்கேள்வியை அத்வைதிகளிடத்தில் விட்டார்போலும்! உலகு உண்மைப் பொருளென்று அத்வைதிகள் கொள்ளவில்லை யென உண்மையா யிவ ருணர்ந்திருந்தால் ஷை ஆக்ஷேபம் மறந்தும் இவருக்குத் தோன்றாது. இனியேனும் உண்மையை யுணர்ந்து பிராந்தியை யொழித்து உய்தி பெறுவாராக.

தமக்கு நேரேபதில் சொல்வதை யெல்லாம் சொல்லாதுபோல் வைத்து 'இந்தப்பூனையும் பால்குடிக்குமா' வென்னும் வேடங்கொண்டு மறுபடியும் மறுபடியும் ஆக்ஷேபிக்கு மிந்தச்சோம. நாயக்கர், பிறருக்குச் சொன்ன சமாதானத்தைக் கவனிக்கப்போகின்றனரா? உண்மையை விசாரிக்கவந்தா லன்றோ கவனிக்கப் போகின்றார்? மூக்கறுப்புண்டவன், தன்னைப் பலர் பரிகசிப்பதால் அதனிமித்தம் எல்லோரையும் மூக்கறுக்கத் தந்திரஞ் செய்வதுபோல், விசாரணையின்றிச்சுருதியுக்தி

அநுபவங்கட்கியையாத போலிமதத்திற்புகுந்து, பலருடைய ஆக்ஷே பங்கட்கும் சமாதானஞ் சொல்ல வியையாமல் அவமானப்பட்டு அவ் வவமானஞ்சகியாமல் யாவரையும் தம்போலாக்கப்பார்க்கின்றார். இக் தக் கபட்டுத்தனமுடையார்க்கு உண்மை யெங்ஙனம் விளங்கப்போகி ன்றது? பிறருக்குச்சொன்ன சமாதானத்தைக்கவனியாமல் ஆக்ஷேபி க்கின்றது இவருடைய சுபாவமாம் என்பதற்கொப்ப இவர் கேட்கும் கேள்வியையும் இவர்கேட்பதற்குமுன்னரேயே ஒருவர்கேட்டதற்குச் சமாதானம் சொல்லியிருத்தலையும் இங்குக் காட்டிச் சோ. நாய்க்க ருடைய படிற்றொழுக்கத்தையும் பிரகாசப்படுத்துவாம்.

"பொன்பணிகளாயினவாறும் பிரமம் பலவாயின தன்மையை யாம் கூறுவேமென்று அவர் வாதிக்கலாம். அதுவுங் கூடாது. ஏனெ னின் பொன்னைப் பூணாக்கிப் புனைவாரில்லாதபோது, அந்தப் பொன் தானே பூணாகமாட்டாது" என்பதே யிப்புத்திமானுடைய ஆக்ஷேபம். யானை மண்ணைவாரித் தன்றலையில் தானே போட்டுக்கொள்வதுபோல இல்லாத கேள்வியையெல்லாம் எடுத்து மேற்போட்டுக்கொண்டு, அ தன்வழியே தமது மதத்திற்குப் புண்ணையுஞ்சம்பாதித்துக்கொள்ளுகி ன்றார். நியாயமாகவோ அநியாயமாகவோ தெரிந்தோ தெரியாமலோ இவர் முன்னோர் ஒன்றையெழுதி வைத்து விட்டால் அதன் உண்மை யைத் தருக்கவாயிலாக வுணர்வதைவிட்டு அதைமெய்யென்று நம்பி உடும்புப்பிடியாகப்பிடித்துக்கொள்ளுகின்றனர். அதன்பிறகு ஆட்டுக் கூட்டம்போல் ஒருவர் பின்னொருவராகப்பலருஞ்செல்கின்றனர். அத னுண்மையை யெவ்வளவு எடுத்துச்சொன்னாலும் புத்தியிலேறுவதில் லை; எருமையினால் செவிகொடுத்துக் கேட்பதுமில்லை. "தாம்பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்பதற்கொக்கச்சொன்னதையே சொல் லிப் பிடிவாதஞ் செய்கின்றார்கள். இந்த விஷயமாக யாழ்ப்பாணத்து இந்து சாதன பத்திராதிபருக்குத் "தத்துவ விசாரணை புரிவோன்" என்பவர் கரவருஷத்துப் பிரமவித்தியாவில் கொடுத்த பதிலே இவரு டைய ஆக்ஷேபத்துக்குச் சமாதான மாகுமென்று, அதையே யிங்கெ டுத்துக் கூறுவோமாக.

அது வருமாறு:—

"மேற்கூறிப்போந்த அனுபவங்களால் பிரபஞ்சங் காரியப்படுவது பெரு மாகிய காரணனிடத்திலென்று துணியுமிடத்துப் பொன்னாகியகாரணத்தி னின்றும் பூஷணமாகிய காரியம் வெளிவருவது போல் பிரமமே பிரபஞ்சமா க் காரியப்படுவது போலுமெனின், பொன்னாகிய காரணத்தைப் பூஷணமா க் காரியப்படுத்தும் வினையாளனை நாடுமாபோல் காரணமாகிய பிரமம் பிர பஞ்சமான காரியமாவதற்கு வேறொரு பிரமத்தை நாடவேண்டி வருமாகலின் அங்ஙனந் துணிவது பழுதாகும்" என்றதவர் கூற்று.

இதனால் பிரமத்தை முதற்காரணமாகப் பகரப்படாது, பின் வனைகின் றது கொண்டு நிமித்த காரணமாகப்பகரவேண்டுமென்று விளங்குகின்றது. பொன்னாகிய காரணத்தைப் பூஷணமாக்க வொரு வினையாளன் வேண்டுமா

போல், பிரமத்தைக் காரியப்படுத்த வேறொரு பிரமம் வேண்டுமென்னில், இந்தத் தோஷம் நிமித்த காரணத்தும் வருகின்றது. பொன்னான காரணத்தைப் பூஷணமாகக் காரியப்படுத்தும் நிமித்த காரணனைப் படைக்க வேறொரு நிமித்த காரணன் (ஒருவன்) வேண்டுமாபோல நிமித்த காரணமான பிரமத்தைப்படைக்க வேறொரு நிமித்த காரணப் பிரமம் வேண்டும்; அதைப்படைக்கப் பிறிதொரு பிரமமும் இவ்வாறு செல்லச்செல்ல அனவஸ்தா தோஷமெய்தும். பொன்னைப் பூஷணமாக்கும் வினையாளனை யுவமானங் கூறுவதிற் பின்னும் ஓர் தோஷமுண்டாகிறது. அஃதியாதெனின், வினையாளன் பரிபூரணமானவனன்று; அபரிபூரணப் பொருளானவன். அவன், தனக்குப் பின்னமான பொன்னைத் தானில்லா விடத்தினின்று மெடுத்து, தானில்லாவிடத்துப் பூஷண மாக்குகின்றான். அவ்வாறே பிரமமானது பரிபூரணமின்றி ஏகதேசப் பொருளாக வேண்டும். அதற்கு மாயை யென்னும் முதற்காரணப் பொருள் ஒன்று பின்னமாயிருக்கவேண்டும். அங்ஙனமான மாயையை யெடுத்துத் தனக்கு அன்னியமான இடத்தில் காரியப்படுத்தி உலகாக்க வேண்டும். காரியமான பூஷணமும் நிமித்த காரணனான வினையாளனும் வேறு வேறா யிருப்பது போலக் காரியமான வுலகும் நிமித்த காரணனான பிரமமும் வேறு வேறா யிருக்கவேண்டும். இங்ஙனங் கூறுவதனால் பிரமம் பரிபூரணப் பொருளென்பதற்கு விருத்தமாம்.

அடுத்த 23வ பத்திரிகையில் "முதற்காரணமாகிய மண்ணைக்கொண்டு துணைக்காரணமாகிய தண்டசக்கரங்களால் நிமித்த காரணனாகிய குலாலன் பாண்டங்களை வனையுமாபோல மாயையாகிய மண்ணைக்கொண்டு தன் சத்தியாகிய தண்டசக்கரங்களால் கடகலசாதிகள்போலும் தனுகரண புவன போகங்களைக் குலாலனையொத்த கடவுள் ஆன்மகோடிகளுக்குக் கொடுத்துப்பொருளுடையவராய்" என்றுவரைந்தனர். இதிலுள்ள மண், தண்ட சக்கரங்கள், குலாலன் இவைகளெல்லாம் பின்னப்பொருள்கள். இந்த வுவமானத்தைக் கொண்டுபோய்ப் பரிபூரணப் பிரமத்துக்கு எங்ஙனங் கூறலாகும்? ஒரு அளவில் நீக்கமற நிறைந்திருக்கும்பொருள் அதற்குட்பட்டதும், மிஞ்சாததுமான பின்னப்பொருளையெடுத்துக் காரியப்படுத்துந் திருட்டாந்த மொன்றெடுத்துக் கூறினால் சரியான திருட்டாந்தமாகும். அவர் கூறியதில் மற்றொரு தோஷமுமுளது. அஃதியாதெனிற் பாண்டங்களை வனைதற்குத் தண்டசக்கரங்களைத் துணைக்காரண மென்றார். சத்தி தன்னைத்தவிரப் பின்னமன்று, அபின்னமே. சத்தியானது குணமாதலின், குணங் குணிக்கு அபின்னமேயாம். தண்ட சக்கரங்களோ குலாலனுக்குப் பின்னம்; பின்னவுபமானத்தை அபின்ன வுபமேயத்திற் காட்டுவது பொருத்த மன்று. கடவுளுக்குச் சத்தி குணமாகலின் அச்சத்தி அபின்னமெனவே கூறத்தகும். கடவுளுக்கு மாயை பின்னமெனின் கடவுள் அபரிபூரண ராகின்றார். அபின்னமெனின் அபின்ன வுவமேயத்துக்கு நிமித்த காரணனான குலாலனினும் பின்னத்துவமுள்ள மண் உவமானத்தைக் கூறுதல் சரியன்று. சத்தியும் மாயையும் குணமாகக் கூறாது பொருளாகக் கூறுமிடத்து, கடவுள் பரிபூரணராகலானும் அவரில்லா விடமின்மையாலும் சத்தான கடவுளிடத்துப் பிறிதொரு பொருளிருத்தல் அசம்பவமாம்; அன்றி யுக்தி யனுபவங்கட்கு மாறாம். இரண்டு சத்துப்பொருள் ஒரு இடத்தின்கணிருத்தல் அமையாது. ஆகாயம் மற்ற நான்கு பூதங்களிடத்து மிருத்தல்போ லிருக்குமெனின் அஃது பொருந்தாது. ஆகாயம் காரணம்; மற்ற நான்கு பூதங்களும் காரியம். காரணமானது காரியத்தின்கணிருத்தல், காரணம் எங்ஙனஞ் சத்தோ, அங்ஙனமே காரியஞ்சத்தாயிருந்து அதிலிருக்கின்றதெனக் கூறுதல் கூடாது. மண்ணின்கண் கடஞ் சத்தன்று.

மண்ணை நீக்கிப் பார்க்குமிடத்துக் கடத்துக்குப் பொருளின்று. மண்ணின்
கண் கடம் வனைதற்கு முன்னரும் அழிவுபாடெய்தபின்னருமின்று. இடை
நின்ற காலத்து மாத்திர முளதாகக் கூறப்படுகின்றது. அக்காலத்தும் மண்
ணைப்போல் கடம் ஓர் சத்துப்பொருளாய் நிகழவில்லை. மண்ணின்கண் வனை
தல் குவிதல் முதலிய குணங்களை நிகழ்கின்றன. அக்குணங்களும் கற்பித
மே. அம்மண்ணைத் தனித்தனியே யுற்று நோக்குழி வனைதல் குவிதல்களும்
அபாவமாம். ஆதலால் காரணத்தின்கண் காரியஞ் சத்துப் போலியே யன்
றிச் சத்தன்று. காரணஞ் சத்து; காரியஞ் சத்துப்போலி. அவ்வாறின்றிக்
காரணமுஞ் சத்து, காரியமுஞ் சத்தெனின் காரிய முன்னில்லா திருந்து
ண்டாவதெனச் சொல்லப்படுகின்றது. எது முன்னின்றோ அது ஓர்போது
முளதாத லின்று; இல்லது வாராதென்றமையா னென்க. காரிய மழிவுபா
டெய்திய தென்பது மங்ஙனமே. காரிய மழிகின்றதெனின் உள்ள தின்றாத
லெங்ஙன மாகும்? உளதிலதாமாயின் "உள்ளது போகாது" என்ற வாக்கியம
குற்றமாம்.

௸ 23உ பத்திரிகையின்கண் கூறுகின்ற மற்றொரு விஷயத்தினைக்
கவனிப்பாம். அது இது:—"பிரமத்தினின்றும் உலகம் வந்தது என்று கொ
ண்டாலென்னை யெனின், இது விபரீத வுணர்ச்சியாம். எவ்வாறெனின் பிர
மம் சித்தும், உலகம் அசித்துமாகலின், கடத்திற் படமும் படத்திற் கடமும்
பிறவாதனபோல் சித்தாகிய பிரமத்தினின்று அசித்தாகிய உலகந் தோன்றா
தென்பதே துணிபு" என்பது. இதிற் சித்தினின்றுஞ் சடந் தோன்றாதெ
ன்ப தவர் சித்தாந்தம். அதை ஆலோசிப்பாம். நாம் பார்த்த வுலகப் பொரு
ளில் ஒன்றை அஃதில்லாக்காலத்து அதனை நினைப்போமாயின் அது மனத்தி
ற்குப் புலப்படுகின்றது. புலப்படும் அப்பொருள் எதினின்று தோன்றிய தெ
னப்பார்ப்போமாயின் மனத்தினின்றுந் தோன்றியதாய் விளங்கும். விளங்கு
கின்றமையின் அப்பொருளுக்கு அம்மனம் முதற்காரணமாகும். பித்தவுபரி
யாய் ஐன்னிகண்டு, புத்தி தடுமாறி நின்ற வொருவனுக்கு அவன் புத்தியினி
ன்றும் பலபொருள்கள் தோன்றுகின்றன; தோன்றும் பொருள்கள் சடமா
கவு மிருக்கின்றன. அச்சடப் பொருள்களுக்கு மனம் முதற்காரணமாகும்.
சொப்பனவுலகில் காணப்படுஞ் சடப்பொருள்கள் சித்தான மனத்தினின்றே
யுதிக்கின்றன வென்பது தினம் அனுபவம். இவ்வகையே பலதிருஷ்டாந்தங்
களிருக்கின்றமையால் சித்தினின்றுஞ் சடந் தோன்றலாம். இது கடத்தினி
ன்றும் படமும் படத்தினின்றுங் கடமுமுண்டாதல்போலன்று. இது கூடாத
காரியம். சித்தினின்றுஞ் சட முண்டாவது நமக் கனுபவமாம். எந்தெந்தச்
சத்திகள் எதெதின்கண் உளவாமோ அந்தந்தச் சத்தியினின்றும் அததற்கின
மான காரியங்கள் பிறக்கும். சத்தி யில்லாவிடில் எந்தப்பொருளுங் காரியப்
படாது. மண்ணின்கண் கடசத்தியிருந்தமையான், கடமான காரியமுண்டாகி
ன்றது. படசத்தியின்மையான் படமுண்டாதலின்று. ஆற்றுமண் கடல்மண்
இவைகளிடத்துக் கடசத்தி யின்மையான் கடமுண்டாவதின்று; சித்தின்கண்
சடசத்தி யிருத்தலினால் சடமுண்டாகின்றது. சத்தாகிய பிரமத்தினின்றும்
அசத்தாகிய உலகந் தோன்றாதென்று கூறினாரன்றோ? அதையு மாராய்வாம்.
இது நமது அனுபவ விரோதம். ஒரு பொருள் சத்தாயிருந்தே அதினின்றும்
அசத்துப்பொருள் தோற்றவேண்டும். ஒன்றுமில்லாவிடத்து அசத்துத்தோ
ற்றம் நிகழ்தற்கு அனுபவம் எங்குங்காணகிலம். திருட்டாந்தமாகக் கயிறெ
ன்னும் சத்துப்பொருள் ஒன்றிருந்தே அதன்கண் அரவென்னும் அசத்துப்
பொருளும் கானலென்னும் சத்துப் பொருளொன்றிருந்தே அதனினின்றும்
நீரென்னும் அசத்துப்பொருளுந் தோற்றக் கண்டாம். கயிறில்லாவிடத்து

அரவும் கானலில்லாவிடத்து நீரும் காண்கிலேம். இனிச் சித்தினின்றும் அசித்துத் தோன்றாது என்பதனால் சித்தினின்றும் சித்துத் தோன்றுமென்றதவர் கருத்தென விளங்குகின்றது. சித்தினின்றும் சித்துத் தோன்றுவது கடத்தினின்றும் படந் தோன்றுவதுபோ லன்றாக்கும். அங்ஙனமாயின் சித்தினின்றுஞ் சித்துத்தோன்றுதற்கு ஓர் உதாரணங் கூறக் கேட்கின்றோம்.

நிற்க, சத்தின்கண் அசத்துத் தோன்றா தென்பதனான் அசத்தின்கண் அசத்துத் தோன்றுமென்ப தவர்கருத்துப்போலும். அவ்வாறு தோன்றுமாவென ஆய்ந்திடுவோம். மலடி மைந்தன் அசத்து; அவனிடத்து ஆகாயத் தாமரை யுண்டாமா? ஆகாயத்தாமரை அசத்து. அதினின்றும் மலடிமைந்தன் உண்டாவனா? கயிற்றிற் பாம்பு அசத்து; அதனின்றும் அசத்தான கானல் நீருண்டாமா? இவைகளாகா வென்பது திண்ணம். மற்றொன்றைப் பார்ப்போம். சத்தின்கண் அசத்துண்டாகாது என்பதனான் சத்தின்கண் சத்தே யுண்டாமெனப் பாரிசேட நியாயத்தா லேற்படுகின்றது. அங்ஙனமேல் சத்தினின்றுஞ் சத்துண்டாவது எதுபோல்? வித்தி லிருந்து மரமுண்டாவது போலா? பாலிலிருந்து தயிருண்டாவதுபோலா? நீரிலிருந்து அலையுண்டாவதுபோலா? மண்ணினின்றுங் கடமுண்டாவதுபோலா? வித்தினின்றும் மரமுண்டாவதுபோலென்னின் வித்து வெகு சிறியது; அதினின்றும் பெரிய விருக்ஷமுண்டாவது ஓர் போது மின்று. விரை காற்பலவென்றும், விருக்ஷம் ஒரு பாரமென்றும் வைத்துக்கொள்ளுவோம். வைத்துக்கொண்டு பார்க்கின் காற்பல எடையிலிருந்து ஒரு பாரம் எப்படி வரும்? வாரா தென்பது திண்ணம். பின்னையெப்படி? காற்பல விரையோடு, நீர், வாயு, பிருதிவி முதலியன $25599\frac{3}{4}$ பலஞ் சேர்ந்து ஒருபார விருக்ஷமாகின்றது. ஆதலால் காரணமான காற்பலவித்திலிருந்தே ஒரு பாரமான காரிய விருட்சமுண்டாகின்றதென வுரைத்தலமையாது. காரியமான விருக்ஷம் எவ்வளவு எடையோ அவ்வளவு எடை காரணமான வித்தி லில்லையெனத் தெரிகின்றது. காரணமான காற்பலத்துடன் $25599\frac{3}{4}$ பலம் நீர் முதலியன சேர்ந்து காரியமாகின்றது. காற்பல எடை வித்தும் $25599\frac{3}{4}$ பல எடை நீர் முதலியனவுஞ் சேர்ந்து காரணமாகி, அவற்றின் கலத்தலே காரியமென்று கூறப்படுகின்றது. ஆகையால் காரணத்தின் கூட்டத்தையன்றிக் காரிய மென்பதற்குப் பொருளில்லை. இதனால் காரணத்தின் மாறுதலையே காரியமென்று விவகாரத்தினிமித்தஞ் சொல்லப்படுகின்றது. காரணத்திற்கு எப்படிப் பொருளுளதோ அப்படியே காரியத்திற்குப் பொருளில்லை; காரியம் வெறுந் தோற்றமேயாம். தோற்றமான காரியஞ் சத்தாகாது; சத்துப்போலியேயாம். ஆதலால் வித்தும் அதன் சேர்க்கையுஞ் சேர்ந்து காரணமாகிச் சத்தாயும், விருக்ஷம் காரியமாகி அசத்து அல்லது சத்துப்போலியு மாகின்றன.

இனிப் பாலிலிருந்து தயிருண்டாவது போலென்றுரைப்பதைச் சற்றுப் பரியாலோசிப்போம். பாலானது விகாரப்பட்டே அதாவது தன் வடிவங் கெட்டே தயிராகின்றது. பாலும் அதனது விவகாரமு மன்றித் தயிரென்னுஞ் சொற்குப் பொரு ளின்றென்பதாம். பொருளல்லாதது அசத்து அல்லது சத்துப்போலியேயாம். நீரும் அதனது அலையையும் பற்றி யோசிப்போமானால் நீரும் அதனது விகாரமுமன்றி அலையென்னுஞ் சொற்குப் பொருள் இன்று. அவ்வாறே மண்ணின்கண் கடமும் பொருளன்று. மண்ணின்கண் வளைதல் குவிதல்களுளவே யெனின் அவை குணமே யன்றிக் குணியன்று. மண்ணும் அதன் குணமான வளைதல் குவிதல்களுமேயன்றிக் கடமென்னுஞ் சொற்குப் பொருளின்மையான் கடம் அசத்து அல்லது சத்துப்போலியாம்.

கயிற்றின்கண் அரவுபோலென்னின், கயிற்றையன்றி யரவு இல்லாமையான் அரவு அசத்து அல்லது சத்துப்போலியேயாம். இவ்வளவு தூரம் விசாரணை செய்ததில், சத்தினின்றும் சத்துண்டாமென்பது தோஷமாகவும், சத்தினின்றும் அசத்து அல்லது சத்துப்போலி யுண்டாமென்பது தோஷரகிதமாகவும் முடிகின்றன. ஆதலால் ஒரு சத்துப் பொருளினின்றும் மற்றொரு சத்துப் பொருளுண்டாமென்பது வாளா சழக்கே யென்க. மற்றொரு விதமாய்ப் பார்ப்போம். ஆடைக்கு நூல் முதற்காரணமான சமவாய் காரணம்; நூலினது அமைப்பு (அதாவது குறுக்கு நெடுக்காயிருத்தல்) துணைக்காரணமான அசமவாய் காரணம். அவ்வாறே பூஷணத்துக்குப் பொன் சமவாய் காரணம்; பொன்னினமைப்பு அசமவாய்காரணம். இதனால் சமவாய் காரணமும் அசமவாய் காரணமும் அபேதமாகின்றன. இவ்வாறே யுவமேயத்தைப் பார்ப்போமானால் சமவாய் காரணமான மாயையும் அசமவாய் காரணமான கடவுளின் சத்தியும் அபேதமாக வேண்டும். அன்றி நிமித்த காரணனான சேணியனும் அசமவாய் காரணமான நூலினது அமைப்பும் பின்னமாவது போல் நிமித்த காரணனான கடவுளும் அசமவாய் காரணமான கடவுள் சத்தியும் பின்னமாமா? சத்தி குணமாகலின் குணியை விட்டுப் பேதப்படாதே.

ஷை 23உ பத்திரிகையிலேயே "எவ்வித காரணங்களும் தப்பாமலெய்தப் பெறுதவர் எனவும் அவர் காரணங்களுக்கெல்லாம் பிரபுவானவர் என்பதனால் மூவித காரணங்களுந் தம்பாற்றொழிற்பாடு பெற விசைந்தவரெனவும்" எனக் கூறுகின்றார். இதனால் கடவுள் காரணாதீதரெனவும் மூவித காரணங்களும் என்றதனால் முதற்காரணம், துணைக்காரணம், நிமித்த காரணமாகிய மூவித காரணங்களுமெனவும் அது அவரிடத்தி லுழைக்கப்படாதெனவும் விளங்குகின்றன. அங்ஙனமாயின் கடவுளை முன்பு நிமித்தகாரணர் என்று கூறி, முடிவில் எவ்வித காரணங்களுக்கும் அதீதரென்று சொல்லலாமோ? காரணாதீதரென்று சொல்லுமிவர் நிமித்த காரணரென் றெங்ஙனம் புகலுகின்றார்? இவ்விரண்டில் நிமித்த காரணரென்பது உண்மையா? காரணாதீத ரென்பது உண்மையா? இரண்டு முண்மையென்று கூறுதற் கிடந்தராது; ஒன்றுக்கொன்று நேர் மாறாயிருப்பதா லென்க. நிமித்த காரணரென்பது உண்மையாயின் காரணாதீதரென்பது பொய்யாகின்றது. காரணா தீதரென்பது உண்மையாயின் நிமித்த காரண ரென்பது பொய்யாகின்றது. முன்பு நிமித்த காரணரென்று கூறிப் பின்பு பொய்யென்று தள்ளுவதுபோல் முதற்காரணரென்று முன்புகூறிப் பின்பு பொய்யென்று தள்ளிவிடுவதுதானே. உண்மையல்லாமற் போவது எதுவாயிருந்தாலதானென்ன? விவகார நிமித்தம் சொல்லுகின்றோ மென்னில் விவகாரம் பொய்யா? மெய்யா? காரணாதீத ரென்று கூறும்போது விவகாரம் பொய்யாய்ப் போகவில்லையா? பொய்யானாலும் விசாரிக்க வேண்டுமென்னில் விசாரித்ததில் ஆக்ஷேபமில்லாமற் போகவில்லையே. முதற்காரணத்துக்கு எவ்வளவு ஆட்சேபமிருக்கின்றதென் றுரைக்கப் படுகின்றதோ, அவ்வளவு ஆக்ஷேபம் நிமித்தகாரணத்திற்கு மிருக்கின்றதாய்த் தோன்றுகின்றதே.

ஷை 23உ பத்திரிகையில் "அவர் [கடவுள்] உள்ளும் புறம்புங் கலந்து நிற்பர்" என்று கூறியிருக்கின்றார். அதன்பேரில் நாம் சொல்வதாவது: 'உள்ளும் புறம்புங் கலந்து நிற்பர்' என்றதால் அவர் இடையில் இல்லையென்றாகின்றது. சமுத்திரத்தில் அடியும் மேலு மில்லாத ஓர் பாத்திரத்தை யழுத்தினால் நீர் உள்ளும் புறம்புமாக, இடையில் பாத்திரமிருக்கின்றது. எது உள்ளும் புறம்பு மிருக்கிறதோ, அது இடையி லிராமையால் அபரிபூரணப்பொருளா

கவே யிருத்தல் வேண்டும். கடவுள் அபரிபூரணப் பொருளாமா? ஒரு பொருளுக்குப் பரிபூரணஞ் சொல்லுமிடத்து அது உள்ளும் புறம்பு மிருக்கின்றதெனச் சொல்லப்படாதே.

நாமிக்கடிதம் யாழ்ப்பாணம் இந்து சாதனப்பத்திரிகையிலேயே வெளியாவதுத்தமமெனக்கருதி அதிலேயே பிரசுரிக்கும்படி யெழுதி அனுப்பினேம். அப்பத்திராதிபர் 1892௵ மேமீ 25உ பத்திரிகையிற் பிரசுரிக்கமாட்டோமெனப் பதிலெழுதிவிட்டார். அவர் எழுதியது இது:—"கடவுள் நிச்சயம்:—இப்பெயரிய கடிதமொன்றை இற்றைக்கு ஒருவருஷத்துக்குமுன் நமது பத்திரிகையிற் பிரசரிக்குமாறு (                    ) என்பவர் அனுப்பியிருந்தார். அது நமக்குப் பிரசரிக்கப் பிரியமின்மையால் கவனிக்கப்படாதாயிற்று" என்பது. பத்திராதிபர்க்குப் பிரியமில்லாமைக்குக் காரணம் யாதோ அறிந்திலோம். நாம் வரைந்ததில் ஏதேனும் தூஷணையிருக்கின்றதா? அநாவசியமான சங்கதி யிருக்கின்றதா? ஒன்றுமில்லையே. அப்படி யிருக்கவும் அதைப் பிரசுரிக்காமற்போனது எமது தௌர்ப்பாக்கியமேயாம்.

எமக்குத் தோன்றிய வரையி லிவ்விஷயத்தைப் பற்றி வரைந்தோம். இதற்குமேல் யாரேனும் நியாயங்காட்டி நாம் வரைந்ததைப் பூர்வபக்கஞ்செய்வாரேல் அதற்குமேல் அதைப் பூர்வபக்கஞ்செய்ய இடமிருக்கும் பக்ஷத்தில் செய்து எமது நியாயத்தைக் கூறுகின்றோம். அதற்கு மேலும் யாரேனும் கூறலாம். இப்படி வாதிப்பதா லுண்மை வெளியாகும். சிலர் தாம் வரைந்ததையே தாபிக்கக் கருதிக் குதர்க்கஞ்செய்து தூஷணாஸ்திரங்கள் பொழிந்து எடுத்த விஷயத்திற்குப் பொருத்த மில்லாத வீண் துவேஷ மொழிகள் புகன்று மனதைப் புண்படுத்தி விடுகின்றார்கள். அப்படிப்பட்டவரால் உண்மை வெளிப்படமாட்டாது. பத்திராதிபர் இப்படிப்பட்ட துர்வாதிகளுக் கிடங் கொடாதிருந்தால் அவர்களுடைய துர்வாதங்கள் வெளியாவதற்கிடமில்லாமற்போம். போகவே பத்திரிகைகளில் சரியான வாதங்களே நடக்கும். இக்காலத்தில் உண்மையைக்கண்டுபிடிக்க ஜனங்கள் முயலுகின்றார்கள்.

தத்துவவிசாரணைபுரிவோன்."

அவசியமாய்க் கவனிக்கவேண்டிய சில விஷயமிருப்பதால் இதை முற்றுமே பிரசுரஞ் செய்தோம்.

ஷை விஷயம் எழுதிச் சுமார் இரண்டு வருஷங்களாயும் இந்து சாதனப் பத்திராசிரியரேனும் இந்தச் சோ. நாய்க்கரேனும் இவர்களைச் சார்ந்த இன்னுமெவரேனும் பூர்வபக்ஷஞ் செய்தனர்க ளில்லை. செய்யாதிருந்தவர்களி லெவருமொருவரா யிருக்க, பின்னும் அதே யாக்ஷேபத்தைச்செய்வது சன்மார்க்கர்க்கழகாமா? இவர் ஆண்மகனாயிருப்பதுண்மையேல் ஆங்கு அதை நியாயங்கொண்டு பூர்வபக்ஷஞ் செய்து அதன்பேரில் தமது கக்ஷியைச் சொல்வார். அங்ஙனமின்மையான் அதையே மீண்டும் ஆக்ஷேபிக்கின்றார். இதனால் 'தத்துவ விசாரணை புரிவோர்' செய்ததே சித்தாந்தமெனவும் அதைப் பூர்வபக்ஷஞ் செய்ய இடமில்லையெனவும் அதைக்காட்டாமல் எழுதியதால் இவர் தெரியா ஏழை பதிகளை யேமாற்றி மறைந்தொழுகுகின்றாரெனவும் இவருடைய கக்ஷி நியாயத்திற்குமுன் னிற்கமாட்டாப் போலியெனவும் விளங்க நின்றன. இந்த ஆக்ஷேபமும் இவரது முன்னோர் ஆக்ஷேபி

த்த ஆக்ஷேபத்தைக் குருட்டுப்பாடஞ் செய்து ஒப்புவித்ததே யன்றிச் சுய ஆராய்ச்சியோடு பேசிய தன்றென்பதாம்.

இராசாங்க வுத்தியோகஸ்தர் போட்டவரி சட்டவிரோதமெனக் குடிகள் மனுப் பண்ணிக்கொண்டால் அதைக் கவனித்து அதற்கு நியாயஞ்சொல்லி வரி விதிக்காமல் போட்ட வரியே சரி யெனக்கூறும் அநீத ராஜாங்கத்தைப்போல இச்சோம. நாய்க்கரும் வந்த விடையைக் கவனிக்காமல் முன்பு செய்த ஆக்ஷேபத்தையே ஆக்ஷேபமாகப் பின்னும் செய்து அநீதரானார். ஷை யாழ்ப்பாணம் இந்து சாதனப்பத்திராதிபர் நியாயமில்லாமையால் அதன்மேல் ஏதும் பேசாது மௌனஞ் சாதித்தார். அது முதல் இதுகாறும் அப்படிப்பட்ட ஆக்ஷேபமேதும் அவர் செய்வது மில்லை. அவரன்றோ நீதவான்! அப்படிப்பட்ட நீதம் இவரிடத்தில்லையே! ஷை விடையினால் இவர் மதத்தின் தாழ்வும் அத்வைதத்தின் உயர்வும் நன்கு வெளிப்பட்டமையின் இவருடைய ஆசங்கை மூட ஆசங்கையாய் ஒழிந்த தென்றறிக. இவர் 'பொன்னைப் பூணாக்கிப் புனைவா ரில்லாதபோது, அந்தப் பொன் தானே பூணாகமாட்டாது' என்று பேசியதால் பூணாக்கிப் புனைவா ருண்டானபோது, அப்பொன், தானே பூணாகும்போலும்! அப்படிப்பட்ட சத்தி யதற்குண்டாம் போலும்! இது வெகு விந்தை! நிற்க, பொன்னைப் பூணாக்க வேறொருவன் வேண்டுவதுபோலப் பிரமத்தை யுலகாக்க வேறொருவர் அதாவது மற்றொரு பிரமம் வேண்டுமென்ப திவர் பக்ஷ மன்றோ? இது உண்மைதான். இவ்வாறே பிரமம், பஞ்சபூத பௌதிகமான ஊனுடலோடுங் கூடிச் சிவனடியாராய் வரும்போதும், பன்றியுருவோடு வெளிப்படும்போதும் பிரமத்தைச் சிவனடியார் உருவாகவும் பன்றியுருவாகவும் இயற்றுதற்கு வேறொரு பிரமம் வேண்டுமே. மான்மழு சதுர்ப்புஜ நீலகண்ட வுருவாய் வரும்போதும் பிரமத்தினின்றும் அவ்வகையுருவாக்க மற்றொரு பிரமம் வேண்டுமே. இதற்கு இவர் விடையிறுக்கும்போது அதைக்கொண்டே இவர்க்கு நாம் விடையிறுப்பாம்.

பின்னும் அதைத் தொடர்ந்து ஆசங்கிப்பதொன்று. அதுவும் மூடவாசங்கைதான். அது வருமாறு:—பொன் பூணாயினபின்னர்ப் பூணென்பதே யன்றிப் பொன்னென்னும் பெயரதற்குண்டானதில்லை" யென்பதாம். இதற்குப்பதில் யாம்கூறுவதைக் கேட்கச் சற்றுச் செவி சாய்க்கக் கடவர். பொன், பொன்னாயிருக்கும்போதும் பூடணமாயிருக்கும்போதும் பூடணமழிந்தபோதும் இருப்பது பொன்னேயாம். பொன்னைத்தவிரப் பூடணமென்னுஞ் சொல்லுக்குப் பொருளில்லை. பூடணமென்பது சொல்லும் பொன்னென்பது பொருளுமாம். பொருளல்லாத பூடணத்தைப் பொருளாகக் கொள்வதும் பொருளான பொன்னைப் பொருளாகக் கொள்ளாது விடுதலும் மருளாம். இப்படிப்பட்ட மருளுடையவர்க்குத்தான் மாறாப் பிறப்புண்டாமென,

"பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும்
மருளானும் மாணாப்பிறப்பு"

இக்குறளின் வழியாக நாயனாருங் கூறி யிருக்கின்றனர். அன்றி,

"எப்பொருளெத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்றுங் கூறினார். இதனாற் றோற்றத்தை மெய்ப்பொருளெனக்கொண்டு மயங்குவது அறிவன்று; அறியாமையே யென விளங்கிற்று. தோன்றியது தோன்றியபடியே யுணர்தலிலும் அவ்வாறுணர்ந்து ஒழுகுதலிலும் அதைப் பிறர்க்குப் போதித்து அவ்வாறே யொழுகச் செய்தலிலும் இவர் முதற்பரீக்ஷை கொடுத்தவ ராகலின் அதற் கிணங்க மறவாது தோற்றத்தை மெய்யெனப் பேசுகின்றார். இந்தத் தத்துவ சாஸ்திரியார், பூடணமானபோது பொன்னென்னும்பெயர் அதற்குண்டானதில்லை யென்றாரோ யன்றிப் பொன்னே யில்லை யென்றாவது பொன்னையன்றிப் பூடணமுண்டென்றாவது கூறினா ரில்லையே! அதுவரையி லிவர் புத்திமான்தான். பொன்னேயில்லையெனப் பொன்னுக்கே தாம்பூலம் பிடிக்கின்றாரோ என்னமோவென்று பார்த்தோம். அப்படிக்கில்லாமல் பெயரோ டொழித்தாரோ; அதுவரையில் விவேகிதான். "உலகம் சத்தா? அசத்தா?" என்னும் விஷயத்தில் முற்றுந் தலைகாட்டாது இரண்டொரு சொல்லைக்கொண்டு "அத்வைதி"யென்னும் பொருந்தாக் கள்ளப்பெயர்கொண்டு வாதஞ்செய்யவந்து, பின் "ஓர் நண்பர்" என்பவரால் முறியடிக்கப்பட்டு ஐந்துவருஷங்கட்கு முன்பாகவே பயந்து முதுகுகாட்டி யோடிப்போனவ ராகலின் அந்தப் பயம் இன்றும் பிடித்துக்கொண்டு, பூடணம் என்பதைப் பொருளெனச் சொல்லாமல் சாடையாய்க் கைநழுவவிட்டார். யானை வாகனத்தில் உண்மையா யுள்ளது மரமேயானாலும், தோற்றமா யுள்ளது யானையே யானாலும், யானையாயுள்ளபோது மரமென்கிற பேரில்லாமல் யானையென்கிற பேரேயிருந்தாலும் அதிலுண்மையா யுள்ளது எது? பொய்ம்மையாயுள்ளது எது? யானைவாகனத்தி லெங்குப்பார்த்தாலும் மரத்தையன்றிப் பொருளுளதோ? மரத்திற் சில பாகம் அளவுப்படி யெடுத்துவிடப்பட்டமையே யானையாமன்றி மற்றொன்றும் நூதனமாய் அதில் வரவில்லையே! வராதபோது அதிலிருப்பது மரந்தானே. அப்படிப்பட்ட மரத்தை மரமென்பது யதார்த்தமா? யானையென்பது யதார்த்தமா? மரமென்பது யதார்த்தமும் யானையென்பது கற்பிதமுமாக வேதமுடிவை யுணர்ந்து பொருளைப் பொருளாகவும் பொருளல்லவற்றைப் பொருளல்ல வாகவுங் கொள்ளும் ஆன்றோர் ஒத்துக்கொள்வராகலின் இதன்படியே பிரமமென்பது யதார்த்தமும் உலகமென்பது கற்பிதமுமாம். இவர் காட்டிய பொற்பணி திருட்டாந்தத்தைக்கொண்டே பிரமம் உண்மையெனவும் உலகம் கற்பிதமெனவும் காட்டிவிட்டோமாயினும் பொற்பணி,

மண்கடம், மரம்யானை முதலிய ஆரம்ப காரண காரிய வாதத்தை அத்வைதிகள் சித்தாந்தமாய் ஒப்புக்கொள்ளுகின்றனரில்லை. கயிற்றரவு, கானனீர், இந்திரசாலம், சொப்பனவுலகு முதலிய விவர்த்த காரண காரிய வாதத்தையே சித்தாந்தமாகக் கொள்ளுகின்றார்கள். காரணமான கயிற்றைவிட்டுக் காரியமான அரவைப் பிரமித்துக் காணுங்கால் அதற்கு அரவெனப் பேருண்டாயினும் அதில் யதார்த்தமா யுள்ளது கயிறுதானே. அங்ஙனமே பொன் பூடணமான போது அதற்குப் பூடணமென்று பெயரிருந்தாலும் அதிலுள்ளது பொன்தானே. காரியத் தோற்றமென்றும் அது வியாவகாரிக சத்தியமென்றும் இவருக்கு எத்தனையோமுறை செவி செவிடுபடும்படி சொல்லியும் பின்னுஞ் செவிடர்போல் இருந்துவிடின் யாம் செய்வதென்ன விருக்கின்றது! மனத்திலிருந்துண்டான சொப்பன ஜகத்தில் இது கடம், இது படம், இது மலை, இது கடலெனப் பெயரிடப்பட்டு வழங்கினாலும் அதனால் அவை யுண்மையாய்விடுமோ? அதுபோலப் பூடணமெனச் சொல்லப்படினும் பூடணம் பொய்பொய்யே; பொன் மெய் மெய்யே. எது பெயர் பெறுகின்றதோ, அதை உண்மைப் பொருளாக்கி விடலாமெனப் பார்க்கின்றார். அவ்வாறாகாது! ஆகாது!!

## பிரமகீதை

### சாந்தோக்கிய வுபநிடதம் ஆறுவதத்தியாயம்.

சத்தைதான் ஒன்றாநின்றதாயினும் காரியங்கள்
ஒத்தபேர் வேறுபாட்டால் உள்ளகாரணத்தில்வேறே
யத்தகைத்தென்றவார்த்தை யியம்புமேபரளவே யானால்
வைத்தகாரிய முண்டென்னும் வார்த்தையும் அசத்தேயாகும். (அ)

சத்தையில்லாதபோது காரியம் இல்லையாகும்
இத்தன்மைக்காரியத்துக் கிலாமையே யிசைவதென்றும்
அத்தன்மை யசத்தினுக்கே காரியம்பிறந்ததென்றிங்
கொத்தொவ்வா துரைத்தவார்த்தை யென்றுமின்றாகுமன்றே. (கூ)

இரண்டுக்கு மொன்றேசத்தை யெனுமிது வேறேயென்னிற்
றிரண்டிடுங்குற்றமெல்லாஞ் செறிதனிச் சயமெப்போதுந்
திரண்டகாரியம் அசத்தேயாதலால் சதசத்தென்னில்
இரண்டிற்கு முரைத்தகுற்ற மிசைந்திடும் இயல்பினாலே (கசு)

உண்மையிற்பேதமின்றி யிருந்தேயும் பேதமென்னல்
வெண்மையேசெய்தரூப வியாபாரந் தோற்றங்கேடு
பண்வயின் இவற்றாற்கொள்ளும் பயன்நாம ரூபம்வேறும்
உண்மையி லெல்லாம்பொய்யா லுண்டாகும் அனைத்துமன்றே. (கஎ)

எல்லாவிகாரங்களும் வாக்காலென்றும் உண்டென்றுரைப்பதுவும்
சொல்லாமளவே யெவ்விடத்துந் தோன்றுமென்ற துண்மையதே
யல்லாவிகாரம் அறிவொழிய அனைத்தும்பொய்யே விகாரத்துக்
கில்லாதாகுமுண்மை பிறிதில்லாதாகு மாதலினால். (கஅ)

காரணமதனுலன்றிக் காரியமுள்வாய்த் தோன்ரு
காரணமொழியவேறு காரிய மின்மையாலே
காரியம் அனைத்தினுக்கும் காரணம் அதுவே யுண்மை
யோர்தர இரண்டுமொன்றென் றியம்பிடல் இயல்பின்ருமால் (கக)

ஷை ஐதரேயவுபநிடதம்.

வேதமோதியதே மெய்ப்பொருள்மற்றைப் பொருளெலாம் மித்தையே வேதம், ஓதமேவுற்றபொருள் இருவகையாம் அதனில் ஒன்றுஎன்றும் உண்மையதாய்ப், போத ஆநந்தமாகிய சிவனும்பொருளது மற்றதப்பொருளில், ஏதமேவாமல் கற்பிதமாகும் மற்றதனியல்பையும் இசைப்பாம். (கo)

சூதசங்கிதை சத்தாவிசாரம்.

அத்தகுசத்தாவாகிய பிரமம் அம்ம மண் கடாதியானற்போல்
சுத்தமாமுனிவீர் பற்பல வானசொரூபங்களாய்ப் பரிணமிக்கும்
உத்தமப்பிரமம் பவஞ்சமாய்த்தோன்ற லொளிதருசுத்தி வெண்பொன்னய்
வித்தகமுறத் தோன்றிடுதலேபோலும் வேதமும் இங்ஙனம் உரைக்கும். (கூ)

போதுவாய் எவருமங்கீகரிக்கத்தக்க இந்த வுத்தமப் பிரமாணங்களினலே யெல்லாம் காரியம் அசத்தென்றும் காரூருபங்கள் பொய்யென்றும் இப்படியே உலகும் பொய்யென்றும் சிவனென்றே மெய்யென்றும் நிலைப்பட்டமையின் வேதவரம்பிகந்த இவரது அவைதிக வாதம் அடிபட்டு மாய்ந்தொழிந்த தென்க. அத்வைதிகள் சித்தாந்தமாய்ச் சொல்லும் விவர்த்தவாதத்தை மறைத்து, ஆரம்பவாதமே சித்தாந்தம்போற் சொல்லவந்தாரே ; அதுவாவது தலைகாட்டிற்ரு? இல்லையே. அதுவும் தலைகுனிந்துபோயிற்றே ! இனியாது செய்வார் ! எங்குபோவார் ! எங்குபுகுவார் ! எங்குஒளிவார் ! எங்குமறைவார் !

மீண்டும் அதையே தொடர்ந்து "பொன் பூணைவிடத்தும் அந்தப்பூண் பொன்னின் றன்மையி னின்று மாறினதில்லை" யென்கிருர். இவ்வாறுரைத்ததனல், பிரம முலகாகுமேல் பிரமத்தின் றன்மை மாறப்படாதென்று கூறுவதாய் ஏற்படுகின்றது. பிரமத்தின் றன்மையோ சச்சிதாநந்தம்; உலகோ அதற்கெதிர்மறையான அசத்து சடம் துக்கம். ஆதலால் அது பொருந்தாதென்ப தவர்பக்ஷம். ஒரு காரணத்தைக்கொண்டு ஒரு காரியஞ்செய்தால் காரணத்தின்றன்மை காரியத்திலிருப்பது முண்டு; இல்லாதிருப்பது முண்டு. அத்துவிதிகள் விவர்த்தவாதமே சித்தாந்தமாய்ச் சொல்வதால் அநி விவருடைய வாதம் தோல்வியடைந்துபோ மென்க. விவர்த்த காரண காரிய வாதத்தில் கயிற்றின்கண் அரவு தோன்றுமானல் கயிற்றின் றன்மை அரவின்கணுளதா? மனத்தின் றன்மை சொப்பனவுலகின்கணுளதா? அத்வைதிகள் பிரமத்தினின்றும் உலகு தோற்றுவதற்குப் பலதிருட்டாந்தங்கள் கூறுகின்ருர்கள். அவைகள் ஒன்றுக்கொன்று மாருயிருக்கின்றன. அவற்றில் பூர்வபக்ஷமு முண்டு; சித்தாந்தமுமுண்டு. பொற்பணி முதலிய திருட்டாந்தம் பூர்வபக்ஷமும் கயிற்றரவுமுதலிய திருட்டாந்தம் சித்தாந்தமுமாம். எது பூர்வபக்ஷமோ அது சித்தாந்தத்தினல் கண்டிக்கப்படுமென்பது நிஜம். சித்தாந்த மல்லாததும் பூர்வபக்ஷமானதுமான

பொற்பணி திருட்டாந்தத்தை வெகு அவசரமாய் எடுத்துக் கண்டி
க்க வந்துவிட்டார். செத்தபாம்பை அடித்துக்கொல்லும் பெரிய சூரர்
இவர்தான் போலும்! அத்வைதிகள் சொல்லும் பல திருட்டாந்தங்
களில் ஒவ்வொரு விசேஷத்துக்கு ஒவ்வொன்று கூறுகின்றார்கள்.
அவற்றில் ஒருகுண திருட்டாந்தத்தையெடுத்துக்கொண்டு மற்றொரு
குணத்துக் கொள்வவில்லையே யெனக் கேட்பது விசார விவேகமின்
மையாம். அதிஷ்டானத்தின் றன்மையாரோபத்தி லிராதெனவெவரு
மறிந்திருக்கின்றனராகலின், இதுபோலவே ப்ரமத்தின் றன்மை உல
கின்க ணிராதென வறிவாராக. இவர்கேட்ட கேள்விக்கு நாம் சமா
தானங் கூறிவிட்டோமே. அவ்வாறு இவர்மாத்திரங் கூறாது மறைக்
தொழுகுவதென்னோ? சச்சிதாநந்த வடிவரான காரண துரியசிவன்,
அசத்து சடம் துக்கசொரூப மாமிசாதி சரீரங்களோடு காரியப்பட்
டுச் சிவனடியாராய் வரும்போது, காரணத்தின் றன்மையைக் காரி
யத்திற் காட்டுவாரா? துரியசிவன் இவர் மாணுக்கர் சொல்வதுபோல
ரூப மாகும்போது காரணத்தின் றன்மையைக் காரியத்திற் காட்டு
வாரா? சிவன் பன்றிவடிவமெடுத்து வரும்போது காரணத்தின் றன்
மையைக் காரியத்திற் காட்டுவாரா? இதில் சிவன் காரணம், பன்றி
யுருவங் காரியம். காரணமான சிவன் சச்சிதாநந்த நித்திய பரிபூர
ணம்; பஞ்சபூதத்தின் காரியமான மாமிசாதிகளோடுங் கூடிய பன்றி
யுருவம் அதற்கு எதிர்மறையான அசத்து சடம் துக்கம் அநித்தியம்
கண்டம். காரணமான சிவனிடத்துள்ள சச்சிதானந்தாதிகளைப்
பஞ்சபூத காரியமான பன்றியுருவிற் காண்பிப்பாரா? இனிப் பன்றி
யுடலைச் சச்சிதாநந்த நித்திய பரிபூரணமென்று சொல்லத் துணிவார்
போலும்! அரூபமுதலிய குணங்களுள்ள மாயையின் றன்மையை
ரூப முதலிய குணமுள்ள வுலகிற் காட்டுவாரா? இப்படிப்பட்ட கேள்
விகளுக்கெல்லாம் இவரேன் பதுங்குகின்றார்? கொள்ளென்றால் ஓடி
வருவதும் கடிவாளமென்றாலோடி யொளிப்பதுமா? இதுதான் இவ
ரது சூரத்துவமாக்கும்!

பின்னும் பின்னும் இவ்வாறே விவேகமற்ற கேள்வியே கேட்
கிறார். எப்போது அத்துவிதிகளுடைய சித்தாந்தம் விவர்த்தவாதமெ
ன்றுணரவில்லையோ, பின்னை மெய்யென்று கூறுஞ் சற்காரியவாதமா
ய்ப் பிரமித்தாரோ, அதன் காரியங்களெல்லாம் பிரமையாகத்தான்
முடியும். கானலை நீரெனப் பிரமித்தால் அதன்மேல் அந்நீருக்கு
அலையுண்டெனவும் அந்த அலையிலிருந்து துளி யுண்டாயிற்றெனவும்
அந்த நீர் இவ்வளவு அகல நீளமெனவும் அது இன்னநிறமுள்ள
தெனவும் அந்நீர் இவ்வளவு நிலத்துக்குப் பாயுமெனவும் அதற்கு
இவ்வளவு வரி சர்க்காருக்குக் கட்ட வேண்டுமெனவும் இவ்வாறு
பலப்பல ஒன்றின்பேரி லொன்றாக ப்ரமை யுண்டாம். அங்ஙனமே
இவருடைய வாதம் மருளின்மேல் மருளா யிருக்கின்றதன்றித் தெளி
வின்மேல் தெளிவா யில்லையென்பதை ருசுப்படுத்த, "பாலைத் தயிராக்

கிப் பருகுவாரில்லாதபோது அந்தப் பாலே தயிராகமாட்டாது” என்கிறார். தயிராக்கிப் பருகுவா ருண்டானபோது பாலே தயிராகும் போலும்! இதில் அவருடைய கருத்து: பால் தானே தயிராக மாட்டாதென்றும் பிறரொருவர் தயிராக்கவேண்டு மென்றும் அவ்வாறே பிரமம் தானே உலகாகாதென்றும் உலகாக்கப் பிறிதொரு பிரமம் வேண்டு மென்றும் இரண்டு பிரமம் வேண்டப்படுவது குற்றமென்னுமாம் எனத் தெரிகின்றது. இதைப்பற்றிப் பொன் பூஷணமாகும் என்னும் விஷயத்தில் விசதமாய்த் ‘தத்துவ விசாரணைபுரிவோர்’ எழுதியதை யெடுத்துக் காட்டியிருக்கின்றா மாதலால் அங்கு அதைப்பார்த்துச் சமாதானப்படுவாராக. இன்னும் வேறு விஷயமாகவும் சமாதானஞ் சொல்வாம். பால் சடமானதால் அது தன்னைத் தயிராகக் காரியப் படுத்திக் கொள்ளாது; பிரமம் சித்தானதால் அது தன்னிடத்தினின்றும் உலகைக் காரிப்படுத்தலாம். சடத்தைக் கொண்டுபோய்ச் சித்துக்கு உவமானங்கூறி யிடர்ப்படவேண்டிய தின்று. பின்னும் “பால் தயிரான பின்னர்த் தயிரென்பதேயன்றிப் பால் என்னும் பெயரதற்குண்டாயினதில்லை”யென வரைந்து, பின்னும் வேதாந்த வழக்கறியாமையைக் காட்டிக்கொள்ளுகின்றார். வேதாந்த வழக்கறிந்தவர் வினாச் சற்று ஆழமாயிருக்கு மாதலால் நாமும் ஆழமாய் யோசித்து விடை யிறுக்க வேண்டுவ தின்றியமையாமை. இவர் அப்படிப்பட்டவரன்றாதலாலும் மசகம்போன்றவ ராதலாலும் இவர்க்கு விடைதருவது நமக்கு வெகு சுலபம். பரிணாமம் மூன்றுவகை : (1) பால் தயிராவதொன்று, (2) மண் கடமாவ தொன்று. (3) கயிறு அரவாவதொன்றாம். (1) பால்கெட்டே தயிராகவேண்டும்; மீண்டும் பாலாகாது. (2) மண்கெடாது கடமாகி மீண்டும் மண்ணாகின்றது. (3) கயிறு கயிறாகவேயிருக்க அரவாகின்றது. இனிப் பால் தயிராகவும் மண் கடமாகவும் கயிறு அரவாகவும் பரிணாமப் படுகின்றதென் னுரைக்கப்படினும் கயிற்றரவு பரிணாமம் யதார்த்த மன்று; தோற்றல்மாத்திரமான பரிணாமமாம். இந்தப் பரிணாமத்தையே அத்வைதிகள் அங்கீகரிக்கின்றார்கள். இங்ஙனமே பிரமம் கயிற்றரவுபோல் உலகமாகப் பரிணமிக்கின்றது. பூர்வபக்ஷமாய்ப் பால்தயிர் மண்கடங்களான பரிணாமங் கூறினும் அத்வைதிகளுடைய சித்தாந்தம் தோற்ற பரிணாமமான கயிற்றரவு முதலியனபோன்ற பரிணாமமே யாம். பரிணாமம் எனச் சொல்லி யிருப்பதுகொண்டே பால் தயிர் எனக்கொண்டு பிரமித்துத் தோஷங் கூறப்புகுவது பின்னும் வேதாந்த வழக்கறியாமையேயாமென்க.

சிவன் சிவனடியாராய் வந்தார், அல்லது வருவாரென்று கூறியதில் நாம் சங்கராசாரிய ரவதாரமகிமையிற் செய்த சங்கைகளிலொன்றான நீர் அலையாத லென்னும் அம்சாமிக வாதத்தையும் எடுத்து, அதுவிஷயமாக வந்த ஆக்ஷேபத்துக்கு “நாம் பதில் பேசாது பாதா

ளத்திற்சென்று பதுங்கிக் கொண்டோமே, அதை யாவரு மிப்போது
கண்டுகொள்ளுங்கள்” என்று சொல்லிக்கொள்வதற் கொக்க, இனிக்
“கடலில் காற்றில்லாதபோது அலை குமிழிக ளிலாக்கப்பட்டவர்
“றில்லை. காற்று என்று மோயாமையால் அலை குமிழிக ளிலடங்கிய
“வாறில்லை. கடலி லுண்டாகிய அலைகுமிழிகள் கடனீரா யிருப்ப
“தன்றி வேறு பொருளாயினதில்லை. இவ்வுபயான சாத்ருசங்களோடு
“பிரமம் பலவா யிடுதலாகிய பரிபூரணத் தன்மையை நிறுத்த வேலா
“மையால், பிரமம் உலகுயிர்களாகியும், உலகுயிர்கள் மீண்டும் பிரம
“மாகியும் நிலைபெறுதற் கேற்ற தகுதியமைந்த வுபயானந் தேடிப்
“பூர்வபக்ஷிகள் தமது மதத்தை நிறுத்திக்கொள்வது ஆவசியகமாம்”
எனத் தீட்டி, இவர் வெகு நியாயஸ்தர்போலவும் சுருதி யுக்தி அநு
பவங்கட் கொத்துப் பேசுகிறவர்போலவும் அத்வைத மதஸ்தர்க
ளுடைய ஆக்ஷேபங்கட் கெல்லாம் ஓடாமலும் ஒளியாமலும் பதுங்
காமலும் அஞ்சாமலும் பதில்சொல்லி விடுபவர்போலவும் அத்வைதி
கள் அங்ஙனம் அல்லார்போலவும் காட்டினூர். இந்தச் சோமசுந்தர
நாய்க்கர் வெகு அற்ப சந்தோஷி. ஒரு காரியத்தைச் செய்து அதனுல்
தற்போது சிறிது சந்தோஷமுண்டாகிறதாயும் அதனுல் நாளை பெரிய
துக்கம் வருகிறதாயு மிருந்தால் அக்காரியத்தை யின்றுசெய்து சிறிது
சந்தோஷத்தை அநுபவித்து அதனுல் நாளை வரும் பெருந்துக்கத்தை
அனுபவிப்பாரைப் போன்றவர். ஒரு தோட்டத்தில் மிகுசுவை
யுள்ள பல பல விதமான கனிகளிருப்பனவாகவும் அவைகளை வேண்
டியமட்டும் யாரேனும் போய்ச் சாப்பிடலாமென்றும் சாப்பிட்டு
வெளியில் வரும்போது இருபத்துநான்கு அடி வாங்கிக்கொள்ளவே
ண்டுமென்றும் தோட்டக்காரர் விளம்பரஞ் செய்ததாய் வைத்துக்
கொள்வோம். யாரேனும் “பின்பு அடிபட்டுத்துக்கப்பட்டாலும் படு
வோம், முன்புபோய் வேண்டியமட்டும் சாப்பிட்டுச்சந்தோஷிப்போ”
மென நினைத்துப் போய்ச் சாப்பிட்டுப் பின் அடிபடுவார்களோ?
அப்படி யாரேனும் போய்ச் சாப்பிட்டு அடிபடுவாருண்டெனின் அவ
ரைப்போ லிவர் செய்கையு மொத்திருக்கின்றது. ஏனெனில் சோ.
நாய்க்கருக்குத் தாம் செய்யும் சங்கைகளெல்லாம் சங்கைகளல்ல
வென்றும் இப்படிப்பட்ட சங்கைகளுக்கெல்லாம் முன்பே சமாதா
னம் தமக்கே வந்திருக்கிறதென்றும் பின்னும் வருமென்றும் தெரி
யும்; இப்படிப்பட்ட சங்கைகளுக்குச் சமாதானஞ் சொல்லாமல்
படிற்றொழுக்க விரதம் பூண்டிருப்பது பின்னும் நன்ருய்த் தெரியும்.
தெரிந்தே இனிச் சமாதானம் வருகிறதா யிருந்தாலும வரச் சிலநாள்
செல்லுமே. அதுவரையில் தாமெழுதியவற்றைக் கண்டு, “ஆ! ஆ!!
சோமசுந்தரநாய்க்கர் நல்ல கேள்விகளெல்லாங் கேட்டார்” எனச் சில
பாமரஜனங்கள் தம்மை மெச்சக்கூடும். அந்த அற்ப சந்தோஷத்துக்
கிச்சைகொண்டே ஷை வழுவாசக அசப்பிய பொய்ச் சிறு பத்திரிகை
யை வரைந்து கொடுத்தனரென் றாகிக்கவேண்டியிருக்கிறது.

இது நிற்க, 'கடலில் காற்றில்லாதபோது அலைகுமிழிகள் அதில்
ஆக்கப்பட்டவா றில்லை' யெனக் கூறியதற்கு உபமேயம் யாதுங் கூறி
னாரில்லை. கடலுக்கு வேறாகக் காற்றென்ப தொன்று இருந்தாலன்றி
அலைகுமிழ்க ளுண்டாகா. அதுபோலப் பிரமத்தினின்றும் உலகுண்
டாவதாயின் பிரமத்துக்குவேறாக வொருபொரு ளிருக்கவேண்டுமே;
"பிரமத்தைவிட வேறுபொரு ளில்லையெனக்கூறும் அத்வைதிகளுக்கு
இது யாங்ஙன மொவ்வும்?" என்பதே யவருடையகருத்து. குழவிகள்
ஏதேனும் ஒரு சொல் சொன்னால் அதைக்கொண்டு அதன் முடிவை
மாதா பிதாக்கள் பழக்கத்தினால் அறிந்து கொள்வதுபோல் இவர்
உபமானத்தைச் சொன்னால் உபமேயத்தை நாம் ஊகித்துக்கொண்டு
பதில் சொல்லவேண்டியது நமது கடமையாய் விட்டது. சிவன்
சிவனடியாராய் வந்தார், அல்லது வருவாரென் றிவர் கூறியபோது
நாம் ஆக்ஷேபித்த ஆக்ஷேபங்களில் நீர் அலையாகும் அம்சாம்சிக வாத
மும்ஒன்றாயிற்றே. அதற்கேன்இவர் விடைகொடுக்கவில்லை?நாம்முதல்
கேட்டோம்; அவர் பின்பு கேட்கிறார். முதல்கேட்ட கேள்விக்கு
மாறுத்தரம் சொன்னபிறகன்றோ அவர் திருப்பிக் கேட்கவேண்டும்?
நம்முடைய கேள்விக்கு மாத்திரம் இவர் பாதாளத்தி லொளித்துக்
கொள்ளவும், இவர் கேள்விக்குமாத்திரம் ஒளியாமல் வெளியேநின்று
அத்வைதிகள் விடைபகரவு மிவர் விரும்புவதென்னோ ! இது நியாய
மன்றே. இவர் மாணாக்கர் ம-ள-ள-ஸ்ரீ நல். சுப்பிரமணிய முதலியார்
எழுதிய சஞ்சிகையில் பிரமம் ரூபமாவதாய்ச் சொல்லுகிறாரே; இவ
ரும் சிவன் ஊனுடலோடு சிவனடியாராய் வருவதாய்ச் சொல்லுகிறா
ரே; சிவன் பன்றியாய் வந்தாரெனவுந் திருவிளையாடற்புராணங் கூறு
கின்றதே. கடலலையாகச் செய்வதற்குக் காற்று இன்றியமையாமை
போலச் சிவன் உருவமாயும் சிவனடியாராயும் பன்றியாயும் வருவ
தற்குக் காற்றுப்போன்ற தொருபொருள் வேறா யிருக்கவேண்டுமே.
அதற்கு எதைக் கண்டுபிடித்து வைத்திருக்கின்றனர்? சணப்பன்
வீட்டுக் கோழிபோல யிவரே விலங்கில் மாட்டிக்கொண்டனரே
பாபம்! இதனால் நாம் கேட்ட கேள்விக்குப் பதில்சொல்ல வகை
யின்றி விழிக்கின்றாரென்றும் நமக்குப் பதில்கூறும் நிமித்தமே இவர்
"குரங்கெறி விளாங்காய்கதை"யாய்க் கேட்கிறாரென்றும் நன்றாய்
விளங்குகின்றனவன்றோ? சிவனை யுருவமாகவும் சிவனடியாராகவும்
பன்றியாகவுஞ் செய்வதற்கு வேறொரு சிவன் வேண்டுமே. தம்கோ
ணலை நிமிர்த்திக்கொள்ள வகையின்றி, பிறர்க்கு இல்லாக்கோணலைக்
கற்பித்து, அதை நிமிர்த்த வருவ தென்னமதி! நீர் அலையாவது
தானில்லாவிடத்தில் அங்ஙனமே சிவன் உருவமாவதும் சிவனடியா
ராவதும் பன்றியாவதுந் தானில்லாவிடத்திற்றானே! சிவனே பரிபூர
ணர். ஆதலால் தானில்லாவிட மிருத்தலில்லை. அங்ஙனமாகத் தான்
மாயாவிகார வூனுடலுடன் காரியமா யுருவப்படுவது கூடாது. நிற்க,
இவர் மாயையினின்றும் உலகுண்டாகின்ற தென்கின்றாரே. இதுமாத்

திரமெங்ஙனம் அமையும்? நீர் ஸ்தானத்தில் மாயையும், அலை ஸ்தா
னத்தி லுலகும் வைத்தால் காற்று ஸ்தானத்திலெதை வைக்கின்
றது? சிவனை வைக்கலாமென்னின் அங்ஙனமாயின் நீருக்குக் காற்று
எங்ஙனம் பின்னமோ அங்ஙனமே மாயைக்குச் சிவன் பின்னமாக
வேண்டுமே. அன்றி அம்மாயை அவ்வியாபகப் பொருளாகவும் வே
ண்டுமே. அவ்வியாப்கப் பொருளாயின் மாயை வியாபகமென்று
சொல்லும் இவரது சித்தாந்தத்துக்கு மாறுகுமன்றே? அதனுட
னே சிவனும் அவ்வியாபகப்பொருளாய் விடுவரே. சிவன் அவ்வியா
பகப் பொருளாவது இவர்க்குச் சம்மதமா? இவர் சம்மதித்தாலும்
சுருதி ஸ்மிருதி புராணேதிகாசாகமாதிகள் சம்மதிக்குமா? இவ்வள
வும் காரியத்தைப் பாரமார்த்திகசத்தென்று கொள்வதால் வரும் அன
த்தமாம். அத்வைதிகள் காரியத்தைத் தோற்றமென்றும் வியாவகா
ரிக சத்தென்றும் அநிர்வசனமென்றும் சொல்லிவிடுவதால் அவர்கள்
இந்த அநர்த்தத்திற் குட்படவேண்டிய அவசியமின்றென்க. கான
லின்கண் அலைகுழிகள் தோன்றுவதற்குக் காற்று அநாவசியகம்; அது
பொருளன்றாகலினென்க. கடலின்கண் அலைகுழிகள் தோன்றுவதற்
குக் காற்று அவசியமே. பிரமத்தின்கண் உலகு தோற்றுவது கான
லின்க ணீராதிகளுண்டாவதுபோலாகலின் காற்றைப்போன்றதொரு
பொருள் வேறாக வேண்டுமென்று வினவுவது வேதாந்த வழக்கறி
யார் உரையேயாம். இவர் அசத்தைச் சத்தெனக்கூறும் வாதியாக
லின் நம்மைப்போலச் சமாதானஞ் சொல்லமுடியாமல் இடர்ப்பட
வேண்டியதேயா மென்க. இடரிற் றுன்புற்றுச் சதாவருந்தும் இக்
தத் தரித்திரர், இடரொன்பதே யின்றி யின்புற்றுச் சதா மகிழ்ந்து
வாழும் அத்வைதச்செல்வருடன் போட்டிப்போட்டு ஆசங்கை செய்
ய வருவது அசூயையின் தடிப்பும் அகங்காரத்தின் மிகுதியுமாமென்க.
குப்பையைக் கிளரக்கிளர மேன்மேலும் மண்ணும் மயிரும் வரு
வதுபோலப் பின்னும் வருவனவற்றில் 'கடலிலுண்டாகிய அலை குமி
ழிகள் கடனீராயிருப்பதன்றி வேறுபொருளாயினதில்லை' யென்பது
மொன்றும். இது பொன்னின்றன்மை பூடணத்திலிருக்கவேண்டு
மெனக் கேட்ட கேள்விபோலாம். இதற்கு ஆங்கு அளித்த உத்தரத்
தையே வைத்துக்கொள்க. இந்தக் கேள்வியுங் கேட்டமைக்கு' கார
ணம் அத்வைதிகள் விவர்த்தவாதங் கூறுகின்றார்களென் றறியாமை
யும் வேதாந்த வழக் கறியாமையு மாம். 'இவ்வுபமான சாத்ரு சங்க
ளோடு பிரமம் பலவாயிடுதலாகிய பரிபூரணத்தன்மையை நிறுத்த
வேலாமையால்' என்று தீட்டியதும் ஷை இரண்டுவித அறியாமையே
யாமென்க.

"பூசுணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல" என ஒரு பழ
மொழியுண்டல்லவா? அந்தப் பழமொழி யிந்தச் சோமசுந்தர நாய்க்
கருக் குதவாது. இவர்க்கு "மலையைச் சோற்றில் மறைப்பதுபோல்"
எனப் புதிய பழமொழி யொன்றுண்டுபடுத்தவேண்டும், இவர் மலை

யைச் சோற்றில் மறைப்பவரேயாம். ஏனெனில் இவர் அவ்வளவு பொய் பேசுகின்றார். அம்மம்ம! இவர் அண்டப் புளுகர்; ஆகாசப் புளுகர். இப்படிப்பட்டவருடன் எதிர்ப்புளுகு பேச ஒருவர் இனிப் பிரமனால் சிருஷ்டிக்கப்படவேண்டும். இவர் பேசும் அபாண்டத்தைப் பாருங்கள். பசுபாசங்கள் சத்துப்பொருளாயிருக்குமானால் பிரமம் பூரணமாயிருப்ப தொழிந்துபோமென நாமும் பிறரும் ஐந்துவருஷகாலமாக இவரையும் இவர்போன்ற மாயாவாதிகளையும் மறுத்து ஓயாமல் கத்திக்கத்திக் கதறுவது எவரும் அறிந்திருக்கவும், அவைகளுக்குச் சமாதானம் நாளதுவரையில் பேசாது எவரும் மௌனவிரதம் கொண்டிருக்கவும் இப்போது ஷை இலகு பத்திரத்தில், அத்வைதிகள் பிரமத்துக்குப் பரிபூரணஞ்சொல்லாது போலவும் இவர் ஏதோ சொல்லிவிட்டதாகவும் பகடித்தனஞ்செய்து, "எவ்வித வுபமானந் தேடினும் பிரமத்தினது பரிபூரணத்வம் அவர் கூறியபடி சித்தியாதென்பது சித்தம்" என்று அபாண்டம் பேசுகின்றார். இப்படிப்பட்ட ஆசங்கை செய்யும் இவர், தம் மதத்தை யனுசரித்துப் பரிபூரணகுற்றம் வராதபடி சொல்லும் விநோதத்தைப் பாருங்கள். நந்தன ௵ ஆனி௴ 22௳ நாகைநீலலோசனிப் பத்திரிகையில் "நிலங்குளிர்ந்த வழி வித்தினின்றும் அங்குரந் தோன்றுதல் கண்டாம். நிலத்தினின்றும் அங்குரமுண்டாய தென்பதும் வித்தினின்றும் அங்குரமுண்டாயதென்பதும் ஸாமஞ்சஸமாயினவாறு" எனக் கூறியிருக்கின்றார். இதில் நிலஸ்தானத்தில் பிரமும் வித்துஸ்தானத்தில் மாயையும் அங்குரஸ்தானத்தில் உலகமுமாம். இவருடைய வுபமானப் பிரகாரம் நிலமும் வித்தும் வேறு வேறு ஸ்தானத்திலிருக்கும் வேறு வேறு பின்னப்பொருள்கள். அன்றி வித்து அங்குரமாகும்போது நிலமில்லாதவிடத்தில் அதாவது நிலத்துக்குமேலேதான் ஆகின்றது. அதுபோல் பிரமத்திற்குப் பின்னப்பொருளாகிற மாயையினின்றும் உலகு தோன்றும்போது பிரமமில்லாதவிடத்தில் அதாவது பிரமத்துக்கு மேலேதான் தோன்றவேண்டும். "அவன் கெட்டான் குடியன் எனக்கு இரண்டுமொந்தை கள்ளுவாரு" என்னும் பழமொழிக்கிணங்க, அத்வைதிகள் பரிபூரணஞ் சொல்லாததுபோலவும், தாம் என்னமோ வெகுநிகளமாய்ப் பரிபூரணஞ் சொல்லுகிறவர் போலவும் காட்டி, முடிவில் தாமே ஷை குற்றத்திற்கிலக்காய்ப்போனார். "ஊருக்கெல்லாம் சொல்லுமாம், காடிப்பானையில் விழுமாம் பல்லி" எனப் பிறர்க்குப் புத்தி புகட்டவந்து தாமே பிறரால் புத்திபுகட்டிக்கொள்ளுகின்றார். ஆனால் முன்னெழுதியதற்கும் பின்னெழுதியதற்கும் இடையில் ஒருவருஷகாலம் இருக்கின்றது. இவ்வளவு காலத்திற்குள் இவருடைய கொள்கை மாறிவிட்டதாக்கும்! முன்னையதை நோக்கப் பின்னையதும், பின்னையதைநோக்க முன்னையதும் மாறுபடுகின்றமையால் அவ்விரண்டில் எது பூர்வபக்ஷம்? எது சித்தாந்தம்? அவ்விரண்டில் இவருடைய மதசித்தாந்தம் எது? ஷை நந்தன ௵ ஆனி௴

22௨ நீலலோசனியில் கூறியது இவர் பதமித்தாந்தம். அதற்கு நூற் பிரமாணமுங் காட்டியிருக்கிறார். விஜயஹு ஆனிமீ 30௨ சிறுபத் திரத்தில் கேட்ட கேள்வி இவர் மதத்துக்கே தீங்கானகேள்வி. அது அத்வைதிகள் இவரைக் கேட்கவேண்டிய கேள்வியாம். அதுபற்றி யே இம்மாதிரிப் பலகேள்விகளைச் "சங்கராசாரியார் அவதாரமகிமை" யில் நாம் கேட்டிருக்கின்றோம். அவைகளுக்குத்தான் இதுகாறும் உத்தரவு சொல்லாமல் இவர் ஒளிந்தது.

இவர் மூன்றுபொருள் சத்தியமென்பதால் ஒன்றிருந்தவிடத்தில் ஒன்றில்லையாகி, மூன்றுங் கண்டமாய் அதில் பிரமம் கண்டப்பட்டு அபரிபூரணத்துவத்தையடைந்து, ஆதலால் இவர் மூன்றிலொரு பங்கு ஆஸ்திகரும் இரண்டுபங்கு நாஸ்திகருமான அவமானமும், அதிலும் வேதாந்திகளை நோக்க முழுநாஸ்திகரான அவமானமும் பெற்றிருப் பது ஜகத் பிரசித்திபாக, இவர் அத்வைதிகள் பரிபூரணஞ் சொல்லவி ல்லை யென்றியம்புவ திவர்க்கே தகும். இவரோ காக்கை வெளிறென்று கூறிடுபவரும், பட்டப்பகலை யிரவென்று கூறிடுபவருமான பிரத்தி யக்ஷ விரோதியென்க.

தன்னை, சுத்த வீரனொருவன் அஸ்திரத்தினால் உடலைச் சல்ல டைக் கண்களாகத் துளைக்க, அவனோடு போர்புரிந்து வெல்லச்சத்தி யின்றி முதுகுகாட்டி யோடி, காட்டிற்சென்று கட்டைகளில் தோன் றும் புருஷர்களையெல்லாம் வெட்டிக் கொல்வானைப்போல, நமது ஆக்ஷேபத்திற்கும் மற்றவர்களுடைய ஆக்ஷேபத்திற்குஞ் சமாதானங் கூறாமல் முதுகுகாட்டியோடித் தூத்துக்குடியிற் சென்று, அங்கு வே தாந்திகளாற் கண்டிக்கப்பட்ட விஷயங்களைத் தாமுங் கண்டித்தது போல் கிறுக்கிவிட்ட கிறுக்குப் பத்திரத்தில் தமது சித்தாந்தத்தை யிரண்டுவரியில் சொல்லுகிறார்; சொல்லவும் அஞ்சுகிறார். அப்படிச் சொல்லுகிறவர் இலட்சணத்தைச் சொல்லுகிறாரே யன்றி அதன் பொருளைச் சொல்லுகின்றாரில்லை. அதனைச் சொன்னாலோ சணப் பன்வீட்டுக் கோழிபோல் அகப்பட்டுக் கொள்வார். அவர் சொல்லப் பயந்தாலும் நாம் அதன் பொருளையும் உபமான வுபமேயங்களையுஞ் சொல்லி, அவரைச் சணப்பன்வீட்டுக் கோழியாக்கி, அவரைக்கொண் டே அவர்காலில் நியாயமென்னும் விலங்கைப் பூட்டச்செய்து, அத் துடனே அவரது சித்தாந்தமே அவரை நாஸ்திகராக்கி விட்டமை யையுங் காட்டிப் பின்னும் படிற்றொழுக்க விரதத்தை அனுசரிக்கச் செய்வாம். அவர் கூறியதிது: "வியாபகம், வியாப்தி, வியாப்பியம் சொற்பாகுபாடுகளி னுண்மை யுணராத கொடுமையே அவர்க்கு வீணவதியை விளைத்ததென்க." என்பதாம். இச்சொற்பாகுபாடுக ளோடு பொருள்பாகுபாட்டையும் உபமான வுபமேயங்களையும் அத் வைதிகள் செவ்வனே உணர்ந்தமையின், அவர்க்கன்று, இந்தச் சோ. நாய்க்கருக்கு நேர்ந்த வீணவதியையே விளக்கிக் காட்டுகின்றோமெ ன்க. கடல் வியாபகம், நீரும் உப்புங் கலந்திருத்தல் வியாப்தி, கட

வில் நீரும் உப்பும் அடங்கியிருத்தல் வியாப்பியம். இது உபமானம். உபமேயமாவது பதிவியாபகம்,பசுவும் பாசமும் கலந்திருந்தல் வியாப்தி, பசுவும் பாசமும் பதியினிடத்தில் அடங்கியிருத்தல் வியாப்பியம். அத்வைத மதஸ்தருடைய சித்தாந்தமல்லாததை யெல்லாம் சித்தாந்தமென்று கொண்டு, தூத்துக்குடி சைவசமாஜத்தாருக்கு வெகு உபகாரியாகப் பத்திரம் எழுதிக்கொடுத்த இந்தச் சத்தியவாதி: வியாபகம், வியாப்தி, வியாப்பிய இலக்கணங்களையும் அவ்விலணங்களைப்பெற்ற வுபமான வுபமேயப் பொருள்களையும் சற்று எழுதிக் கொடுக்கப்படாதா? எழுதிக்கொடுத்தால் உண்மை வெளிப்பட்டுவிடுமென்று இந்தவிஷயத்திலுஞ் சரந்தொளிந்தனரோ! இவர் இன்னுமெத்தனை நாள்தான் கரந்தொளிக்கப் போகின்றாரோ பார்ப்போம்! இவர் மதப்படி பதி ஸ்தானத்தில் கடலும், பசு ஸ்தானத்தில் நீரும், பாச ஸ்தானத்தில் உப்புமாம். பொருளைப் பொருளாகக் கொள்ளாமையும் பொருளல்லவற்றைப் பொருளாகக் கொள்ளுகின்றமையும் மருள்; பொருளைப் பொருளாகக் கொள்ளுகின்றமையும் பொருளல்லவற்றைப் பொருளாகக் கொள்ளாமையும் தெருள். இந்தச் சித்தாந்தி கடவுள் ஒரு பொருளும், பசு ஒரு பொருளும், பாசம் ஒரு பொருளும் ஆக முப்பொருளாகக் கொண்டார். இதற்கே உபமானமாகக் கடலும் நீரும் உப்புஞ் சொல்லப்படுகின்றன. உபமானத்தில் கடலென்னுஞ் சொல்லுக்குப் பொருள் யாது யாது என ஆராயின் நீரையன்றி யில்லை. நீரினது நிலைமையைப்பற்றிக் கடலென்றும், ஏரியென்றும், குளமென்றும், மடுவென்றும், யாறு என்றும், கிணறு என்றும் சொல்லப்படுகின்றனவே யன்றி, மற்றப்படிக் கடல் முதலிய சொல்லுக்குப் பொருள் யாதென உய்த்து நோக்கின் அபாவந்தான் பொருள். கடலினீரை யெடுத்துப் பல ஏரிகளில் நிரப்பிவிடுவோமாயின் பிறகு கடலென்னுஞ் சொற்குப் பொருளில்லை. பொருளில்லாமற் போகும் போது கடலிருந்து பொருளில்லாமற் போயிற்றா? கடலில்லாமலிருந்து இல்லாமற்போயிற்றா? இருந்ததாயின் இல்லாமற்போகாது. இல்லாமற் போனமையின் இல்லாமலிருந்தே யில்லாமற்போயிற் றென்க. ஷை பல ஏரி நீர்களை முன்னிருந்த விடத்தில் விட்டபோது கடலென்னும் பேர் பெறுகின்றது. முன்னில்லாதிருந்த கடல் இப்போது வருவானேன்? வந்தது நீரேயொழிய மற்றொன்றுமல்ல. கடலென்னும் பொருள் ஒன்றிருந்தாலன்றோ அது வரப்போகிறது? போகப்போகிறது? அது இல்லவேயில்லை யாதலால் அது வரவுமில்லை; போகவுமில்லை. வந்ததும் போனதும் நீரேயன்றி மற்றொன்று மல்ல. இல்லது வரவுமாட்டாது; உள்ளது போகவுமாட்டாது. ஆதலால் நீரையன்றிக் கடல், ஏரி, குளம், மடு முதலியவற்றிற்குப் பொருளின்றென்று நிச்சயமா யுணர்வாராக. இடத்துக்குத் தக்கவாறு கடல், ஏரி, குளம் முதலான பேர் பெறுகின்றதேயன்றி யுண்மையில் அவைகளுக்குப் பொருள் மலடிமகன்றான்.

அவைகளுக்கெல்லாம் பொருள் உண்மையில் நீர் ஒன்றேயாம். கடல்
முதலியன வியாவகாரிக சத்தியமாய் உலக விவகாரத்தில் சொல்லப்
படுகின்றன. பாரமார்த்திகமாயும் வேதாந்த சாத்திர ரீதியாயும் பொ
ருளைப் பொருளாகச் சோதித்துப் பார்க்குமிடத்துக் கடல் பொய்யும்
நீருண்மையுமாம். இங்ஙனமே கடல் ஸ்தானத்திற் கூறப்பட்ட பதி
பொய்யும், நீர் ஸ்தானத்திற் கூறப்பட்ட பசு மெய்யுமாம். இவர் சித்
தாந்தப்படி பசு உண்மையும் பதி பொய்மையுமா யிருக்க, இல்லாத
அதாவது பொய்யான பதியின்கண் பசு பாசங்கள் அடங்கியிருக்கு
மென்கை, "மலடி மகன் அரசாட்சியில் ஜனங்கள் க்ஷேமப்பட்டார்
கள்" என்பதற்கொப்பாமென்க. இவரது துவைத சித்தாந்தப்படி
பதிக்குப் பொருளே யில்லாதிருக்க, அது பரிபூரணமென்றும் நித்திய
மென்றும் சச்சிதானந்தமென்றும் பசுக்களை முத்தியில் செலுத்துமெ
ன்றும் பசுக்கள் பதியை வணங்கவேண்டுமென்றும் இவ்வாறு பல
பல சொல்லிப் பிரசங்கிப்பதும் எழுதுவதும் என் கொண்டோ! மல
டி மகனை அரசனுக்கி அவனுக்கு ஏதேதோ பலநன்மைகள் புரிந்து
அவனால் ஏதேதோ நன்மைகள் பெறலாமென்று சொல்வதுபோல,
(இவர் மதப்படி) மலடி மகனுக்கொத்த இவரது பதிக்கடவுளுக்
கேதேதோ செய்யச் சொல்லுகிறார். நீரையும் உப்பையுமெடுத்து விட்
டால் கடலுக்குப் பொருள் அணுவளவு கூட எங்ஙனமின்றோ, அங்
ஙனமே, பசுக்களையும் பாசத்தையு மிழுத்துவிட்டால் இவரது கடவு
ளான பதிக்குப் பொருள் ஆகாயப் பூவும் மலடி புத்திரனுந்தான்.
இனிப்பசுவுக்கும் இவரது கடவுளான பதிக்கும் பேதமா? அபேதமா?
இந்தக்கேள்வியைக் கேட்பதற்குமுன் பசுவுக்குப் பதி இருந்து பேத
மா? இல்லாதிருந்து பேதமா? என்று கேட்கின்றோம். இந்தக்கேள்வி
மலடியும், அவள் மகனும் பேதமா? அபேதமா? வென்று கேட்பது
போலிருக்கின்றது. மலடிமகன் எங்ஙனமின்றோ, அங்ஙனமே இவ
ரது சித்தாந்தப்படி இவர் மதக்கடவுளான பதியும் மேற்காட்டிய
நியாயப்படி இன்றென்பதாம். இல்லாத பதியைப் பேதமென்றாவது
அபேதமென்றாவது கூறுவதிற் பயன் யாது? இனி நீர் உப்பைப்பற்றி
யும் விசாரிப்போம். நீரும் உப்பும் கலந்திருத்தல் பின்னமாகவா?
அபின்னமாகவா? அபின்னமென வொருபோதுஞ் சொல்லப்படாது.
ஏனென்னில் கடனீரில் நூற்றுக்கு இருபத்தேழு பங்கு உப்பு என்
கிற பொருளும், எழுபத்து மூன்று பங்கு நீரென்னும் பொருளு மிரு
க்கின்றன. ஷை நீர் என்னும் பொருள் ஆவி ரூபமாய் மேலே போய்
மேகமாக மற்ற உப்புப் பொருள் கீழே தங்கிவிடுகின்றது. நீர்மேலே
போய்விடக் கீழே தங்கிவிடும் உப்புத்தான் உப்பளத்திலுள்ள வுப்
பாம். எது பின்னமாய் ஒருகாலத்திற் பிரிகின்றதோ, அது ஒருகால
த்தில் பின்னமாய்க் கூடியே யிருந்திருக்கவேண்டும். அபின்னமாயே
யிருக்கின்றதென்று கூறுவோமென்னின், எது அபின்னமோ, அது
என்றும் அபின்னந்தான். ஒருபோதும் பின்னமாகாது. மரத்தின் மே

யிருக்கும் பறவை பின்னமாகலின் அது மரத்தை விட்டுப் பிரிந்து போகின்றது; சூரியனிடத்துள்ள வொளி அபின்னமாகலின் அது ஓர் போதும் பின்னப்படுவ தில்லை. அதுபோல் வியாவகாரிகமாய் உலக வழக்கத்திற் சொல்லப்படுகிற கடலி லிருந்து நீர் பிரிந்து போகின்றமையினும் கப்பற்காரர் யந்திரமூலமாய்க் கடல் நீரைக் காய்ச்சி உப்பினின்று நன்னீரைப் பிரித்து அருந்துகின்றமையினும் உப்பும் நீரும் பின்ன சம்பந்தியேயாம். தூலதிருஷ்டிக்கு அபின்னம்போற் றோன்றிடினும் உண்மையில் அவை பின்னமென்றே சொல்லத்தக்கன. அங்ஙனமே பசுவும் பாசமும் பின்னமே யென்பதற்கு ஏதும் ஆக்ஷேப மில்லை. அவை பின்னமாகிறபோது பசுத் தானத்தில் பாசமும், பாசத்தானத்தில் பசுவும் இரா. இராவாகவே பசுவைப் பாசம் மறைத்த தென்பதும் பொய்யாம்; அது பொய்யாமாகவே பாசத்தை யொழிக்க வேண்டுமென்பதும் பொய்யாம்; அது பொய்யாமாகவே அதற்குப் பசு என்கிற பேரும் பொய்யாம்; அது பொய்யாமாகவே பாசத்தை நீக்கி இவர் மதசித்தாந்தப் பிரகாரம் மலடிமகனைப்போன்ற பதியைப் பசு அடையுமென்பதும் பொய்யாம். எல்லாம் பொய்யும் புனைசுருட்டும் கள்ளமுமா யிருப்பதாலும் இவ்வளவுக்கும் இடங்கொடுத்தது இவரது அவைதிக மாயாவாத துவிததாந்திரீக சைவமாயிருத்தலாலும் இப்படிப்பட்டபொய்ம்மதத்தைஆதாரமாய்க்கொண்டு மெய்போல எழுதுவதும், பேசுவதும், பிரசங்கிப்பதும் நன்றன்று.

கடவுள் உண்டென்பவர் ஆஸ்திகர்; இல்லை யென்பவர் நாஸ்திகர். நீரையன்றிக் கடலில்லாமைபோலப் பசுவையன்றிப் பதி யில்லை யென்பது இவரது மதமாய் முடிந்ததென மேலே காட்டினமையின் அதன்படி இவர் நாஸ்திகரும் இவரது மதம் நாஸ்திகமதமுமா மென்க. ஆஸ்திக நாஸ்திகத்தைப் பற்றி யெழுதிய சுதேசியும் இவர் மதத்தை நாஸ்திக மதத்திற் சேர்த்து வைத்தனர். அந்த விஷயத்தைப்பற்றி வாதஞ் செய்தால் இவர் பகிரங்கமாய் நாஸ்திகராய்ப் போகவேண்டி வரும்; பிறகு ஆஸ்திகனெனச் சொல்லிக் கொள்வதால் வரும் பயனில்லாமற்போமென அவ்விஷயத்தின் ஜோலிக்கே போகாமலும் அந்தக் காற்றுக்கூடத் தமது பேரில் படவொட்டாமலும் தூர தூரமாய் அதிலும் நெடுந்தூரமாய் ஒதுங்கி நின்று, இப்போது தாம் பெரிய முழு ஆஸ்திகர்போல் காட்டத் தூத்துக்குடிக்கு அதி ஓட்டமாய் ஓடினர். அங்குத்தான் தமது படிற்றொழுக்கம் வெளிவராதிருக்குமென வோடினர்போலும்! மேற்காட்டிய முழு நாஸ்திக மதத்தை யவலம்பித்த இந்த முழுநாஸ்திகர்: எவராலும் அசைக்கலாகாத முழு ஆஸ்திகஅத்வைத மதத்தை அசைக்க வருவது கொசுகு இமயமலையை அசைக்க வருவது போலாமென்க. இப்படிப்பட்ட முழு நாஸ்திக மதத்தினது வியாபகம், வியாப்தி, வியாப்பியம் என்னுஞ் சொற்பாகுபாடுகளை யுணராத கொடுமைதான் சோமசுந்தர நாயக்கரை வீணவதியி லிழு

த்துவிட்டு, அவமானத்தையும் அவமதிப்பையும் உண்டாக்கியதெங்க. அத்வைதிகள் அச்சொற்பாகுபாடுகளை யுள்நுழைந்து மிகு நன்றாய்ச் சுருதி யுக்தி அநுபவங்களோடு ஆராய்ச்சி செய்தமையாற்றான் அவ் வவதியிற் புகுந்து நாஸ்திகராய் அதிலும் பரமநாஸ்திகராய்க் கெட்டுப் போகாமல் சுருதி முதலிய பதினொன்கு வித்தைகளுக்குங் கட்டுப் பட்டு, யுக்தி அநுபவங்களுடனே விசாரணை செய்து, விசாரணையிற் றேறியவாறு ஆஸ்திகராய் அதிலும் முழு ஆஸ்திகராய் நின்று, கரும பத்தி யோகங்கள் செய்து, பரமேசுவரனது திருவருட் பிரசாதத் தைப் பெற்று, மனந்தூயராய் முடிவில் ப்ரம்மாநுபூதியைப் பெற்ற சற்குருவை யடைந்து, சுருதி யுக்தி அநுபவங்கட் கொத்தபடி சிர வண மனன நிதித்தியாசன சமாதி சாட்சாத்கார பிரம நிலை அல்லது பிரமத்தின் பரியாய நாமமான ஆன்ம நிலை, அல்லது சிவ நிலையைப் பெற்று ஜீவத்துவத்தைப்போக்கி அத்வைதாநுபவிக ளாகின்றார்கள்.

இனிப் பன்முறை கூறியதையே கூறிப் பின்னுமொரு ஆசங்கை செய்கின்றார். அது அவருடைய தெரியாமையைக் காட்டுமேயன்றி ஆசங்கையாகமாட்டாது. அது "அவர் பூரணத்வங் கூறியது பிரமத் துக்கென்று விவகாரமுண்டாயினும் அந்தப்பிரமம்ஆன்மாவைத்தவிர வேறில்லை யென்பது அவரது மதமாய் முடிந்தமையின்" என்னும் ஆபாசமாயா வழுவாசகமாம்.

நாம் தரும் சமாதானத்தைப் பிறரைப் படிக்கச் சொல்லிக்காதி ஞல் கேட்பாரோ? தாமே கண்ணால் காணுவாரோ? தெரியவில்லை. சுரோத்திரேந்திரியமாவது சட்சு இந்திரியமாவது அவர்க்கிருப்பது உண்மையானால் ப்ரம்மவித்யா ௬-வது புத்தகம் 22-வது பத்திரிகை யின் அநுபந்தத்தில் 'சங்கராசாரியார் அவதார மகிமை'யில் ௩௯ள வது பக்கத்தில் இவரது குளறுபடையை மறுக்கவே "ஆன்மாவேபிர மம்" எனப் பெயரீந்து நாம் சமாதானஞ் சொல்லியிருப்பதைப்பார் த்து அல்லதுகேட்டுச்சந்தேகந் தீர்த்துக் கொள்ளலாமே. அன்றி ஷை பத்திரிகை ௬-வது புத்தகம் ௨௩-வது பத்திரிகையிலும் ௭-வது புத்த கம் ௪௦-வது பத்திரிகையிலும் "சித்தாந்திகளும் ஏகாத்தும வாதிக ளே" என்னும் விஷயத்தை "வேதாந்தி" என்பவர் எழுதியபோது இவ ருக்கும் இவர் சிநேகருக்கும் இவரினத்தாருக்கும இவர் முன்னோருக் கும் நெடுநாளாய்ப் பிடித்திருந்த பரம்பரைப் பித்தத்தை யெல்லாந் தீர்த்திருக்கின்றாரே. அவைகளையும் பார்த்து அல்லதுகேட்டுஎல்லாச் சந்தேகமுந் தீர்த்துக் கொள்ளலாமே. பார்க்கவும் சட்சு இந்திரிய மில் லாமல் கேட்கவும் சுரோத்திரேந்திரிய மில்லாமலிருக்கிற விவருக்கு வாதேன்? வழக்கேன்? இவர்தான் இப்படி. யானாலும் சமாஜத்தா ருமா அங்ஙனமாகவேண்டும்! சோ. நாய்க்கர் குருடரைப்போலவும் செவிடரைப்போலவும் இருப்பதுஇன்று நேற்றன்று; நெடுநாள் வழக்க

மென்பதெவருமேயறிவர் இப்போது சமாஜத்தாரும் அங்ஙனமாயின
மைக்குத் தான் விசனமுறுகின்றேம்! கவர்ன்மெண்டார் விதித்த
வரி நியாயமல்லவென நாம் ஒரு மநு அனுப்பினேமென வைத்துக்
கொள்வோம். கவர்ன்மெண்டார் அது நியாயமல்லவெனக் காரணங்
காட்டிப் பதிலெழுதி விட்டார்களெனவும் வைத்துக் கொள்வோம்.
பிறகு நாம் அதற்குமேல் மநு செய்கிறதானால் கவர்ன்மெண்டார்
அனுப்பிய பதிலைப் பூர்வ பக்ஷஞ்செய்து அதன்மேல் நியாயங்காட்டி
யெழுதுகிறதா? அல்லது முதலிலெழுதிய மநுவையே பின்னும் எழு
தி அனுப்புகிறதா? முதலில் எழுதியதையே பின்னும் எழுதியனுப்பி
னால் கவர்ன்மெண்டார் நமது மநுவைப் பிடிப்பார்களா? பிடித்தாலும்
பதில்தான் கொடுப்பார்களா? இப்படியே இவரும் இவர் நண்பரும் இ
வர் முன்னோரும் பன்முறை ஆன்மாவைத் தவிரப் பிரமமில்லையெனச்
சொன்னமைக்குப் பதில் பன்முறை நாமும் பிறரு மெழுதியிருக்க அ
தைக்கேளாமலும் பாராமலும் பின்னும் எழுதினதையே யெழுதினால்
இவரை நாமென்னவென மதிக்கவேண்டும்? நமது சமாதானத்துக்கு
மேல்கக்ஷி சொல்லவிட மின்மையான் சொன்னதையே சொல்லுகிறா
னென்றும் எழுதினதையே எழுதுகின்றானென்றுந்தானே நினைக்கவே
ண்டியது. இந்தச்சங்கதிகளை யெல்லாம் சமாஜத்தார் அறியாமையால்
சோ.நாய்க்கருடைய மேல்வேஷ படாடோபத்தைக்கண்டு அவர் உண்
மையான விஷயத்தை யெழுதிக் கொடுத்துச் சமாஜத்தைக்கௌரவிப்
பாரென நம்பி யேமாந்து போனார்கள் போலும்! சுயமாய் விஷயத்தை
ஆராயச் சக்தி யில்லாதவர்க ளென்செய்வார்கள்! இப்படித்தான்
ஏமாந்து போவார்கள்! ஆன்மாவைத் தவிரப் பிரமமில்லை யென்ப
திற் குற்றமென்ன? அஸ்தத்தைத் தவிரக் கையில்லை யென்றால் அது
ஒரு குற்றமா? ஆத்மா வென்கிற சொல் பிரமத்துக்குப் பரியாய
நாமமென விவரறியாதுபோனால் அத்வைதிகளுக் காகவேண்டுவ
தென்ன? இதைப் பற்றிய மற்ற விஷயங்களை யெல்லாம் "சித்தாந்தி
களும் ஏகாத்மவாதிகளே" என்னும் கடிதத்தில் விரிவாய்க் கண்டு
பெட்டியினுள் பாம்பைப்போல அடங்குவாராக. வெளியில் வருவா
ரானால் எமது நியாய தண்டத்தால் புடைக்கப்படுவாரென்ப துண்
மையேயாம். ஆத்மா பிரமம் சிவன் என்னும் பெயர்கள் ஒருபொரு
ளையே சுருதி முதலியவைகள் கூறுகின்றன வென்பதற்கு வேண்டிய
பிரமாணங்கள் முன்னரே காட்டியிருக்கின்றோம். ஆங்குக் காண்க.
அந்தப் பிரமாணங்களினால் பிரமத்தின் பரியாய நாமம் ஆன்மாவெ
னச் சொல்லப் படுகின்றமையின் ஆன்மாவே பிரமமெனவும் பிரமமே
ஆன்மாவெனவும் ஏற்பட்டிட, இவருக்கு மாத்திரம் அது குமட்டு
வானேன்? ஒரு பொருளுக்குப் பலபேரிருக்குமானால் அந்தப் பொரு
ளுக்கு எந்தப் பேரிட்டழைத்தாற்றான் என்ன? இவர் வேதவிரோத
மாய் வேதவரம்பு கடந்து ஆன்மா வென்னுஞ் சொல் சிவனுக்குப்

பொருந்தாது, ஜீவனுக்கு மாத்திரந்தான் பொருந்துமெனச் சொன்
னால் இவர் வேதபாஹியரும் வேததூஷகரும் பதிதரும் பாஷாண்டியு
மாவாரோ யன்றி, வேதவேதாந்தத்தின் அகசமயத்தவரும் வைதிக சம்
பந்தியு மாவரோ? ஒருபோது மாகார். ஒரே பொருளுக்குச் சிவனெ
ன்றும் ஆன்மாவென்றும்-பிரமமென்றும் வேத முதலிய நூல்களில்
கூறப்படுகின்றமையின் பிரமமென்று சொன்னாலுஞ் சரி, ஆன்மா
வென்று சொன்னாலுஞ் சரி, சிவனென்று சொன்னாலுஞ் சரி, எல்லா
மொன்றுதான். ஷை ஆன்ம சிவ பிரமப் பொருட்கு ஜீவன் வேறு; ஜீவ
னுக்கும் சில சமயம் ஆன்மாவென்று சொல்லப்படுவ துண்டு. அப்
போது ஆன்மா அணுவாகும்; சிவனுக்குச் சொல்லும்போது பரிபூர
ணமாகும. இந்த விரண்டினது பேதங்களை அறியாது சாதாரண
ஏழை மக்களை மயக்கிக் குழப்பிக் கலக்கிறார். அத்வைதிகளுடைய
யதார்த்த கொள்கையை மறைத்து அவர்கள் பேரில் இல்லாக் குற்
றத்தை யேற்றி, பேதையர் பிரமிக்கும்படி மாறுபாடாய்ச் சொல்வது
ஆன்றோர்செய்கையன்றாம்; நற்குடிப்பிறப்பாளர்செய்கையு மன்றாம்.

இனி அத்து விதிகளுக்கு விரோதமாகக் குருட்டுச் சித்தாந்த
மொன்று சிருட்டி செய்து கொண்டு, யதார்த்தத்தில் அவர்கள் சித்
தாந்தத்தையே கண்டித்ததுபோலக் கனவு கண்டு, இது வரையில்
எம்மாலும் பிறராலுங் கண்டிக்கப்பட்ட தமது பொய்ச் சித்தாந்த
த்தை வெற்றுரையால் கூறி, இந்தப் பொய்ச் சித்தாந்தத்தைக் கூறிய
வர் பெரியோ ரொன்று பெருமை படுத்திக்கொண்டு "பிள்ளையில்லாத
வீட்டில் கிழவன் துள்ளி விளையாடுகின்றான்" என்பதுபோலக் கொ
ஞ்சங் களித்துத் துள்ளி விளையாடுகின்றார். அது வருமாறுகாண்க:—
"இது காறுங்கூறிய வுண்மைகளால் ஜனனமரணங்களைத் தாங்கிய
பொருள் பிரதி பலன சைதன்னியமாகிய ஜீவனா? அதிஷ்டான
சைதன்னியமாகிய பிரமமா? என்றாசங்கித்த விஷயம் பரிஷ்கரிக்
கப்பட்டு, இரண்டு மல்லவென்று நிச்சயிக்கப்பட்டமையால் இவ்வி
ரண்டு மல்லாததும், அநாதி நித்தியமானதும், கிஞ்சிஜ்ஞத்வாதியிலக்
கணங்களோடுகூடிப் பாசவீக்க முடையதுமான பசு என்னும் ஆன்
மாவே ஜனனமரணப்பட்டு வருந்துந் தன்மைத்து என்று கூறுவர்
பெரியோரென்க." உமாபதி சிவன் அத்வைதத்தினின்றும் விலக்கப்
பட்டமை காரணமாக வைதிக வரம்பழித்து வேதத்தையும் வை
திகத்தையும் அத்வைதத்தையும் தூஷித்து, தாம் புகுந்த மதமான
மாயாவாத மதத்தன்மையை அசூயையால் அத்வைதிகள் பேரில்
ஏற்றி, தாம் என்னமோ மாயாவாதத்தினின்றுந் தப்பித்துக் கொண்ட
தாய்ச் சில கிறுக்கிறுன்றே? அங்ஙனமே சோ. நாயகரும் அத்வை
தத்தினின்றும் விலக்கப்பட்டமை காரணமாக, வேதத்தையும் வை
திகத்தையும் அத்வைதத்தையு மிகழ்ந்து வருபவ ராகலின் அங்ஙு
னமே யிப்போதும் தமது மாயாவாதத்தை மாயாரகித அத்வைதிகள்
பேரில் ஏற்றிக் கிறுக்குகின்றார். அத்வைதமதம் சுருதி யுக்தி அநுபவ

ங்கட் கொத்ததென்றும் துவைதமதம் அங்ஙன மொவ்வாத தென்றும் தெரிந்தாலும் சொல்லமாட்டார். சொன்னால் வெட்கமாயிருக்கும். அதனாலே தான் அத்வைத மதம் முற்றும் நியாயமென வறிந்தும் நியாயமில்லாதுபோல் காட்டிப் பகடித்தனஞ் செய்கின்றனெ ன்க. இதுவரையிலுஞ் செய்த மறுப்புக்கு இவர் அணுவளவாவது நமக்கு நியாயஞ் சொன்னாரா? அதைப்பற்றி நினைக்கின்றாரா? முன்பு சபாபதிநாவலர் பேரில் செய்த கண்டனைக்கு மேல்விழுந்து பதிலெழுதவந்தவர், இவரது ஆக்ஷேபத்துக்குச் சமாதானமாக இவரை நேரே அதாவது இவரது பேரையே சுட்டி யெழுதிய எம்முடனே பேசவாயையேனுந் திறக்கின்றாரா? சபாபதி நாவலர்க்குப் பரிந்து முன்னே வந்தவர், இப்போது அவரைக் கண்டித்தெழுதிய 'வேதாந்த சங்கை நிவாரண' த்துக்குப் பதிலெழுத இறகையேனு மெடுக்கின்றாரா? என் செய்வார் பாவம்! இறகை யெடுக்கப் போனால் கை நடுங்குகின்றது! உடல் நடுங்குகின்றது! வாய்நடுங்குகின்றது! மனமும் நடுங்குகின்றது! யாவும் நடுங்குகின்றன! 'சங்கராசாரியர் அவதாரமகிமை' யில் இவரை நாம் பலவகையிலும் அசையாதபடி இறுக்கிவிட்டோம்! அது அத்துணை யித்துணை யன்று. அவைகளுக்கினியும் பதில பேசவாயைத் திறக்கமாட்டார். இப்படிக்கெல்லா மிருப்பதால் வெட்கத்துக்காற்றாது நானும் வேதாந்தத்தைக் கண்டித்து விட்டேன் என மூடஜனங்களிடத்திற் பெருமையடைய அத்துவிதிகளுடைய சித்தாந்தமல்லாததைச் சித்தாந்தமெனச் சொல்லி உண்மையாய் அத்வைதத்தைக் கண்டித்து விட்டதாகப் போக்குக் காட்டி எழுதினர்.

இவர் பசுவாகிய ஜீவனை அநாதி நித்தியமென்கிறாரன்றோ? எப்படி அநாதி நித்தியம்? சத்தாய் அநாதி நித்தியமா? அசத்தாய் அநாதி நித்தியமா? சதசத்தாய் அநாதி நித்தியமா? சத்தாய் அநாதி நித்திய மென்பாராயின் அநாதி சத்தாகிய சிவன் பரிபூரணராகலின் அந்தப் பரிபூரணத்தில் மற்றொரு சத்துப்பொருளிருத்தல் கூடாது? அசத்தாய் அநாதி நித்தியமென்பாராயின் அசத்தென்பது இல்லை யெனப் பொருள் படுதலால் இல்லாதது நித்தியமாவதும் அநாதியாவதும் மலடிமகன் அநாதி நித்திய னென்பதற் கொப்பாம். சதசத்தாய் அநாதி நித்திய மென்பாராயின் எதிர்மறை யிலக்கணமுள்ள வொருபொருள் இருத்த லெங்கு மில்லை. அன்றி எது சதசத்தோ அது உண்மையில் அசத்தேயாகும். இவ்வளவு லக்ஷணமுள்ள மதத்திற் புத்தி யின்றிப் பிரவேசித்தும் வாயும் கையு மாத்திரம் மிக நீட்சியா யிருக்கின்றன. இவருடைய நவீன மதப்பிரகாரம் ஜீவான்மா அகண்டமாகலின் அது ஒரு தேகத்திற் புகுந்து பிறக்குமென்பதும், தேகத்தை விட்டுஇறக்குமென்பதும் கூடாதகாரியம். இப்படிப்பட்ட இலக்கணமுள்ள மதத்தைக் கற்பித்தவர் ஒருபோதும் பெரியாராகார்; சிறியரேயாவர் என்பதாம். அத்வைதத்தில் இவர்காட்டிய குற்றமில்லை யென்று கூறுவாம். ஜீவனே ஜநநமரணப்பட்டுத் துன்புறுபவன். அதிஷ்டான சைதன்னி

யம் சாக்ஷியாய் விளங்குகின்றமையின் அதற்கு யாதொரு சம்பந்தமு
மில்லை. இதற்கு மாறான இவருடைய பரிஷ்கரிப்பு இவர் மட்டில்வை
த்துக் கொள்ளலாம். அத்வைதிகளுடைய கடைவாயிலில் கூடஎட்டி
ப்பார்க்கயோக்கியமாகாது; எட்டிப் பார்க்குமாயின் சுருதியுக்தி அநுபவ
மென்னும் வாளால் துண்டந்துண்டமாய் வெட்டப்படுமெனவறிந்திடுக.
நெருப்பிற் பஞ்சுபோல நாசமாம்படி முடிவில் இவருடைய எல்
லாப் பொய்க் கதைகளையும் ஒன்று சேர்த்து ஒப்பிவிக்கிறார். அது
இது: "இதனால் பிரமமொன்றே சத்தியம், ஜகஜீவபரங்கள் மிச்சை
யென்று பேசிய பொய்வழக்கு அபஜயமடைந்த தறிக" என்பது
தான். இவருக்கு ஜயமிது, அபஜெய மிதுவெனத் தெரியாது. கீழே
விழுந்தவன் தோற்றதாகவும் மேலே ஏறியவன் வென்றதாகவுங் கொ
ள்வது உலகவழக்கம். இவருடைய வழக்கத்தில் அதை மாற்றிக்கொ
ண்டார். என்? வெட்கத்துக்கு அஞ்சி. சுருதி யுக்தி அனுபவங்க
ளைக் கொண்டு பிரமம் ஒன்றே மெய்யென்றும் ஜகஜீவபரங்கள் பொய்
யென்றும், அநிர்வசனீயமென்றும் பலமுறையிலுந் தாபித்தமையால்,
இவர், யுக்தி அனுபவமுமின்றிச் சுருதியுமின்றி வீணிலுக்கலாய் எழு
தியது செல்லாதென்க. அன்றி இவர் பேசியவைகளெல்லாம் அத்
துவித மதத்தைச் சார்ந்தவையன்று. அவர்களால் மறுத்தவையே
யாம். அந்த மறுப்பு எம்மிடத்தில் கற்றுக்கொண்டதும் எமது மறு
ப்புக்குச் சமாதானங் கூறுதலுமாம். பொய்யென்று பொருள் படும்
படி ஜகஜீவபரங்கள் மிச்சையென்று அத்துவிதிகள் சொல்வதாய்ச்
சொல்லுகின்றார். அவர்கள் அவ்வாறு சொல்லவில்லை யென்று இவ
ருக்கு ஐந்து வருஷமாய்க் காட்டிப் பலபேர் இவரை மறுத்திருக்கின்
றார்கள். அத்வைதிகள், பொய்யன்று, அநிர்வசனீய மென்று சொல்
வதாய்ப் பலமுறை நேர் நேரே இவருக்கு நாமே சொல்லியிருக்க,
அதைமறுக்காமல் மறுபடியும் அவர்களால் கண்டிக்கப்பட்ட பொய்
யைக் கண்டிப்பது அபஜயத்துக் கிடமாம் என்க. இப்படிப்பட்ட
அபஜயம் இவரிடத்தில் நூற்றுக்கணக்காயிருக்க, அபஜயமே யின்றி
முற்றும் ஜயமேகொண்ட அத்வைதிகள் அபஜயமானார்களெனச் சொ
ல்வது அசத்தியர் செய்கையாம். அநிர்வசனீய மென் றிவர்க்குப் பன்
முறை சொல்லியிருக்கும் வசனங்களை முன்னர்க்காட்டி யிருக்கின்
றோம். ஆங்குக் கற்றறிந் தடங்குக.
இவரெழுதிய விஷயங்களெல்லாம் விவேகிகள் கண்டு வெறுப்ப
டைவதை நினையாமல் தெளிந் தின்புற்றதாகவைத்து, "இதனை விவே
கிகள் தெளிந்தின்புற்று வாழ்வாராக" என்றார். இவர் எழுதும் விஷ
யங்களெல்லாம் அவிவேகிகளுங்கண்டு வெறுப்படைவாரென்பதைத்
தாமுணர்ந்திருந்தும் அப்படிப்பட்ட விஷயங்களையே இதுவரையில்
எழுதிவந்தும் விவேகிகள் இதனை யறியார்போலக் காட்டி யெழுது
வது நல்லார் செய்கையன்று.

முற்றிற்று.

தூத்துக்குடி சைவசமாஜத்தார் பிரசுரித்த சிறுபத்திரம் வருமாறு:—

“மாயாவாதிமதத்தில் பிரமம் ஒன்றே சத்தியமென்றும், ஜகஜீவபரங்கள் மித்தையென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. ஜகமென்பது தேகேந்திரியாதிகள். ஜீவனென்பது அத்தேகேந்திரியாதிகளைத் தாங்கிய சேதனன். பரம் என்பது அந்தச்சீவனுக்குத் தேகேந்திரியாதிகளைக்கொடுத்த சேதனன. பொய்யாகிய இம்மூன்றனுள், ஜீவனே ஜநநமரணப்பட்டு வருந்துகின்றான் என்று அம்மதத்தினர் கூறுகின்றனர். இந்த ஜீவன் ஜலசந்திரனாக வுவமிக்கப்பட்டிருக்கின்றனன். ஆகாயத்திலுலாவுஞ் சந்திரன் ஒரு கடத்தினிறைந்த நீரிற் பிரதிபிம்பித்தபோது, அந்த நீரிற்றோன்றிய சாயையே சந்திர பிரதிபிம்ப மென்பதாம். இந்தச் சந்திர பிரதிபிம்பம் கடத்தில் சத்தியமானதன்று. இது அந்தக் கடத்தினின்றுந் தாண்டி வேறுகடத்திற் புகுதமாட்டாது. அந்தக்கடமுடைந்த வழி அத்தோடே போய் விடுவதாம். வேறுகடமொன்று ஆண்டுக்கொணர்ந்திடின் அந்தச் சந்திரபிம்ப மதிற்றோன்று மெனின், வேறுகடத்திற்றோன்றிய சந்திரபிம்பம் மூலசந்திரனுடையதே யன்றி உடைந்த கடபிரதிபிம்ப சந்திரனுடைய தன்று. இதனைப் பரியாலோசிக்கையில், மாயாவாதஞானிகள் மறுபிறப்பை யொப்புதற்கிடமில்லை.

இனி ஒரு புருஷனிறந்ததாகக்கொள்வோம். இவனைச் சல சந்திரன் கட த்வம்ஸத்தி லழிந்து போயினதற்கே யொப்பிடுவர் விவேகிகள். அதனால் அழிந்துபோன சலசந்திரன் மற்றொரு கடத்திற் புகுதமாட்டாதவாறு போலத் தேகமழிந்த புருஷன் வேறு தேகத்திற் புக்கு மறு பிறப்பெய்தினானெனல் கூடாது. அன்றியு மிவன் சொர்க்கநரகங்களை யடைவதுங் கூடாது. ஜநநமரணங்களையும், சொர்க்கநரகங்களையும் ஜீவனுக்கொப்பிய வேதமுதலிய கலைகளை மாயாவாதி களவாடினமையால், அக்கலைகள் தனக்குபகாரஞ்செய்வதும், அல்லது அபகாரஞ் செய்வதுமறியாமல் வெளிவந்து கெடுகின்றான். இவன் குடாகாய மகாகாய முதலிய வுவமைகள் தேடுவதும் இவ்வாறே யழிகின்றனவென்க.

இனி அதிஷ்டான சந்திரனோடுவமித்த பிரமத்தைச் சிறிது விசாரிப்பாம். சந்திரன் கடநீரிற் பிரதிபலித்தது போல் பிரமம் தேகாந்தர்க்கதமாகிய அந்தக் கரணத்திற் பிரதிபலித்ததெனின், சந்திரன் கண்டரூபி. கடநீர்முதலியன அந்தச்சந்திரனுக்கு வேறாயுள்ளவை. பிரமம் அகண்டமாயுள்ளது. உருவமற்றது. அதற்கு வேறா யொரு பொருளுமின்று. இவற்றையுணர்ந்திடுவார் பிரமம் அந்தக்கரணத்திற் பிரதிபலித்தது என்பதை யொப்புவதெங்ஙனம்? இவரிம்மட்டிலமையாமல் அகம்பிரமமென்று கூறுவர். இவ்வாறு கூறும ஒவ்வொரு மாயாவாதியும் தேகச்சுமை சுமந்திருக்கக்கண்டோம். பிரமமோ தேகச் சுமையற்றது. தேகச்சுமைதாங்கிய மாயாவாதி பிரதிபலனப் பிரமமே யன்றி அதிஷ்டானப் பிரமமன்று. அதிஷ்டானப் பிரமமல்லாத தான் அகம

பிரமமென்பது கூடாது. பிரமம் தன்னை அகம்பிரமம் என்று கூறிக்கொள்ளவுமாட்டாது. அவ்வாறு அது கூறிக்கொள்வதற்கு அதற்கு வாக்குமுதலிய கரணங்களு மில்லை. இது நிற்க.

பிரமம் பரிபூரணப்பொருளாகையால், தேகச்சுமைதாங்கிய யாமும் பிரமமாதல் கூடு மென்று அவர் வாதிக்கலாம். பிரமம் பரிபூரணமாயின், தம்மை அவர் பிரதிபலநப்பிரமமென்றது பிழையாம், தமக்குத் தேகச்சுமையை யொப்பியதும், ஜநநமரணங்கள்கூறியதும் மிகையாம். ஜநநம் என்பது ஆன்மா ஒருதேகத்தையடைதலும், மரணம் என்பது அது அந்ததேகத்தை விடுதலுமேயாம். அவ்வாறு கொள்ளுங்கால், அவ்வான்மாவுக்குப் போக்குவரத்துக் கூறப்படும். இவ்வான்மாவைப் பிரமமாகக்கொள்ளுங்கால், பிரமம் போக்கு வரத்தில்லாதது என்னுஞ்சுருதி பொய்ப்பட்டுப்போம். அன்றியும், ஆன்மா வொருதேகத்திலிருந்து ஒன்றை யறிகையில், கண்ணின் வழியாகவறிந்தபோது காதின் வழியாகவும், காதின் வழியாக வறிந்தபோது கண்ணின் வழியாகவும் அறியாது. இரண்டிந்திரியங்களி லொரேகாலத்தில்வியாபியாது என்பது முடிவு. இரண்டிந்திரியங்களில் வியாபித்து ஏககாலத்திலிரண்டுவிஷயங்களை யறியமாட்டாத வான்மா எல்லாவிந்திரியங்களிலு மொக்க வியாபித்து எல்லாவிஷயங்களையு மேககாலத்திலறியுமென்பது கூடாதாகையால், ஆன்மாவைப் பரிபூரணமென்றும், அதுதான் பிரமமென்றுங் கூறுவது அபசித்தாந்தமாய் முடிந்தது. அன்றியும், அவ்வான்மா வொன்றினையறிகையில், இந்திரியங்களின் சம்பந்தங் கேட்கப்படுகின்றது. இந்திரியங்களின் சேர்க்கையின்றி யொன்றினை யறியமாட்டாத வதனைச் சுதந்திரவறிவாகிய பிரமம், அல்லது சிவம் என்றிடலுந் தவறுடைத்தாம். ஒரு தேகத்திலேயே முழுதும் ஏககாலத்தில் ஆன்மா வியாபியாமையால், அது உலகமுழுதும் வியாபித்தது என்று கூறுதற்கிடமே யில்லை. ஆகையால், ஆன்மா வியாபகமுடையதென்பது அழிந்தது.

இனி வியாபகம் அல்லது பூரணம் என்பது ஒன்றாயிருந்த பிரமம் பலவாக விரிந்த நிலைமையென்று அவர் பொருள் விரிக்கின்றனர். அங்ஙனமாயின், அது இப்போது விரிந்த நிலைமையினின்று மின்னு மதிகமாக விரிதலுங் கூடும். அன்றியும், ஒன்றாயிருந்த அது பலவானகாரணம் யாதென்னுமாசங்கையு முண்டாம். பலவென்னும் பிரசங்கமுண்டாகுகையில், ஒன்று கெடுதலும் அவர் மதத்துக் கிடர் தேடியதாம். ஒன்றாயிருந்த வதனை ஒன்று என்று சுட்டியது யாவர்? அதற்கு வேறு யொரு பொருளில்லாதபோது அதனை ஒன்று என்று சுட்டுதற்கிடமேது? சுட்டிய பொருளுண்மையால், அவ்வாறு சுட்டிய பொருளும், சுட்டப்பட்ட பொருளும் ஒன்றாயிடுதல் யாங்ஙனம்? அன்றியும் ஒன்றாயிருந்தது பலவாகிய தெனின், ஒன்றாயிருந்தது கண்டமும், பலவாய் விரிந்தது அகண்டமுமாம். அதனால் அவ்வொன்று பலவாயிடுதற்குப் பூர்வம் அதற்குப் பூரணத்துவ மில்லையாம். இம்

மட்டோ, அவ்வொன்று பலவாய் விரிந்த தென்னுங்கால், அது முன்னர் வியாபித்திராத விடத்திலேயே பின்னர் வியாபித்திடல் வேண்டும். ஒரு வித்து அங்குரித்து விருக்ஷமாகுகையில், அதனது சாகோப சாகைகள் தழைக்கின்றன. அவ்வாறு தழைத்து வியாபிப்பது அது முன்னரில்லாத இடத்திலேயே யாம். அந்த இடம் ஆகாயமே யாம். அவ்வாகாயத்தில் வியாபிப்ப தெல்லாங் கண்டப் பொருள்களாம். அகண்டமாகிய ஆகாயம் தனக்கு வேறாயுள்ளவோரிடத்திற் புதுசாய்ச் சென்று வியாபியாது வேறு இடமில்லாமையால். அன்றியு மவ்வாகாயம் அதற்கு விஜாதியான பலபொருள்களாக விரிந்தது மின்று. இதனைத் தெளிந்தவர்கள் பிரமம் பலவாய் விரிந்தது என்பதை வித்தானது மரமாகிச் சாகோபசாகைகளாய் விரிந்ததற்கே யொப்பிடுவரென்க. மரம் கண்டமா யொழிந்தவாறு பிரமமுங் கண்டமா யொழியத்தக்கதென வொதுக்கவும் பின்னிடையார்கள். மரமானது தான் முன்னர் வியாபியாத விடங்களிலேயே சாகைகளாகத் தழைத்து வியாபித்ததுபோலப் பிரமமுந் தான் முன்னர் வியாபியாத விடங்களிலேயே தழைத்து விரிந்த தெனவுங் கூறமுந்துவார்கள். பிரமம் ஆகாயத்தானத்திலே யுவமிக்கப்படுவதாகையால் ஆகாயம் விரிதற்கு வேறிடமில்லாதவாறுபோலப் பிரமம் பலவாக விரிந்திடற்கு வேறிடமில்லாமை தெளிந்திடுக. அன்றியும், அவ்வாகாயம் தனக்கு விஜாதியான பல பொருள்களாக விரிந்திடாததுபோலப் பிரமமுந் தனக்கு விஜாதியான பல பொருள்களாக விரிந்திடாது என்பதுஞ் சித்தாந்தமாயின துணர்க.

இனிப் பிரமமேயுள்ளது, அஃது வேறு இடத்தில் வியாபித்ததின்று என அவர் வாதிக்கலாம். அப்போது அப்பிரமம் பலவாய் விரிந்த தென்னும் வாதம் நசித்திடும். அஃதொழியினும், மரம் சாகைகளாக வியாபிக்க இடங்கொடுத்த ஆகாயத்தைபோலப் பிரமம் பல பொருள்களாக வியாபிக்க இடங்கொடுத்த வேறொரு பொருளிருப்பும் அப்பிரமத்துடன் அநாதியா யொப்பவேண்டிய பொறுப்பு அவர் தலைமேல் வந்து விடியாமற் போகாது. அங்ஙனமாயின், பொன் பணிகளாயினவாறும், (*பால் தயிராயினவாறும், கடல் அலைகுமிழிகளாயினவாறும்)பிரமம் பலவாயின தன்மையை யாம் கூறுவேமென்று அவர் வாதிக்கலாம். அதுவுங் கூடாது. ஏனெனின், பொன்னைப் பூணாக்கிப் புனைவாரில்லாதபோது அந்தப்பொன் தானே பூணாகமாட்டாது. அன்றியும், பொன் பூணாயின பின்னர்ப் பூணென்பதே யன்றிப் பொன்னென்னும் பெயரதற் குண்டாயினதில்லை. பொன் பூணாயின விடத்தும் அந்தப் பூண் பொன்னின் றன்மையினின்றும் மாறினதில்லை. இப்படியே பாலைத் தயிராக்கிப் பருகுவாரில்லாதபோது

---

* இந்த இருதலைப் பிறைக்குட்பட்டது நாகைநீலலோசனியி லில்லை. நாகைநீலலோசனியைப் பார்த்தே மறுப்பு எழுதப்பட்டது.

அந்தப்பால் தானே தயிராகமாட்டாது. அன்றியும், பால் தயிராயின
பின்னர் தயிரென்பதே யன்றிப் பாலென்னும் பெயரதற்குண்டாயின
தில்லை. பால் தயிராயின பின்னர் அந்தத் தயிர் மீணடும் பாலாயின
தில்லை. இனிக் கடலிற் காற்றில்லாதபோது அலைகுமிழிக ளதிலாக்
கப்பட்டவாறில்லை. காற்று என்று மோயாமையால அலைகுமிழிக
ளதி லடங்கியவா றில்லை. கடலிலுண்டாகிய அலைகுமிழிக ளக்கடனீ
ராயிருப்பதன்றி வேறு பொருளாயினதில்லை. இவ்வுபமான வாக்கு
சங்களோடு பிரமம் பலவாயிடுதலாகிய பரிபூரணத் தன்மையாய விறு
த்த வேலாமையால், பிரமம் உலகுயிர்களாகியும், உலகுயிர்கள் மீண்
டும் பிரமமாகியும் நிலைபெறுதற் கேற்ற தகுதி யமைந்த வுபமானந்தே
டிப் பூர்வ பட்சிகள் தமது மதத்தை நிறுத்திக்கொள்வது ஆவசியக
மாம். எவ்வித வுபமானந் தேடினும் பிரமத்தினது பரிபூரணத்வம்
அவர் கூறியபடி. சித்தியா தென்பது சித்தம். வியாபகம் - வியாப்தி-
வியாப்பியம் என்னுஞ் சொற்பாகு பாடுகளினுணமை யுணராத கொ
டுமையே அவர்க்கு வினைவந்மையை விளைத்த தென்க. இதுநிற்க,

அவர் பூரணத்வங் கூறியது பிரமத்துக் கென்று விவகாரமுண்
டாயினும், அந்தப் பிரமம் ஆன்மாவைத் தவிர வேறில்லை யென்பது
அவரது மதமாய் முடிந்தமையின், அவ்வான்மா விபுவாகாமையை
மேல் யாமுணர்த்திய துணர்ந்தவர்கள் அவர் கூற்று இழிகூற்றென்
றெண்ணி யொதுக்கப் பின்னிடையா ரென்க. இதுகாறுங் கூறிய
வுண்மைகளால் ஜநநமரணங்களைத் தாங்கிய பொருள் பிரதிபலந சை
தன்யமாகிய ஜீவனு? அதிஷ்டாந சைதன்யமாகிய பிரமமா? என்று
சங்கித்த விஷயம் பரிஷ்கரிக்கப்பட்டு, இரண்டு மல்லவென்று நிச்சயி
க்கப்பட்டமையால், இவ்விரண்டு மல்லாததும், அநாதி நித்தியமான
தும், கிஞ்சிஜ்ஞத்வாதி யிலக்கணங்களோடு கூடிய பாசவீக்கமுடை
யதுமாகிய பசுவென்னும் ஆன்மாவே ஜநநமரணப்பட்டு வருந்துந்
தன்மைத்து என்று கூறுவர் பெரியோரென்க. இதனால், பிரமமொ
ன்றே சத்தியம், ஜக ஜீவ பரங்கள் மிச்சை என்று பேசிய பொய்வழ
க்கு அபஜயமடைந்த தறிக. அவரவ்வழக்கினு முறுதியாக நில்லா
மல் மெய்யாகிய பிரமமே உலகுயிர்களாக விரிந்தது என்று வாதந்
தொடுத்து, இஷ்ட விகாதம் பண்ணிக் கொள்ளாமல் பேசுவது பரிதா
பமென்க. இதனை விவேகிகள் தெளிந் தின்புற்று வாழ்வாராக."